# தமிழர் நாகரிகமும் பண்பாடும்

டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A.

Anand.

# தமிழர் நாகரிகமும் பண்பாடும்

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை - 600001

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L., Ph.D.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு : 1959
எட்டாம் பதிப்பு: ஜூலை, 1975

விலை : ரூ. 4-50

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்

# முதற் பதிப்பின் முன்னுரை

**தமிழர் நாகரிகமும் பண்பாடும்** என்னும் பெயரோடு வெளிவரும் இந்நூல், 'தமிழக வரலாறும் பண்பாடும்' என்னும் தலைப்பிற்கு உரிய நான்காம் பகுதியாகும். மூன்றாண்டு இளங்கலை வகுப்புக்கும் தமிழ் முதுகலை வகுப்புக்கும் 'தமிழக வரலாறும் பண்பாடும்' என்னும் புதிய பாடம் உரியது.

இந்நூலில் தமிழர் சமுதாய வரலாறு, பொருளாதார வரலாறு, தமிழகத்தில் சமணம்—பௌத்தம்— இசுலாம் — கிறித்தவம் இவற்றின் தொண்டு, தமிழர் நாகரிகம், பண்பாடு, அயல்நாடுகளில் தமிழர் செல்வாக்கு என்னும் பல தலைப்புக்களில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

இம்முறையில் வெளிவந்துள்ள **முதல் தமிழ் நூல்** இதுவே. இது கல்லூரி மாணவர்க்கும் தமிழக நலத்தில் நாட்டமுடைய ஒவ்வொரு தமிழர்க்கும் தேவைப்படும் நூலாகும்.

**மா. இராசமாணிக்கம்**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழகம் | ... | 5 |
| 2. | சமுதாய வரலாறு | ... | 10 |
| 3. | பொருளாதார வரலாறு | ... | 17 |
| 4. | தமிழகத்தில் சமண சமயச் செல்வாக்கு | ... | 29 |
| 5. | தமிழகத்தில் பௌத்த சமயச் செல்வாக்கு | ... | 36 |
| 6. | இசுலாத்தின் செல்வாக்கு | ... | 42 |
| 7. | கிறித்தவ சமயத்தார் தொண்டு | ... | 50 |
| 8. | அயல்நாடுகளில் தமிழர் செல்வாக்கு | ... | 61 |
| 9. | தமிழர் நாகரிகம் I | ... | 78 |
| 10. | தமிழர் நாகரிகம் II | ... | 90 |
| 11. | தமிழர் நாகரிகம் III | ... | 101 |
| 12. | தமிழர் பண்பாடு I | ... | 112 |
| 13. | தமிழர் பண்பாடு II | ... | 124 |

# 1. தமிழகம்

## வட எல்லை

இன்றுள்ள தமிழ் இலக்கண இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். அஃது இற்றைக்கு ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்னலாம். அதன் பாயிரத்தில் **பனம்பாரனார்** என்ற புலவர்,

> **" வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத்**
> **தமிழ்கூறு நல்உலகம் "**

என்று கூறியுள்ளார்.

> **" வேங்கடத் தும்பர் மொழிபெயர் தேயம்"**

என்று சங்க நூற்பாடல்கள் செப்புகின்றன. கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலும் வேங்கடப் பகுதியே தமிழகத்தின் வட எல்லையாக இருந்தது என்பது, "அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாக" என்னும் **சேக்கிழார் வாக்கைக்** கொண்டு உணரக் கிடக்கிறது. காளத்தி மலைக்கு வடக்கே தமிழ் வழக்கு இல்லை என்பது சேக்கிழார் கூற்று. எனவே, தென்னிந்தியாவில் வேங்கடத்தை ஒட்டினாற் போலக் கிழக்கு மேற்காக ஒருகோடு கிழிக்கப்படின், அக்கோட்டிற்குத் தென்பாற்பட்ட நிலம் முழுவதும் ஏறத்தாழப் **பண்டைத் தமிழகம்** என்று சொல்லலாம்.

## தென் எல்லை

பனம்பாரனார் கூறிய எல்லைகளில் குமரி ஒன்று. அது குமரியாறு பாயப்பெற்ற, இன்றைய குமரிக்குத் தென்பாற்

பட்ட நிலத்தைக் குறித்தது என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டனர்.

> " பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்று வரும் சிலப்பதிகார அடிகளால் இன்றைய குமரி முனைக்குத் தெற்கே குமரியாறு பாயப் பெற்ற பெருநிலப் பகுதி இருந்தது என்பது தெரிகிறது. அதன்கண் ஏழ்பனை நாடு, ஏழ்தெங்க நாடு என நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறியுள்ளனர். அந்த நிலப்பகுதியில் பாண்டியர் தலைநகரான மதுரை இருந்தது. அதன்கண் முதற்சங்கம் நிகழ்ந்தது என்று இறையனார் களவியல் இயம்புகின்றது.

அந்நாடு அழிந்த பின்பு கிழக்குக் கரை ஓரத்தில் இருந்த கபாடபுரம் என்பது பாண்டியர் தலைநகரமாயிற்று. அங்கு இடைச் சங்கம் இருந்தது. அதுவும் கடல் கோளால் அழிந்தது. இஃது இறையனார் களவியல் கூறும் செய்தி.

இங்ஙனம் கபாடபுரமும் அழிந்த பிறகுதான் இன்றைய மதுரை பாண்டியர் தலைநகரம் ஆயிற்று. அப்பொழுதுதான் இன்றைய குமரிமுனை தமிழகத்தின் தென் எல்லை ஆயிற்று. ஏறக்குறைய 1800 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த சிறுகாக்கை பாடினியார் என்ற பெண்பாற் புலவர், வடக்கில் வேங்கடத்தையும் ஏனைய மூன்று பகுதிகளில் கடலையும் எல்லையாகக் கூறினார். இதனால் கடைச் சங்க காலத்துத் தமிழகத்தின் தென் எல்லை குமரிமுனை என்பது பெறப்பட்டது.

## மூன்று தமிழ் நாடுகள்

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பவை தொன்றுதொட்டு இருந்துவரும் மூன்றுநாடுகளாகும். இவற்றுள் **சேரநாடு** என்பது, இன்றைய கொச்சி—திருவாங்கூர் நாடுகளுடன் மலையாள மாவட்டம் சேர்ந்த நிலப்பகுதியாகும். **சோழநாடு** என்பது, சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள வெள்ளாற்றை வட எல்லையாகவும் புதுக்கோட்டைக்கு அருகேயுள்ள தென் வெள்ளாற்றைத் தெற்கெல்லையாகவும் கொண்டுள்ள நிலப்பகுதியாகும். அஃதாவது, இன்றைய தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களிலும் தென்ஆற்காடு மாவட்டத்தின் தென்பகுதியிலும் உள்ள நிலப்பகுதியாகும். **பாண்டியநாடு** என்பது இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்ட நிலப்பகுதியாகும்.

## சிற்றரசுகள்

சோழநாட்டிற்கு வடக்கே திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு **மலையமான்கள்** ஒரு சிறு நிலப் பகுதியை ஆண்டு வந்தனர். அப்பகுதிக்கு வடக்கே இருந்த தொண்டை நாட்டில் திரையர்கள் என்ற **தொண்டைமான்கள்** ஆண்டுவந்தனர். இவ்வாறே கொங்கு நாட்டில் **ஓரி, குமணன்** முதலிய சிற்றரசர்கள் சிறு நிலப் பகுதிகளை ஆண்டுவந்தனர். மலை நாட்டைப் **பாரி** ஆண்டு வந்தான். பழநி மலைப் பகுதியை **வேள் ஆவி** ஆண்டுவந்தான். பொதிய மலைநாட்டை **வேள் ஆய்** ஆண்டுவந்தான். இவ்வாறு தமிழகத்திலிருந்த சிற்றரசர் பலராவர். இவர்கள் முடியரசர்க்கு அடங்காமல் வாழ்ந்த காலமும் உண்டு.

## மூன்று நாட்டு விவரங்கள்

சங்க காலம் பரந்துபட்ட காலம். அக்காலத்தில் ஒரு சமயத்தில் மூவேந்தருள் சேரன் சிறப்புற்றிருந்தான்.

மற்றொரு சமயத்தில் சோழன் மேம்பட்டு விளங்கினான்; வேறொரு சமயத்தில் பாண்டியன் பெருமை பெற்று விளங்கினான்; ஒவ்வொருவனும் மற்ற இருவரையும் அடக்கி ஆள நினைத்த காலங்களும் உண்டு. சேரருள் செங்குட்டுவனும், சோழருள் கரிகாலனும், பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சிறப்புற்ற வேந்தராவர். இந்த முதன்மை வெறி இம்மரபுகள் அழியும் வரையில் பின் நூற்றாண்டுகளிலும் நிலைத்திருந்தது என்பதை வரலாறு தெரிவிக்கின்றது.

கடைச் சங்க காலம் என்பது ஏறத்தாழ கி. மு. 300 முதல் கி. பி. 300 வரை என்று சொல்லலாம். கி. பி. 300-க்குப் பிறகு தமிழகத்தின் பெரும்பகுதி (தொண்டை, சோழநாடுகள்) பல்லவர் என்ற புதிய மரபினர் ஆட்சிக்கு உட்பட்டது. ஏறத்தாழக் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழர் தம் பேரரசைத் தோற்றுவித்தனர். கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் சோழப்பேரரசர் தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்டனர்; இலங்கை முதலிய பல தீவுகளைப் பிடித்து ஆண்டனர்; வடஇந்தியாவிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் தங்கள் செல்வாக்கை நிலை நாட்டினர்.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்கு ஓழிந்தது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தென்னாட்டு அரசுகளை அழித்தார். பின்பு தமிழகம் விசய நகர வேந்தர் ஆட்சிக்கு உட்பட்டது. பின்பு விசய நகர வேந்தரின் பிரதிநிதிகளாக இருந்து மதுரை, தஞ்சாவூர், செஞ்சி என்னும் இடங்களை நாயக்க மன்னர் ஆண்டு வந்தனர். பின்னர் இங்கிலப் பகுதிகள் கருநாடக நவாபுகளின் ஆட்சிக்கு உட்பட்டன. தஞ்சையில் மகாராட்டிரர் சிறிது காலம் ஆண்டனர். பின்பு தமிழகம் வெள்ளையர் ஆட்சிக்கு உட்பட்டது.

## சிறந்த நகரங்கள் முதலியன

சங்க காலத்தில் சேரநாட்டுத் தலைநகரம் மேற்குக் கடற்கரையில் இருந்த வஞ்சிமா நகரம் என்பது; முசிறி என்பது துறைமுக நகரம். கொங்கு நாடு சேரர்க்கு உட்பட்டபோது கொங்குக் கரூர் சேரர் தலைநகரங்களுள் ஒன்றாக இருந்தது. சேரநாட்டு ஆறுகளுள் மிகச் சிறந்தது பெரியாறு என்பது.

சோழ நாட்டில் சங்க காலத்தில் உறையூர் தலைநகராய் இருந்தது; சங்க இறுதிக் காலத்தில் காவிரிப்பூம் பட்டினம் தலைநகராயும் துறைமுக நகரமாயும் இருந்தது. பல்லவர் காலத்தில் கும்பகோணத்தை அடுத்த பழையாறை என்பதே தலைநகராய் இருந்தது; பின்பு சிறிது காலம் தஞ்சாவூர் கோநகரமாய் விளங்கியது. கி. பி. 11, 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் கங்கை கொண்ட சோழபுரம் கோநகராய் விளங்கியது. சோழப் பேரரசர்க்குக் காஞ்சி புரமும் ஒரு தலைநகராய் விளங்கியது. சோணாட்டு ஆறு களுள் தலை சிறந்தது காவிரியாகும். காவிரியாறே சோழ நாட்டு மக்களுக்குச் செவிலித்தாய்.

பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை. புகழ் பெற்ற துறைமுக நகரம் கொற்கை என்பது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் (பழைய) காயல் துறைமுக நகராயிருந்தது. தொண்டியும் ஒரு துறைமுக நகரம். பிற்காலத்தில் தூதுக் குடி (தூத்துக்குடி), காயல்பட்டினம் என்பன துறைமுக நகரங்களாய் விளங்கின.

சங்க காலத்தில் பொதுசா (இன்றைய புதுச்சேரியை அடுத்த கடற்கரைப்பகுதி), சோபட்டினம் (மரக்காணம்), மாமல்லபுரம் என்பன சோழநாட்டிற்கு வடக்கே துறை முகப் பட்டினங்களாயிருந்தன. பல்லவர் காலத்தில் மயிலாப்பூர், மாமல்லபுரம் என்பன சிறந்த துறைமுக நகரங்களாக விளங்கின. பல்லவர் காலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் நாகப்பட்டினம் சிறந்த துறைமுக நகரமாய் விளங்கியது.

# 2. சமுதாய வரலாறு

## சங்க காலத்தில்

தொல்காப்பியத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு வகையினர் குறிக்கப்பட்டுள்ளனர். கல்வி, கேள்வி, ஒழுக்கம், உயிர்களிடத்து ஒத்த அன்பு இவற்றையுடைய பெருமக்கள் **அந்தணர்** எனப்பட்டனர்.

> "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

என்னும் குறள் இவ்வுண்மையை விளக்கும். அந்தணர் அரசர்க்கு அறிவுரை கூறும் சான்றோராய் இருந்தனர் என்று கொள்ளலாம்.

அரசு செலுத்தியவன் அரசன். அவன் மரபினர் அரச மரபினர் என்று பெயர் பெற்றனர். வாணிகம் செய்தவன் வாணிகன் அல்லது வணிகன் எனப் பெயர் பெற்றான். மழை வெள்ளத்தை அடக்கிப் பயிர்த் தொழிலில் பயன்படுத்திக் கொண்டவன் வெள்ளாளன் (வெள்ளத்தை ஆள்பவன்) எனப்பட்டான். இவன் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு பயிர்த் தொழிலைக் கவனித்து வந்ததால் தாளாளன் (முயற்சியுடையவன்) என்றும் பெயர் பெற்றான். இப்பெயர் தொழில்பற்றி வந்ததே தவிரப் பிறவி பற்றி வந்ததன்று. பண் — இராகம்; பாண்—பாட்டு; பாணன்-பாடுபவன். இசைப் புலவர்கள் பாணர் எனப்பட்டனர். பறை—பரையு (மலையாளம்) —அறிவி, தெரிவி (Inform); பறையன்—அறிவிப்பவன்

(தெரிவிப்பவன்); அரசாங்க ஆணையைக் குடிமக்களுக்குப் பறையறிந்து தெரிவிப்பவன். இது அலுவல் பற்றி வந்த பெயர். துடி—உடுக்கை போன்ற இசைக் கருவி. துடி கொட்டுபவன் துடியன் எனப்பட்டான். பள்ளம்-வயல்கள்; மேட்டு நிலத்தில் அமையாமல் பள்ளத்திலே அமைபவை. இங்கு வேலை செய்யும் மக்கள் பள்ளர் எனப்பட்டனர். இது நிலம்பற்றி வந்த பெயர். மறம்—வீரம்; மறவன்—வீரன். இது பண்பு பற்றி வந்த பெயர்.

தமிழகம் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. இவற்றுள் இடைப்பட்டது முல்லை நிலம். அந்நிலத்தில் பசும் புல் வெளிகள் உண்டு. அங்கு ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு பால், தயிர் முதலியவற்றை விற்பனை செய்து வாழ்ந்து வந்த மக்கள் முல்லை நிலத்தார். இடை நிலத்தார் இடையர் எனப்பட்டனர். இவை நிலம்பற்றி வந்த பெயர்கள். குன்று—சிறுமலை; மலைப்பகுதிகளில் வாழ்ந்தவர் 'குன்றவர்' எனப்பட்டனர். அவர் நாளடைவில் 'ன்' கெட்டுக் 'குறவர்' எனப்பட்டனர். இவையும் நிலம் பற்றிய பெயர்களே. வணிகன் என்பது பொதுப் பெயர். அப்பெயர் அவரவர் விற்கும் பொருளோடு சேர்த்து வழங்கப்பெற்றது. உப்பு விற்றவன் உப்பு வாணிகன் என்றும், அப்பம் விற்றவன் அப்பவாணிகன் என்றும், பிட்டு விற்றவன் பிட்டு வாணிகன் என்றும் பெயர் பெற்றனர்.

குறிஞ்சி நில மக்கள் பொருப்பன், வெற்பன் சிலம்பன், குறவன், கானவன், குறத்தி, கொடிச்சி எனப் பெயர் பெற்றனர். பாலை நில மக்கள் விடலை, காளை, மீளி, எயினன், மறவன், மறத்தி, எயிற்றி என்று அழைக்கப்பட்டனர். முல்லை நில மக்கள் தோன்றல், இடையன், ஆயன், மனைவி, கிழத்தி, இடைச்சி, ஆய்ச்சி

என்று வழங்கப்பட்டனர். மருத நிலத்து மக்கள் ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி, உழவன், உழத்தி எனப் பெயர் பெற்றனர். நெய்தல் நில மக்கள் சேர்ப்பன், புலம்பன், நுளையன், பரவன், அலவன், பரத்தி, நுளைச்சி, அலத்தி எனப் பெயர் பெற்றனர். ஒவ்வொரு நில மக்களுள்ளும் தலைமக்கள், பொதுமக்கள் என்னும் இரண்டே பிரிவுகள் உண்டு. அரசன், குடிமகன் என்னும் பிரிவுகளைப் போல இப்பிரிவுகள் அமைந்தவை.

வண்ணம்—அழகு. அழுக்கு ஆடைகளை அழுக்குப் போக்கி வண்ணம் (அழகு) செய்பவன் வண்ணத்தான் அல்லது வண்ணான் எனப் பெயர் பெற்றான். சலவைத் தொழிலாளிக்கு 'வண்ணத்தான்' என்ற பெயர் வழக்கு இன்றும் மலையாள நாட்டில் இருக்கிறது. உயிரைத் துரும்பாக மதித்துப் பல கல் தொலைவில் ஆழம் தெரியாத கடலில் கட்டு மரங்களைச் செலுத்தி மீன்களைப் பிடித்து வாழ்ந்த நெய்தல் நிலத்தான் கடலரசன் எனப் பாராட்டப் பட்டான். அவனே கடற்கரையில் வாழ்ந்த காரணத் தால் கரையான்—கரையாள்—கரையாளன் என்னும் பெயர்களைப் பெற்றான். பரவை—கடல்; பரவன்—கடலன்; கடலருகில் வாழ்பவன், கடலில் வாழ்பவன். கடலைக் கொண்டு வாழ்பவன் பரவன் எனப் பெயர் பெற்றான். மலையில் வாழ்ந்தவன் மலையன் என்றும், காட்டில் வாழ்ந் தவன் காடன், காடவன் என்றும் ஊரில் வாழ்ந்தவன் ஊரன் என்றும் பெயர் பெற்றனர். ஊரை ஆண்டவன் ஊராளி எனப்பட்டான். சேனைத்தலைவர் நாயன் எனவும், நாயகன் எனவும், தெலுங்கில் நாயடு என்றும், மலையாளத்தில் நாயன் (நாயர்) என்றும் பெயர் பெற்றனர். பலவகை ஆடை களுள் தேவாங்கு என்பது ஒருவகை ஆடை; அதனை நெய்தவர் தேவாங்கர் எனப்பட்டனர். செக்கு ஆட்டி எண்ணெய் எடுத்தவன் செக்கான் எனப்பட்டான்.

கடலில் முக்கி (மூழ்கி)த் தொழில் செய்தவன் **முக்குவன்** எனப்பட்டான். வேட்டையாடியவன் **வேட்டுவன்** எனப் பட்டான். கஞ்சம்-பித்தளை. கஞ்சத்தால் வேலை செய்தவன் **கஞ்சான்** எனப்பட்டான். இராசிகளைக் கணித்துச் சோதிடம் கூறியவன் **கணியன்** எனப்பட்டான். வேல் ஏந்தி வெறியாடியவன் **வேலன்** எனப் பெயர் பெற்றான். செருப்புத் தைத்தவன் **செருமான்** எனப்பட்டான். குறிஞ்சி நில மகன் **குறிச்சியான்** என்று அழைக்கப்பட்டான்.

## இடைக் காலத்தில்

இவ்வாறு சங்ககாலத்து நிலம், தொழில், பண்பு, சிறப்புப்பற்றி உண்டான பெயர்கள் காலப் போக்கில் சாதிபற்றிய பெயர்களாக மாறிவிட்டன. ஆயினும் சாதியற்ற சமணத்தையும், பௌத்தத்தையும் எதிர்த்துப் போராடிச் சைவ சமயக் குரவர்களும் நாயன்மார்களும் தங்கள் சமயங்களில் சாதி வேறுபாடுகள் நுழையாதபடி பார்த்துக் கொண்டனர். "புலையராக இருப்பினும் உண்மைச் சிவனடியாராக இருப்பின்,யான் தொழத் தகும் கடவுள் அவரே", என்று திருநாவுக்கரசர் தமது திருப்பதிகத்தில் கூறியுள்ளார். இவ்வாறே ஆழ்வாரும் பாடியுள்ளனர். நாயன்மார்கள் காலமாகிய பல்லவர் காலத்தில் இன்று உள்ள கடுமையான சாதி வேறுபாடுகள் இல்லை. மயிலாப்பூர்—சிவநேசச் செட்டியார் தம் மகளுக்கு உயிர் கொடுத்த ஞானசம்பந்தரை அப் பெண்ணையே மணந்து கொள்ளும்படி வேண்டினர் என்று பெரிய புராணம் பேசுகின்றது. சம்பந்தர் பிராமணர். அவரை, வணிகர் தம் மகளை மணந்து கொள்ளும்படி வேண்டியபோது, 'யான் இவளை எழுப்பியதால் இவள் எனக்கு மகளாவாள். ஆதலால் இவளை மணத்தல் முறையன்று' என்று சம்பந்தர் பதிலளித்தார். இங்குச் சாதிபற்றிய பேச்சே எழாமை நோக்கத்தக்கது.

குருக்கள் மரபைச் சேர்ந்த சுந்தரர் கணிகையர் மரபில் வந்த பரவையாரையும் வேளாளர் மரபைச் சேர்ந்த சங்கிலியாரையும் மணந்து கொண்டமை பெரிய புராணத்துள் காணப்படுகிறது. வேளாளரான கோட்புலி நாயனார் தம் பெண்கள் இருவரையும் மணந்து கொள்ளு மாறு சுந்தரரை வேண்டினார் என்பதும் நோக்கத்தக்கது. இவற்றை நோக்க, நாயன்மார் காலத்துச் சைவருள் சாதி வேறுபாடுகள் வேரூன்றவில்லை என்பதும், சாதியைவிடச் சமய வளர்ச்சியே பெரிதாகக் கருதப்பட்டு வந்தது என் பதும் நன்கு புலனாகும்.

பிற்பட்ட சோழர் காலத்தில் சாதிகள் நன்கு வேரூன்றி வளர்ந்தன. தொழில் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம் பிறவி பற்றிய சாதிப் பெயர்களாகக் கருதப்பட்டன. சமுதாயத்தில் இன்னின்ன வகுப்பார் காலில் செருப்பணிந்து கொண்டு இன்ன தெருக்கள் வழியே நடக்கக்கூடாது, இன்னின்ன வகுப்பார் தெருக் களில் நுழையவே கூடாது, இன்னின்ன வகுப்பார் மாடி வீடு கட்டலாகாது—அங்ஙனம் கட்ட வேண்டுமாயின் அரசாங்க இசைவு வேண்டும், இசைவு பெற்றுக் கட்டினாலும் இன்னின்ன வகுப்பார் இத்துணைச் சன்னல் களுக்கு மேல் வைக்கக் கூடாது என்ற வரையறைகள் ஏற்பட்டன.

மலையாள நாட்டில் இன்ன வகுப்பாருக்கு முன் இன்ன வகுப்பார் 72 அடி தூரத்தில் நின்று பேச வேண்டும், 60 அடி, 48 அடி, 26 அடி தூரத்தில் நின்று பேச வேண்டும் என்ற வரையறை நெடுங்காலமாக இருந்தது. இன்றும் மிகச் சிறிய கிராமங்களில் இவ்வழக்கம் இருந்து வருகிறதாம். இவ்வாறு சேய்மையில் நின்று பேசுவது தமிழகத்தும் இருந்திருக்க வேண்டும் என்பதை ஆண்டான்—அடிமை நின்று பேசுவதிலிருந்து நாம் உய்த்துணரலாம்.

கடல்கடந்த நாடுகளில் தம் செல்வாக்கைப் பரப்பித் தென்னிந்தியாவை ஒரு குடைக் கீழ் வைத்தாண்ட சோழர்கள், சமயத் துறையிலும் போர்த் துறையிலும் தங்கள் கருத்தினைச் செலுத்தினரேயன்றிச் சமுதாய நலத் துறையில் செலுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் காலத்தில்தான் சைவ, வைணவ வேறுபாடு மிகுதிப் பட்டது. வைணவ சமயத்தைப் பரப்பிய இராமாநுசர். உயிருக்கு அஞ்சி (சைவருக்கு அஞ்சி) மைசூர் நாட்டுக்கு ஓடிவிட்டார். தில்லைக் கோவிந்தராசர் உருவச் சிலை கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழனால் கடலில் தூக்கி எறியப்பட்டது. இச் செயலைப் புகழ்ந்து ஒட்டக்கூத்தர் உலாவில் பாடியுள்ளார். கல்வெட்டுக்களும் இக்கொடுஞ் செயலைக் குறிக்கின்றன. இவ்வாறு சோழப் பேரரசர் காலத்தில் சாதி வேறுபாடு களும் சமய வேறுபாடுகளும் தமிழகத்தில் தலைவிரித் தாடின.

சங்ககாலத்தில் வாழ்ந்த சாதியறியாத தமிழ்ச் சமுதாயம் மௌரியர் படையெடுப்பை எதிர்த்து வென்றது; பேரரசு செலுத்திய அசோகன் காலத்திலும் தன்னாட்சி பெற்று விளங்கியது. ஆனால், கி. பி. 14-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழர் மாலிக்காபூர் படை யெடுப்பை எதிர்தது நிற்க முடியாமல் தலை தாழ்ந்தனர். சாதி வேறுபாடுகளால் தமிழ்ச் சமுதாயம் ஒற்றுமை யிழந்து உயிர்ப்பு அற்று இருந்தமையே இத்தாழ்வுக்குரிய காரணங்களுள் தலை சிறந்ததாகும். சமுதாய ஒற்றுமை இன்மையால் தமிழகம் ஹொய்சலருக்கும் முகலிம் களுக்கும், விசயநகர வேந்தர்க்கும், நாயக்கருக்கும், கருநாடக நவாபுகளுக்கும், இறுதியாக வெள்ளையருக்கும் அடிமைப்பட்டது.

**பிற்காலத்தில்**

இங்ஙனம் சாதிவேறுபாடுகளாலும் சமயப் போராட்டங்களாலும் சமுதாய ஒற்றுமை குலைந்ததைக் கண்டமுற்றும் துறந்த சித்தர்கள் மனம் வருந்தினர்.

" ஆண் சாதி பெண் சாதி ஆக இருசாதி
வீண்சாதி மற்ற எல்லாம்—குதம்பாய்
வீண்சாதி மற்ற எல்லாம் "

என்ற குதம்பைச் சித்தர் பாடல் நோக்கத்தக்கது. பெரும்பாலான மக்கள் சமுதாய இழிவினாலும் பொருளாதாரக் குறைவினாலும் துன்புறுதலைக் கண்ட தாயுமானவர் மனம் வருந்தி,

" எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாது வேறொன் றறியேன் பராபரமே "

என்று கூறியிருத்தல் காண்க. பின்வந்த இராமலிங்க அடிகள் சாதி மதம் பற்றிய வேறுபாடுகளையும், இவற்றை வலியுறுத்தப் போந்த சாத்திரங்களையும் வன்மையாகக் கண்டித்துப் பாடிய பாடல்கள் பல. பின் வந்த விவேகாநந்தர் சாதிகள் ஒழிந்தால்தான் இந்தியா உருப்படும் என்று அழுத்தமாக அறைந்தார். இரவீந்திரநாத தாகூர், காந்தியடிகள் போன்ற பெருமக்களும் இதனையே வலியுறுத்தினர். காந்தியடிகள், பெரியார் ஈ.வெ. ரா., திரு. வி.க போன்ற பெருமக்களின் உழைப்பாலும், பிரசாரத்தாலும், ஆங்கில அறிவினாலும் சாதிக் கட்டுப்பாடு சிறிது சிறிதாகத் தளரத் தொடங்கியது. இன்று இந்திய அரசாங்கம் சாதியற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்று கூறுகிறது. பல நூற்றாண்டுகளாக விலங்குகளிலும் கீழாக நடத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று அரசாங்க உதவியால் இலவசக் கல்வி பெற்று வாழ்க்கையில் உயர்வைப் பெற்று வருகின்றனர். 'நீ என்ன சாதி?' என்று கேட்கச் சிறிது அறிவுடையவனும் இன்று கூசுகின்றான். இன்றைய சமுதாயத்தில் கலப்பு மணங்கள் பெருகி வருகின்றன. சட்டங்களாலும் ஒழிக்கப் பெறாத சாதி வேறுபாடுகள் கலப்புத் திருமணங்களால்தான் ஒழிக்கப்படக் கூடும் என்பது அறிஞர் கருத்தாகும்.

# 3. பொருளாதார வரலாறு

ஒரு நாட்டில் பயிர்த் தொழில், கைத்தொழில், வாணிகம், பண்டமாற்று, நாணயச் செலாவணி என்னும் இவற்றைத் தன்னகத்தே கொண்டதுதான் **பொருளாதாரம்** என்பது. எனவே, இவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றி இங்கு அறிய வேண்டுவது இன்றியமையாததாகும்.

## பயிர்த் தொழில்

சங்க காலத்தில் தமிழரசர் பயிர்த் தொழிலுக்காக ஆறுகளிலிருந்து வாய்க்கால்களை வெட்டுவித்தனர்; காவிரி போன்ற ஆறுகளில் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி, வேண்டும் நிலங்களுக்கு வாய்க்கால்கள் வழியாக நீரைச் செலுத்தினர். திருவள்ளுவர் உழவைப்பற்றி ஓர் அதிகாரம் பாடியுள்ளார். "உழவன் சோம்பியிருத்தல் ஆகாது. சோம்பல் கொண்ட உழவனைப் பார்த்து நில மகள் சிரிப்பாள். ஒரு பலம் புழுதி கால் பலமாகக் காயும் படிச் செய்து சிறந்த எரு இட்டு நிலத்தைப் பண்படுத்த வேண்டும். உழவரே உலக மக்களையும் உயிர்களையும் காப்பவர்." ஆதலால் **உழுதொழில் நாட்டில் முதல்தரமானது** என்பது வள்ளுவர் கருத்து. மழை பெய்யாத காலங்களில் உழவு சிறக்காது. ஆதலால் அப்பொழுது உழவரிடம் நில வரி வாங்குதல் ஆகாது என்று புலவர்கள் அரசர்க்கு அறிவுறுத்தியுள்ளனர். குடிகளை வருத்தி அரசாங்க அதிகாரிகள் வரி வாங்கக் கூடாது என்பதும் புலவர் அறிவுரையாகும். கரிகாலன் முதலிய சோழ மன்னர்கள் பழைய ஆறுகளை வளப்படுத்தினர்; புதிய ஆறுகளை உண்டாக்கினர். அவற்றுள் **வீரசோழன், முடிகொண்டான்**

என்பன குறிப்பிடத்தக்கவை. சோழ நாட்டில் மிகப் பிற்பட்ட காலத்தில் அரசனாக இருந்த திருமலைராசன் என்பவன் பெயராலும் ஓர் ஆறு வெட்டப்பட்டது.

பல்லவர் ஆண்ட தொண்டை நாட்டுப் பகுதியில் ஆற்று வளம் குறைவு. அதனால் பல்லவர்கள் பெரிய ஏரிகளை வெட்டுவித்தனர். அவை ஏரி என்றும் தடாகம் என்றும் பெயர் பெற்றன. 'மகேந்திர தடாகம்', 'மாற்பிடுகு ஏரி' என்பன குறிப்பிடத் தக்கவை. ஏரியில் தேங்கும் மழை நீர் வாய்க்கால்கள் வழியாக வயல்களுக்குக்கொண்டு செல்லப்பட்டது. பாண்டிய நாட்டிலும் பெரிய ஏரிகள் அமைக்கப்பட்டன. அவை குளம் என்றும் கண்மாய் என்றும் பெயர் பெற்றன. சேரநாட்டில் பெரியாறு முதலிய ஆறுகள் பாய்ந்து நாட்டை வளப்படுத்தின. இந்த நீர்ப் பாசன வசதிகளால் நெல் முதலிய கூல வகைகள் நன்கு பயிர் செய்யப்பட்டன. நீர்வளமுள்ள பகுதிகளில் ஆண்டுக்கு மூன்று போகமும் பிற பகுதிகளில் நிலத்தின் வளத்திற்கு ஏற்றபடி இரு போகமும் ஒரு போகமும் பயிர் செய்யப்பட்டன.

தமிழ் மக்களுக்குத்தேவையான உணவுப்பொருள்கள் நீங்கலாக எஞ்சிய பொருள்கள் தரைவழியாகவும் கடல் வழியாகவும் பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப் பட்டு விற்கப்பட்டன.

சங்க காலத்திற்குப் பிறகு வந்த பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பிற்பட்ட காலங்களிலும் பயிர்த்தொழில் சிறந்தே வந்தது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் அணைக்கட்டுகள் பெருகின; நீர்த் தேக்கங்கள் மிகுந்தன. வீணாகக் கடலில் கலக்கும் பல ஆறுகளின் நீர், அணைக்கட்டுகளில் தேக்கப்பட்டு வளம் குறைந்த பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றது. மேட்டூர் அணை, பெரியாற்று

நீர்த்தேக்கம், பவானி சாகர், மணிமுத்தாற்று நீர்த்தேக்கம் முதலியவை குறிப்பிடத்தக்கவை. உயிர்களுக்கு நெல்லும் நீரும் உயிர் என்பர். அவை இரண்டையும் குறைவின்றி வழங்க நாடாண்ட மன்னர்கள் நல்லமுறையில் முயன்று வந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

## நெய்தல் தொழில்

உணவுக்கு அடுத்தது உடை. எனவே, தமிழகத்தில் நெய்தல் தொழில் குற்றமற்ற தொழிலாகவும் சிறந்த தொழிலாகவும் கருதப்பட்டது. ஆண் துணை இல்லாத பெண்கள் பருத்தி நூல் நூற்பதில் ஈடுபட்டிருந்தனர் என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் தமிழகத்தில் பலவகை ஆடைகள் நெய்யப்பட்டன, கோசிகம், பீதகம், நுந்துகில், சித்திரக் கம்பி, பொன்னெழுத்து, தேவாங்கு என முப்பதுக்கு மேற்பட்டவகை ஆடைகள் கடைகளை அலங்கரித்தன. ஆடைகளில் பூத் தொழில் செய்யும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது. பாம்பின் தோல் புகை, பனி, அருவிநீர், பாலாவி இவற்றை உவமையாகக் கூறத்தக்க மிக மெல்லிய ஆடைகளும் நெய்யப்பட்டன. 'இழை ஓடிய வழி இது' என்று கூற முடியாதபடி அவ்வளவு நுண்மையுடையனவாக ஆடைகள் நெய்யப்பட்டன என்று பொருநராற்றுப்படை புகல்கின்றது.

நூலாலும் பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. எலி மயிர் கொண்டும் ஆடைகள் நெய்யப்பட்டன. நீண்ட அளவினதாக நெய்யப்படும் ஆடை, பிறகு தனித் தனியாக அறுக்கப்படும். இவ்வாறு அறுக்கப்பட்ட ஆடை 'அறுவை' எனப்பட்டது. துண்டிக்கப்பட்ட சிறு பகுதி 'துண்டு' எனப்பட்டது. துணிக்கப்பட்ட பகுதி 'துணி' எனப் பெயர் பெற்றது.

அரசாங்க அலுவலர் அக்காலத்தில் சட்டை அணிந்திருந்தனர்; சட்டைக்கு 'மெய்ப்பை' என்பது அக்காலப் பெயராகும்; 'கஞ்சுகம்' என்றும் அதற்குப் பெயருண்டு. சட்டைகள் இருந்தன என்பதனுல், அவற்றை வெட்டித் தைக்கும் தையற்காரரும் இருந்தனர் என்பது தெளிவு. தமிழகத்து மிக மெல்லிய ஆடைகள் மௌரிய நாட்டுக்கு அனுப்பப்பட்டன என்று சாணக்கியரது பொருள் நூல் புகல்கின்றது.

நெய்தல் தொழில் தொன்றுதொட்டு இருந்துவரும் சிறப்புத் தொழிலாகும். அத்தொழிலை நாட்டு மக்கள் நல முற வளர்த்தனர். ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு நெசவில் கைதேர்ந்த சௌராட்டிரர் தமிழகத்தில் குடியேறினர். அப்போது நாடாண்ட நாயக்க மன்னர்கள் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து அவர்தம் தொழிலை ஊக்குவித்தனர். சங்க கால முதல் இன்றளவும் தமிழகத்து நெசவுத் தொழில் நிலைத்து இருப்பது போலவே நெய்யப்பெற்ற ஆடைகள் வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் நிலைபெற்று வந்திருக்கிறது. இலங்கை, பர்மா, மலேயா முதலிய கீழை நாடுகளுக்குத் தமிழகத்து ஆடைகள் இன்றளவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கைத்தறி நெசவுடன் இப்பொழுது ஆலை நெசவும் முன்னேறி வருகின்றது.

## அணிகலத் தொழில்

சங்க நூல்களில் அரசரது முடி (கிரீடம்), அரசமா தேவியின் முடி, பலவகைக் கழுத்தணிகள், கையணிகள், மேகலை, பலவகை மோதிரங்கள் முதலிய அணிவகைகள் குறிக்கப்பட்டுள்ளன. பொன் மட்டும் கொண்டு செய்யப் பட்ட நகைகளும், பொன்னில் கல்பதித்துச் செய்யப்பட்ட நகைகளும் என இருவகை நகைகள் குறிக்கப்பட்டுள்ளன. முதல் வகையைச் செய்தவர் உருக்குத் தட்டார் எனவும் பின்

னதைச் செய்தவர் **இரத்தினப்பணித்தட்டார்** எனவும் குறிக்கப்பட்டனர். அரண்மனை நகைகளைச் செய்வதற்கென்று பொற்கொல்லர் பலர் இருந்தனர். அவர்தம் தலைவன் அரச மரியாதைகளுடன் விளங்கினான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. அக்காலத்தின் அணிவகைகளையெல்லாம் மாதவியின் அலங்காரத்தைக் கூறும் சிலப்பதிகாரத்தில் சிறக்கக் காணலாம். தலைமுதல் கால் வரையும் பெண்கள் பல வகை அணிகளை அணிந்திருந்தனர். அவை பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டவை. பாண்டிய நாடு முத்துக்குப் பெயர் பெற்றது. அம்முத்துக்கள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. அம்முத்துக்களைப் பல வடங்களாகக் கோத்துத் தமிழ்ப் பெண்கள் அணிந்திருந்தனர். சங்கு அறுக்கப்பட்டு வளையல்களாகவும் மோதிரங்களாகவும் செய்யப்பட்டன. பாண்டியன் கோப்பெருந்தேவியின் காற்சிலம்பில் முத்துப் பரல்கள் இருந்தன. கண்ணகியின் சிலம்பில் மாணிக்கப் பரல்கள் இருந்தன. அச்சிலம்புகள் வியத்தகு வேலைப்பாடுகளுடன் இருந்தன என்று சிலப்பதிகாரம் பாராட்டுகின்றது. அப்பாராட்டைக் காண, அக்காலத்தில் பொற்கொல்லத் தொழில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைத் தெளிவாக அறியலாம். பெண்கள் இடையில் அணிந்து வந்த நகை **மேகலை** எனப்படும். மணிகள் பதித்த மேகலை **மணிமேகலை** எனப் பெயர் பெற்றது. அது ஏழு கோவை, எட்டுக்கோவை, பதினறு கோவை, பதினெட்டுக்கோவை, முப்பத்திரண்டுக் கோவை உடையதாய் இருந்தது.

## பிற தொழில்கள்

மரவேலை செய்யும் தச்சர், இரும்பு வேலை செய்யும் கொல்லர், வெண்கலப் பொருள்களைச் செய்யும் கன்னர், செப்பு வேலைக்காரர், மண் சுண்ணம்பு முதலியவற்றால்

பல உருவங்களை அமைக்கும் சிற்பிகள், மண்பாண்டத் தொழிலாளர், தையற்காரர், தோல்வேலை செய்பவர், துணி, கெட்டி என்பவற்றால் பூ, வாடாத மாலை, பொய்க் கொண்டை முதலியவற்றைச் செய்யும் தொழிலாளர் எனப் பலவகைத் தொழிலாளர் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. மதுரைக் கோட்டை மதில் மீது பலவகை இயந்திரப் பொறிகள் வைக்கப்பட்டிருந்தன என்பதை நோக்கும் பொழுது, அவற்றைச் செய்து தந்த தொழிலாளர் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

**வாணிகம்**

நாட்டின் உணவு வளத்திற்கு உழவர் காரணராய் இருத்தல் போலவே பொருளாதார வளத்திற்கு வணிகர் சிறந்த காரணராவர். நாட்டில் ஓரிடத்தில் உண்டாகும் விளைபொருள்களை, அவை அருகில் கிடக்கும் பிற இடங்களுக்கு அனுப்புவதும், கொண்டு சென்று விற்பதும், அவற்றைத் தத்தம் ஊர்களில் விற்றலும் வணிகர் தொழிலாம். இத்தொழில் முறையால் நாட்டில் செல்வ வளம் கொழிக்கும். இதுபற்றியே சமுதாயத்தில் வணிகர் சிறப்பிடம் பெற்றனர். எனவே, திருவள்ளுவர் இவர்களைத் '**தாழ்விலாச் செல்வர்**' என்றும், சாத்தனார், '**மன்னர் பின்னோர்**' என்றும் கூறினர். இவர்கள் கரி மீதும் பரி மீதும் ஏறிச் செல்லும் உரிமை பெற்றிருந்தனர். வாணிகத்தை வளம்பெற நடத்திய வணிகர் '**எட்டி**' என்ற பட்டத்தையும் **பொற்பூவையும்** அரசர் வழங்கப் பெற்றனர்.

**வணிகர்** என்பது பொதுச் சொல். அப்பம் விற்றவன் முதல் நவரத்தினம் விற்றவன் ஈறாக அனைவருமே வணிகர் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப் பெற்றனர். சங்க கால வணிகர் அளவுக்குமேல் கொடாமலும்,

கொடுக்கும் அளவிற்கு ஏற்பப் பணம் பெறுதலும் ஆகிய அறவழி வாணிகத்தையே செய்து வந்தனர் என்று பட்டினப்பாலை பகர்கின்றது.

**கடல் வாணிகம்**

சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி, முசிறி முதலிய தமிழகத் துறைமுகங்களில் அயல் நாட்டுக் கப்பல்கள் வந்து தமிழகத்துப் பொருள்களை ஏற்றிச் சென்றன. மயில் தோகை, மிளகு, யானைத் தந்தம், மணப்பொருள்கள் முதலியவை சேரநாட்டிலிருந்து ஏற்றுமதியாயின. முத்துக்கள், மிக மெல்லிய ஆடைகள் பாண்டிய நாட்டிலிருந்து ஏற்றுமதியாயின. உணவுப் பொருள்கள், ஆடைகள் முதலியன சோழ நாட்டிலிருந்து ஏற்றுமதியாயின. பட்டாடைகள், பல வகை இயந்திரப் பொறிகள், கண்ணாடிப் பொருள்கள், பாவை விளக்கு, குடிவகைகள் முதலியன வெளிநாடுகளிலிருந்து தமிழகத்தில் இறக்குமதியாயின. ரோமப் பேரரசர்கள் காலத்தில் இக் கடல் வாணிகம் நன்முறையில் நடைபெற்றது. இவ்வுண்மைகளைப் **பிளினி, தாலமி, பெரிபுளூஸ்** என்னும் நூலின் ஆசிரியர் வரைந்துள்ள குறிப்புக்களாலும் சங்க நூல்களாலும் அறிகின்றோம்.

சங்க காலத்திற்குப் பிறகு, பல்லவர் காலத்தில் **மயிலாப்பூர், மாமல்லபுரம், நாகப்பட்டினம்** என்பவை சிறந்த துறைமுக நகரங்களாக விளங்கின. அப்போது பர்மா, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், இலங்கை முதலியவற்றோடு தமிழகம் கடல் வாணிகத் தொடர்பை மேற்கொண்டிருந்தது. பிற்காலச் சோழர் காலத்திலும் இக் கடல் வாணிகம் சிறந்தோங்கியது. சோழர்களது கடற்படை இக்கடல் வாணிகத்தைக் காத்தது. சீனரும் அராபியரும் இவ்வாணிகத்தில தொடர்பு கொண்டனர்.

சோழருக்குப் பின் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தமிழகத்தோடு வாணிகம் செய்தனர். அந்த வாணிக உறவால் தமிழகத்தின் சில சில பகுதிகள் பிரெஞ்சுக்காரருக்கும் பெரும் பகுதி ஆங்கிலேயருக்கும் இறுதியில் அடிமைப்பட்டன. 1947-இல் இருந்துதான் அடிமைத்தளை அகன்று நாடு உரிமை பெற்றது. இன்று தமிழகம் பல வகை ஆடைகளைக் கீழை நாடுகளுக்கு அனுப்புகின்றது. இவ்வாறு சங்க காலம் முதல் தமிழர் கடல் வாணிகத்தில் மிகச் சிறந்து விளங்கி வருகின்றனர்.

தமிழ் வணிகர் தாம் சென்ற இடங்களிளெல்லாம் தமது வாணிகத்தைப் பெருக்கியபோது, தம் நாகரி கத்தையும் பண்பாட்டையும் விதைத்து வந்தனர். எகிப்தில் வழங்கும் பல கதைகள் நம் திருவிளையாடற் புராணக் கதைகளுடன் ஒன்றுபட்டுள்ளன. அரேபியக் கதைகள் சில பெரிய புராணக் கதைகளோடும் பிறவற் றோடும் ஒன்றுபடுகின்றன. சுமேரியர் கதைகள் சில பாரதக் கதைகளோடு ஒன்றுபடுகின்றன. பிரமிட் கோபுரங்களின் அடியில் அமைந்துள்ள அரசர் அரசியர் சமாதிகளின் அமைப்பும், திருச்சுற்றுக்களின் அமைப் பும், அத்திருச் சுற்றுக்களிலுள்ள அரசர் அரசியர் பரிவாரங்களின் சமாதிகளும், தமிழகத்துக் கோவில் களின் அமைப்பையும் திருச்சுற்றுக்களின் அமைப்பை யும் ஒத்துள்ளன. தமிழகத்து லிங்க வணக்கம் சுமேரியா, எகிப்து, மால்ட்டா, கிரீஸ் முதலிய இடங்களில் காணப் படுகின்றது. இவை விரிப்பின் பெருகும்.

சங்க காலத்தில் தோணிகள், படகுகள், கப்பல்கள் என்பன மூவரசர்க்கும் சொந்தமாக இருந்தன. குதிரை முக ஓடம், யானை முக ஓடம், பாய்மரக் கப்பல்கள் என்பன சங்க நூல்களில் பேசப்படுகின்றன. பெரிய நகர அளவில்

அமைந்த கப்பல்களும் இருந்தனவாக அறிகிறோம். காற்றின் உதவியால் இயங்கிய அக்காலக் கப்பல்களில் பல நூறு மக்கள் (ஒவ்வொரு கப்பலிலும்) ஏறிச் சென்றனர். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தமிழகத்துத் துறைமுகத்திலிருந்து சென்ற ஒரு கப்பலில் யுவான் சுவாங் என்ற சீன வழிப்போக்கன் கீழை நாடுகளுக்குச் சென்றான். அக் கப்பலில் பல நூறு மக்கள் இருந்தனர் என்று அவன் குறித்துள்ளான். கடல் நீரைக் காய்ச்சி நன்னீராக்கி அம் மக்கள் பருகினர் என்று அவன் குறிப்புக் கூறுகின்றது.

சோழப் பேரரசர்கள் சீனப் பேரரசருடன் வாணிக உறவு கொண்டிருந்தனர். சீனத் தூதுவர் தமிழகத்திற்கும் தமிழ்த் தூதுவர் சீனத்துக்கும் சென்று வந்தனர். இவை யெல்லாம் தமிழகத்துக் கடல் வாணிகச் சிறப்பை விளக்கு வனவாகும். தமிழ் நாட்டுத் துறைமுக நகரங்களில் கலங்கரை விளக்கங்கள் அமைந்திருந்தன. [கலம்-கப்பல். கரை-கரையை நோக்கி அழைக்கும், விளக்கம்—விளக்கு (Light House).] இவை காவிரிப்பூம்பட்டினம், மாமல்ல புரம், முசிறி, தொண்டி, கொற்கை முதலிய இடங்களில் இருந்தன. சங்ககால முதலே அராபியர் தமிழகத்தோடு குதிரை வாணிகம் செய்து வந்தனர். குதிரைகள் சேர நாட்டுத் துறைமுகங்களிலும், சோழ, பாண்டிய நாட்டுத் துறைமுகங்களிலும் நூற்றுக் கணக்கில் இறக்கு மதியாயின. பிற்காலச் சோழர் காலத்தில் இக் குதிரை வாணிகம் மிக்க வளர்ச்சியடைந்தது என்று மார்கோ போலோ என்ற வெனிஸ் நகர யாத்திரிகர் கூறியுள்ளார்.

## உள்நாட்டு வாணிகம்

தமிழகத்துப் பொருள்கள் ஆந்திரம், கருநாடகம் முதலிய வட மாகாணங்களில் கொண்டு சென்று விற்கப் பட்டன. கோவேறு கழுதைகள் மீதும் எருதுகள் மீதும் பண்டப் பொதிகள் கொண்டு செல்லப்பட்டன. கூடச் சென்ற வணிகர் ஒவ்வோர் ஊரிலும் பேரிகை அடித்துத்

தம் வருகையை ஊரார்க்கு அறிவித்து, அவர்களோடு வாணிகம் செய்தனர். அதனால் 'பேரி(கை) செட்டிமார்' எனப்பட்டனர். வழிப்பறிக் கொள்ளையால் தம் பொருள்கள் கொள்ளை போகாதபடிக் காக்க வணிகர்கள் போர்ப் பயிற்சி பெற்றிருந்தனர்; போர்க் கருவிகளையும் கொண்டு சென்றனர். வட இந்தியாவிலும் தமிழர் வாணிகம் வளர்ச்சி அடைந்தது. இவ்வாறே கங்கைச் சமவெளியில் உண்டான பொருள்களும் பிறபகுதிகளில் உண்டான விளைபொருள்களும் செய்பொருள்களும் தமிழகத்தில் விலையாயின. சங்க காலத்தில் சிறந்திருந் தாற்போலவே இவ்வுள்நாட்டு வாணிகம் பின் நூற்றாண்டு களிலும் சிறந்திருந்தது.

**தமிழ்க்கணக்குத்** தனிப்பட்டது. தமிழ் எழுத்துக்களே **எண்களாக** விளங்கின. க-1; ரு-5; சW-10; உW-20; ௩-3 என்று இவ்வாறு எழுத்தே எண்ணுதல் உரோமர் மொழி யில்தான் உண்டு. (v-5; x-10) வீசம் $\frac{1}{16}$—இவ்வாறு பல்லாயிரத்தை உணர்த்தும் பின்னங்கள் தமிழில் உண்டு. அவை இப்பொழுது வழக்கொழிந்துவிட்டன. இத் துறையில் ஆராய்ச்சி நிகழ்த்தினால், பழந்தமிழரது கணக்குப் புலமையைக் கண்டறியலாம்.

## பண்டமாற்று

பண்டைக் காலத்தில் நாணயங்கள் கண்டறியப் படுவதற்கு முன் ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்கும் முறையே வழக்கில் இருந்தது. இது **பண்டமாற்று முறை** (பண்டத்தை மாற்றி வேறொன்றைக் கொள்ளும் முறை). மலைநாட்டு மக்கள் தங்கள் மலைபடு பொருள்களை மருத நிலத்தில் விற்று நெல்லும் பிறவும் பெற்றுக்கொள்வர். முல்லை நிலமக்கள் பால், தயிர் முதலியவற்றைக் கொடுத்து, நெய்தல் நிலத்தில் மீன், உப்பு முதலியவற்றைப் பெறுவர். காயவைத்த மீனையும்

புதிதாகப் பிடித்த மீனையும் கொடுத்து, நெய்தல் நில மக்கள் மருத நிலத்தில் நெல் முதலிய பொருள்களைப் பெறுவர். இம்முறையே பண்டமாற்று முறை எனப் படும்.

**நாணயங்கள்**

நிலையான அரசுகள் ஏற்பட்ட பிறகு—பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் கண்டறியப்பட்ட பின்பு நாணயங்கள் அச்சிடப்பெற்றன. பொன் என்றும் காசு என்றும் அவை பெயர் பெற்றன. சங்ககாலக் காசுகளைப் பரிசோதிக்கும் அதிகாரிகள் அக்காலத்தில் இருந்தனர். அந்த அதிகாரிகளுக்கு **வண்ணக்கர்** என்பது பெயர் (வண்ணக்கர்—நோட்டக்காரர், பரிசோதகர்).

சங்க காலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் அரசாங்க முத்திரையிடப் பெற்ற பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் வழக்கில் இருந்தன. அவற்றின் மீது நந்தி, சிங்கம், கப்பல் முதலியவை பொறிக்கப் பட்டிருந்தன. 'துளைப்பொன்' என்பது மாற்று குறை யாதது என்பதை அறிவிக்கும் துளையிடப்பெற்ற பொற் காசு ஆகும். போர்க்காலங்களில் மாற்றுக் குறைந்த நாணயங்களும் அச்சிடப்பெற்றன. அவற்றை மாற்றும் போது சில்லறை குறைவாகக் கிடைத்தது. இதனைத் தேவாரத்தால் அறிகிறோம். 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்பது தேவாரம் (வாசி—வட்டம்).

பிற்காலச் சோழர் காலத்தில் பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் பெருவழக்கில் இருந்தன. அக்காசுகள் காவிரிப்பூம் பட்டினம், கொற்கை முதலிய அழிந்து பட்ட பண்டைத் துறைமுக நகரங்களிலிருந்து கிடைத் துள்ளன. சோழர் நாணயங்களில் புலியும், பாண்டியர் நாணயங்களில் மீனும், சேரர் நாணயங்களில் வில்லும் சிறப்பிடம் பெற்றுள்ளன. அயல் நாட்டு வாணிகத்தில்

பொன் நாணயங்கள் மிகுதியும் பயன்பட்டன. சோழர் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட நாயக்கர், முகலிம்கள், கிழக்கிந்தியக் கம்பெனியார் முதலியவர் காலங்களில் வெளியிடப் பெற்ற நாணயங்கள் பலவாகும். இவற்ரேடு ரோம நாட்டு நாணயங்களும் பிற நாட்டு நாணயங்களும் கிடைத்துள்ளன. இவை கடற்கரை யோரங்களில்—பழைய துறைமுக நகரப் பகுதிகளில் இன்றும் கிடைத்து வருகின்றன. புதுச்சேரியை அடுத்துள்ள கடற்கரையில் அரிக்கமேடு, மூர்த்திக் குப்பம், நசிராம்பட்டினம், பழைய காயல், கொற்கை, வஞ்சிமா நகரம் முதலிய இடங்களில் இவை கிடைக்கின்றன. உள் நாட்டு கடைகளிலும் வெளிநாட்டு வாணிகத்திலும் நாணயச் செலவாணி நடைமுறையில் இருந்தது என்று இந்நாணயங்களைக் கொண்டு கருதுவது பொருத்தமாகும்.

அரசாங்கப் பண்டாரம் (Royal Treasury) அக்காலத்தில் இருந்தது. கோவில் பண்டாரம் (Temple Treasury) என்று ஒவ்வொரு பெரிய கோவிலிலும் இருந்தது. அங்கெல்லாம் நாணயங்கள் மிகுதியாக இருந்தன என்று கருதுதல் பொருத்தமாகும். இந்தியாவில் தமிழ்நாடு செய்த உள் நாட்டு வாணிகத்தாலும், வெளிநாட்டு வாணிகத்தாலும், பொருள் வளம் ஓரளவு சிறந்திருந்தது என்று கருதலாம். அரச பண்டாரத்திலும், மீனாட்சி அம்மன் கோவில் போன்ற பெரிய கோவில் பண்டாரத்திலும் பொன்னும் மணிகளும் மிகுந்த அளவில் இருந்தன என்பதை மாலிக் காபூர் படையெடுப்பு விவரங்களால் அறிகின்ருேம்.

## 4. தமிழகத்தில் சமண சமயச் செல்வாக்கு

### சமணர் தொண்டு

*பிறப்பினால் உயர்வு காணும் மனநிலை சமணத்தில் இல்லை.*

**" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்."**

*என்பது குறள். சமணர்* **உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி** *என்னும் நான்கு தானங்களைச் செய்வதையே பேரறமாகக் கொண்டனர். (1) அன்னதானம் அறங்களுட் சிறந்தது என்பதை நாடெங்கும் பரப்பினர். (2) அடைக்கலம் வந்தவரைப் பாதுகாத்தல் வற்புறுத்தப்பட்டது. [கவுந்தியடிகள் மாதரிக்கு அடைக்கலச் சிறப்பை வற்புறுத்தியது சிலப்பதிகாரத்தில் காணப்படும்.] (3) சமண முனிவர் மருத்துவமனைகளை அமைத்துப் பொதுமக்களுக்கு மருந்துகள் வழங்கினர்; ஊர்ச் சிறுவர்களுக்குத் தம் பள்ளிக்கூடத்திலேயே கல்வி கற்பித்தனர்: நாட்டு மக்களது மொழியைப் பயின்று அம்மொழியிலேயே தம் சமயப் பிரசாரத்தை மேற்கொண்டனர். அம்மக்கள் மொழியிலேயே இலக்கண இலக்கிய—நிகண்டு நூல்களைச் செய்து, அழியாப் புகழ் பெற்றனர். இந்த அரிய வழிகளையே கிறித்தவப் பாதிரிமார் பின்பற்றித் தம் சமய வளர்ச்சியைச் செய்து, உலகெங்கும் வெற்றி பெற்று வருகின்றனர்.*

## கலை வளர்ச்சி

சமணர் தருக்கத்தில் பெயர் பெற்றவர்; சமய வாதத்தில் வல்லவர். எனவே, தருக்கக் கலை அவர்களால் நன்கு வளர்ச்சி பெற்றது. திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், நீலகேசி, யசோதர காவியம், சிந்தாமணி, மேருமந்திர புராணம், திருக் கலம்பகம் முதலிய இலக்கிய நூல்களும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, நன்னூல், நேமி நாதம் முதலிய இலக்கண நூல்களும், திவாகரம் சூளாமணி முதலிய நிகண்டு நூல்களும், சமணர் செய்தவை. நீலகேசி சமயவாதத்தை உணர்த்தும் நூல். மலைக் குகைகளில் வாழ்ந்த சமண முனிவர்கள் அக்குகைகளில் ஓவியங்களைத் தீட்டினர். நாம் இன்றும் இவற்றைக் காணலாம். இவர்களால் ஓவிய, சிற்பக் கலைகள் வளர்ச்சியுற்றன என்று கூறுதல் பொருத்தமாகும்.

## ஊன் உண்ணாமை

வேதகால ஆரியர் தம் தெய்வங்களுக்கு ஆடு, மாடு, குதிரை முதலியவற்றைப் பலியிட்டனர். அவற்றைத் தாமும் உண்டனர். சங்க காலத் தமிழரும் ஊன் உண்டனர். ஆனால், காலப்போக்கில் பிராமணரும் பிறரும் ஊன் உண்ணுதலை அறவே நீக்கிவிட்டனர். பௌத்தர் ஊன் உணவுதவர்; ஆயினும், கொல்லாமையை மட்டுமே நன்கு வற்புறுத்தினர். ஊன் உண்ணாமையை மிகுதியாக வற்புறுத்தவில்லை. கொல்லாமை, ஊன் உண்ணாமை ஆகிய இரண்டையும் சமணரே வற்புறுத்தினர்; இவற்றைத் தம் சமயத்தில் சிறப்புக் கொள்கையாகவும் கொண்டனர்.

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா வுயிரும் தொழும்."

என்பது சமணர் அறவுரை. இக் கொள்கை பிற்காலத்தில் சைவரிடத்தும் வைணவரிடத்தும் படிப்படியாக பரவியது என்பது பொருத்தமாகும். சைவ, வைணவ சமயங்கள்

செல்வாக்கடைந்து, சமணம் மங்கிய காலத்தில் சமணர் சைவ, வைணவங்களில் சேர்ந்து கொண்டனர். அவர்கள் அங்கிலேயிலும் தமது ஊன் உண்ணாமை என்னும் பழக்கத்தைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கலாம். அதனாலும் சைவ, வைணவ சமயங்களில் ஊன் உண்ணாமை இடம் பெற்றிருக்கலாம்.[1]

## தீபாவலி

வர்த்தமான மகாவீரர் கடைசி சமண தீர்த்தங்கரர். அவர் பாவாபுரி அரசன் அரண்மனையில் தங்கி, அங்குக் கூடியிருந்த மக்களுக்கு இரவு முழுவதும் அறவுரைகள் செய்தார். நெடுநேரம் விழித்த காரணத்தால் மக்கள் அவ்விடத்திலேயே உறங்கி விட்டனர். மகாவீரரும் தாம் இருந்த இடத்திலேயே வீடு பேற்றை அடைந்தார். பொழுது விடிந்தது; எல்லோரும் விழித்து எழுந்தனர். மகாவீரர் வாழ்வு நீத்ததைக் கண்டனர். அரசன் சான்றோருடன் கூடி யோசித்தான்; மகாவீரரை மக்கள் ஆண்டுதோறும் நினைத்து வழிபடுவதற்காக அவர் வீடு பெற்ற நாளில் ஒவ்வொரு வீட்டிலும் விளக்குகள் ஏற்றி வைத்து விழாக் கொண்டாடும்படி ஏற்பாடு செய்தான் [தீபம்—விளக்கு; ஆவலி—வரிசை; தீபாவலி—விளக்குகளின் வரிசை]. மகாவீரர் விடியற்காலையில் வீடு பேறடைந்தார். ஆதலால், தீபாவலி விடியற்காலையில் மக்களால் கொண்டாடப் பெறுகிறது. இந்த உண்மை நிகழ்ச்சி மறைக்கப்பட்டு, அறிவுக்குப் பொருத்தமற்ற நரகாசுரன் கதை பிற்காலத்தில் இந்துக்களால் கட்டிவிடப்பட்டது என்பது அறிஞர் கருத்து.

சமணசமயம் செல்வாக்கிழந்த காலத்தில் சமணர்கள் சைவ, வைணவங்களைத் தழுவினர். அங்கிலேயிலும் தீபாவலியைக் கொண்டாடினர். அப்பழக்கம் பிற சமயத்

1. மயிலை. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 76—77

தாரிடையும் நாளடைவில் புகுந்துவிட்டது. சமண சமயத்தைச் சேர்ந்த மார்வாரிகள், குஜராத்தியர் முதலி யோர் இன்றும் தீபாவலியை மிகச் சிறப்பாகக் கொண் டாடுவதே இதற்கு ஏற்ற சான்றாகும்.[2]

## ஐயனார்

இத்தெய்வம் பௌத்தம், சமணம் ஆகிய இரண் டுக்கும் உரியது. சமணர் கோவில்களில் இத்தெய்வத்தை இன்றும் காணலாம். பிரம்மயட்சன், சாத்தனார் முதலிய பெயர்களில் இத்தெய்வம் வணங்கப்படுகிறது. பௌத்த ஐயனாருக்கு ஊர்தி குதிரை; சமண ஐயனாருக்கு ஊர்தி யானை. ஐயனார் கோவிலில் இன்றும் இந்துக்கள் வணங்கு கின்றனர். ஐயனார், சாஸ்தா, ஹரிஹர புத்திரன் என்று பெயர்களையிட்டு அழைக்கின்றனர்.[3]

## அறுபத்துமூவர்

சமணப் பெரியார் 'திரிசஷ்டிசலாகா புருஷர்' எனப்படு வர் [திரிசஷ்டி—அறுபத்து மூன்று; சலாகா புருஷர் பெரியார்]. சைவப் பெரியார் சுந்தரரது திருத்தொண்டத் தொகைப் படியும், திருத்தொண்டர் புராணப்படியும் 72 பேர். ஆனால், அவருள் ஒன்பதின்மர் தொகையடியார். **அறுபத்து மூவர் தனி அடியார்.** தொகையடியாரைக் கழித்துச் சைவர்கள் சிவனடியார் அறுபத்துமூவர் என்றே கூறி வருகின்றனர். அறுபத்து மூவர்விழா இன்றும் நடை பெற்று வருகின்றது. சமணப் பெரியார் தொகையைக் கொண்டே சைவப் பெரியார் தொகையைக் குறித்திருக் கலாம் என்று கருதுதல் பொருத்தமாகும்.

சமணர் தங்கள் 63 பெரியார் வரலாறு கூறும் நூலை ஸ்ரீபுராணம் என்று கூறுவர். சைவரும் சேக்கிழார் இயற்

2. மயிலை. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 79—80
3. ஷை பக். 93.

றிய திருத்தொண்டர் புராணத்தை ஸ்ரீபுராணம் என்று பழங்காலத்தில் வழங்கி வந்தனர் என்பது திருவொற்றியூர்க் கல்வெட்டால் தெரிகிறது.

சமண சமய சாத்திரங்களுக்குச் 'சித்தாந்தம்' என்னும் பெயருண்டு. சைவரும் தமது சமய சாத்திரத்தைச் 'சித்தாந்தம்' என்றே கூறுகின்றனர்.[4]

## சித்தர் வணக்கம்

சித்தர் என்பவர் சமணர் வணக்கத்திற்குரியவர். சமணர் சித்தர் வணக்கம் செய்த பின்னரே படிப்பர்; கல்வி கற்பிப்பர். சமணமுனிவர் இருப்பிடம் 'பள்ளி' எனப் பட்டது. அதில் இருந்த கூடத்தில் அவர்கள் ஊர்ப்பிள்ளைகட்கு எழுத்துக்களையும் நூல்களையும் கற்பித்து வந்தனர். அதனால் அக்காலப் பிள்ளைகள் படித்த இடம் 'பள்ளிக் கூடம்' எனப்பட்டது. அப்பெயர் இன்றளவும் கல்வி கற்பிக்கும் இடங்களுக்கு வழங்கப்பட்டு வருவது கண்கூடு. சமணர் சித்தரை வணங்கிக் கல்வி கற்பிக்கத் தொடங்கியது போலவே சைவ, வைணவரும் "அரிநமோத்து சித்தம்" என்று கூறி வந்தனர். இன்றும் சிற்றூர்த் திண்ணைப்பள்ளி ஆசிரியர்கள் இதனைக் கூறுகின்றனர்.[5]

## வடக்கிருத்தல்

இது 'சல்லேகனை' என்று சமணத்தில் பெயர் பெறும். மனக்கவலையை உண்டாக்கும் இடையூறு, தீராத நோய், மிகுந்த மூப்பு இவற்றுள் ஒன்றுண்டான போது சல்லேகனை செய்து உயிர் துறக்கலாம் என்பது சமணர் கொள்கை.

சல்லேகனை செய்பவர் தருப்பைப் புல்மீது வடக்கு நோக்கி வீற்றிருந்து உயிர் போகும் வரையில் உணவு

4. மயிலை. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 94—96

5. ஷை. பக். 97

கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பது விதி. சமண தீர்த்தங்கரர் அனைவரும் வடக்கே வீடுபேறு அடைந்தனர். ஆதலால் வடதிசை புண்ணிய திசை என்பது சமணர் கொள்கை. "புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்" என்பது சிலப்பதிகாரம்.

சேரமான் பெருஞ்சேரலாதன் முதுகில் வெண்ணிப் போரில் புண் ஏற்பட்டது. அவன் அபபுறப் புண்ணிற்கு நாணி வடக்கிருந்து உயிர் நீத்தான். தன் மக்களிடம் வெறுப்புக் கொண்ட கோப்பெருஞ்சோழன் காவிரியாற்றின் இடைக்குறையில் வடக்கிருந்து உயிர்விட்டான். கபிலர் தம்மை ஆதரித்த பாரி வள்ளல் இறந்த பிறகு திருக்கோவலூரில் வடக்கிருந்து உயிர் நீத்தார். எனவே, இப் பழக்கத்தைச் சமணரிடமிருந்து சங்ககாலத் தமிழர் கற்றனர் என்பது தெளிவு.

இங்ஙனம் கொல்லாமை, ஊன் உண்ணாமை, உண்ணா நோன்பிருந்து உயிர்விடுதல் முதலிய பல வழக்கங்களும், ஐயனார் வழிபாடு போன்ற வழிபாடுகளும், தீபாவலி போன்ற கொண்டாட்டங்களும் சமண சமயத்தால் தமிழகத்தில் பரவின என்று கருதுதல் பொருத்தமாகும்.[6]

## தீமைகள்

1. **பிற சமய வெறுப்பு :** *பிற சமயத்தாரைக் கொடுமைப்படுத்துதல்—(1) திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்டமை, விஷம் கலந்த உணவு தந்தமை, யானையை ஏவிக் கொல்லச் செய்தமை, கல்லைக் கட்டிக் கடலில் தள்ளியமை, (2) திருஞான சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைத்தமை.*

2. **பெண்களை இழிவு செய்தமை :** *பெண்கள் முற்றும் துறத்தல் இயலாது; முற்றும் துறந்தவரே வீடு*

6. மயிலை. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 180—184

பேற்றை அடைவர்; ஆதலால், பெண்கள் பெண் பிறவியிலேயே வீடுபேற்றை அடைய முடியாது. அவர்கள் ஆண்களாகப் பிறந்து துறவு நிலை அடைந்தால்தான் வீடுபேற்றை அடைய முடியும் என்பது திகம்பர சமண நம்பிக்கை. ஆதலால் வீடுபேற்றுக்குத் தகுதியில்லாத பிறவி எடுத்த பெண்களைச் சமண முனிவர் துன்பத் தோற்றங்களாகவே கருதினர். பல நூல்களில் இழித்தும் பாடியுள்ளனர். [பெண்களும் ஆண்களைப் போலவே வீடுபேறு அடையலாம். மனத் தூய்மையும் பத்தியுமே வீடுபேற்றிற்கு வழி செய்வன என்பது சைவ, வைணவ சமயத்தினரது நம்பிக்கை.] சமணத்தின் வீழ்ச்சிக்கு இதுவே சிறந்த காரணம்.

3. தொன்று தொட்டுத் தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாக இருந்தது. கூத்தர், கூத்தியர் பன்னெடுங்காலமாக நாடகக் கலையை வளர்த்து வந்தனர். ஆனால், சமண முனிவர் நாடகம் காமத்தை மிகுவிக்கும் என்று நாட்டில் பிரசாரம் செய்து, நாடகக் கலைக்கு உலை வைத்தனர். சிந்தாமணி போன்ற தம் நூல்களிலும் நாடகத்தைப் பார்ப்பவர் கண்களையே பெயர்க்க வேண்டும் என்றும் குறித்துள்ளனர். இச் சமணர் செல்வாக்குப் பரவியிருந்த காலத்தில் தமிழகத்தில் நாடகக்கலை வீழ்ச்சியுற்றது. இது தமிழுக்குப் பெருந்தீமை.

4. சமண முனிவர் வடநாட்டினர்; பாலி, வடமொழி முதலிய வடநாட்டு மொழிகளில் வல்லவர். அவர்கள் தமிழைக் கற்று நூல்களை எழுதியபோது அவர்தம் சமயத் தொடர்பான சொற்களும் வழிபாட்டுக்குரிய சொற்களும் பிறமொழிச் சொற்களாகவே தமிழில் கலந்தன. அவர்கள் எழுதிய உரைநடை கலப்பு நடையாகவே இருந்தது. நீலகேசி உரைநடையைச் சான்றாகக் காண்க.

## 5. தமிழகத்தில் பௌத்த சமயச் செல்வாக்கு

பௌத்த சமயம் அசோகர் காலத்தில் தமிழகம் வந்தது என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. சமண முனிவர்களைப் போலவே பௌத்த முனிவரும் முதலில் மலைக் குகையில் வாழ்ந்தனர்; பின்பு பல ஊர்களில் பரவினர். மடங்களையும் கோயில்களையும் அமைத்துக்கொண்டு வாழலாயினர். அவர்கள் மடம் பள்ளி எனப்பட்டது; கோவில் விகாரம் எனப்பட்டது.

**கொல்லாமை:** வேத வேள்விகளில் ஆடு, மாடு, குதிரை முதலிய உயிர்களைக் கொல்லலாகாது என்று பௌத்தர் வற்புறுத்தினர். அக்கொள்கை நாளடைவில் இந்துக்களிடமும் பரவியது. ஊன் உண்டு வந்த பிராமணர் அறவே உயிர்க் கொலை நீக்கிவிட்டனர்; வேளாளர் முதலிய பிறரும் காலப்போக்கில் புலால் உண்ணலைத் தவிர்த்தனர்.

**அரசமரத்துத் தொழுகை:** அரசமரத்தின் அடியில் தங்கியிருந்தபோதுதான் புத்தர் ஞானத்தைப் பெற்றார். அரசமரம் போதிவிருட்சம் எனப்படும். புத்தரால் அரசமரம் சிறப்புற்றது. அதனால் பௌத்தர் அரசமரத்தைத் தொழுது வந்தனர்; அரச மரத்தின் அடியில் புத்த தேவர் சிலையை அல்லது பாதங்களை வைத்து வழிபட்டு வந்தனர். பௌத்த மதம் தமிழகத்தில் அழிந்துவிட்டது. ஆனால், பௌத்த வழிபாட்டிற்குரிய

அரசமரம் இந்துக்களிடையே செல்வாக்குப் பெற்றது. அரசமரத்தடியில் பிள்ளையார் உருவமும் நாகங்களின் உருவங்களும் வைக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வந்து வணங்குகின்றனர்.

**மடங்கள்:** பௌத்த மதத்தின் உயிர் நாடி **சங்கம்** என்பது. பௌத்த துறவிகளின் கூட்டமே சங்கம் எனப்பட்டது. அவர்கள் ஊர்தோறும் பள்ளிகளை (மடங்களை) அமைத்தனர். அவற்றில் தங்கி ஊர் மக்களுக்குச் சமய அறிவைப் பரப்பினர்; சிறு பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டினர்; பொது மக்களுக்கு மருத்துவ உதவியும் செய்தனர். இம்முறையைப் பின்பற்றியே பிற்காலத்துச் சைவ மடங்களும் வைணவ மடங்களும் வைதிக மடங்களும் தமிழகத்தில் தோன்றின என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

**அத்வைதம்:** கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர் போதித்த அத்வைத மதம் 'மாயா வாத மதம்' என்று சைவ வைணவர்களால் கூறப்பட்டது. இராமாநுசர் சங்கரரது அத்வைத மதத்தைப் 'பிரசன்ன பௌத்தம்' [மாறு வேடம் பூண்டு வந்த பௌத்தம்] என்று குறித்துள்ளனர். துவைத மதத்தைத் தோற்று வித்த மாத்வரும் இவ்வாறே கூறியுள்ளார். பத்ம புராணத்திலும் சங்கரர் மதம் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. இக்கூற்றுக்களால் அத்வைத மத அடிப்படைக் கருத்துக்கள் (மகாயான) பௌத்த சமயத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பது தெளிவு.

**புத்தர் அவதார புருஷர்:** புத்தரைத் திருமாலின் ஒன்பதாவது அவதாரம் என்று தசாவதார சரித்திரம் கூறுகிறது. அதனால் வைணவம் புத்தரை ஓர் அவதாரமாக ஏற்றுக் கொண்டது வெளிப்படை. புத்தருக்குச் 'சாஸ்தா' (சாத்தனார்) என்ற பெயர் உண்டு. அவர், ஐயனார்

என்றும் அழைக்கப்பட்டார். சைவர் சாஸ்தா அல்லது ஐயனார் என்ற பெயருடன் புத்தரைத் தம் தேவர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டனர்.

**ஐயனார்:** தமிழகத்தில் ஐயனார் கோயில்கள் மிகப் பலவாக இருக்கின்றன. ஐயனார் சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் உரிய தெய்வம். குதிரையை ஊர்தியாகக் கொண்ட ஐயனார் பௌத்த சமயத்திற்கு உரிய தெய்வமாகும். யானையை ஊர்தியாகக் கொண்ட ஐயனார் சமண சமயத்திற்கு உரிய தெய்வமாகும். தமிழ் நாட்டுச் சிற்றூர்களில் ஐயனார் கோயில்களைக் காணலாம். ஐயனார் ஹரிஹர புத்திரர் என்று கூறி இந்துக்கள் வழிபடுகின்றனர்.

**தருமராசர் கோயில்கள்:** புத்தர் பெயர்களுள் 'தருமன்' அல்லது 'தருமராசன்' என்பது ஒன்று. பிங்கலம், திவாகரம் என்னும் நிகண்டுகளில் இப்பெயர்களைக் காணலாம். எனவே, இவை புத்தர் (தருமராசர்) கோயில்களே ஆகும். பௌத்தம் குன்றிய பிறகு இக்கோயில்கள் பாண்டவருள் மூத்தவனை தருமராசன் கோயில்களாகக் கற்பிக்கப்பட்டன. இக்கோயில்களில் பௌத்தர் வழிபடும் அரசமரம் இருத்தலை இன்றும் காணலாம்.[1]

**பெண்தெய்வங்கள்: தாராதேவி, மங்கலாதேவி, சிந்தாதேவி** முதலிய பெண் தெய்வங்கள் பௌத்த சமயத்திற்குரியவை. இத்தெய்வங்களின் கோயில்கள் இந்து சமயச் செல்வாக்குப் பெற்றபொழுது பகவதி கோயில்களாகவும் திரௌபதி அம்மன் கோயில்களாகவும், கிராம தேவதைகளின் கோயில்களாகவும் மாற்றப்பட்டு விட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.[2]

**நூல்கள்:** மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, விம்பசார கதை, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம்

---

1. மயிலை. சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும் பக். 44-48
2. ஷை பக். 159

என்பன பௌத்த நூல்கள். மணிமேகலை என்ற காவியம் ஒன்றே பௌத்த சமய உண்மைகளையும் பௌத்த சமயப் புலவர்களையும் இன்றும் உணர்த்துவதாக உள்ளது. கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரர் என்பவரால் **வீரசோழியம்** என்ற இலக்கணம் செய்யப்பட்டது.

**தலையை மழித்தல், துவராடையை உடுத்தல்:** பௌத்த துறவிகள் தலையை மழிக்கும் வழக்கமுடையவர்கள்; துவர் ஆடையை உடுத்துவந்தனர். இவ்விரண்டு வழக்கங்களும் இன்று இந்து சமயத்துறவிகளிடம் காணப்படுகின்றன.

**கோயில் கட்டடக் கலை:** சாரநாத், அமராவதி முதலிய இடங்களில் பௌத்த விகாரங்கள் சிறந்த கலை நுட்பத்தைப் பெற்றுள்ளன. அக்கலை நுட்பம் தென்னாட்டிலும் பரவியது. தென்னாட்டுக் கட்டடக் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றிற்கு மேலே கூறப்பெற்ற கோயில்களும் அவற்றின்கண் தீட்டப்பெற்ற ஓவியங்களும் சிற்பங்களும் ஓரளவு துணைபுரிந்தன என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

**உணவு படைத்தல்:** எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் பௌத்தரால் மிகச்சிறந்த அறமாகக் கருதப்பட்டது. நாட்டில் பசியின் கொடுமையை நன்கு விளக்கிப் பசித்தவருக்கு உணவு படைக்க வேண்டுமென்பதை மிகுதியாக எடுத்துப் பேசிய பெருமை பௌத்தத்திற்கே உரியது. பசிப்பிணி என்னும் பாவி என்பது மணிமேகலை. காணார், கேளார், நொண்டிகள், அநாதைகள் முதலிய எளிய மக்களை உணவு கொடுத்துப் பாதுகாக்க வேண்டுமென்று வற்புறுத்தியது பௌத்த சமயமேயாகும். மாதவி மகளான **மணிமேகலை** இத்தொண்டினைச் செய்து காட்டினாள் என்று மணிமேகலை கூறுகிறது.

**நல்லொழுக்கம்:** தந்தை-மக்கள், கணவன்-மனைவி, ஆசிரியன்-மாணாக்கன், முதலாளி-தொழிலாளி, பணக்காரர்-ஏழை ஆகிய இவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வெவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் புத்தர் பெருமான் கூறியுள்ளார். அக்கருத்துக்களே பிற்கால நீதிநூல்களில் வற்புறுத்தப்பட்டன.

**தமிழில் பிறமொழிக் கலப்பு:** பண்டைக் காலத்தில் பௌத்த சமய நூல்கள் எல்லாம் பாலி மொழியிலேயே எழுதப்பட்டு வந்தன. பௌத்த முனிவர்கள் தமிழைக் கற்றுத் தமிழில் நூல்கள் செய்தனர். தமிழ்நாட்டு முசுலிம்கள் தம் சமய நூல்களைத் தமிழில் எழுதும் பொழுது அரபு மொழிச் சொற்கள் இடம் பெறுதல் போலவே பௌத்தர்கள் தமிழ் நூல்களை எழுதியபோது, பாலி மொழிச் சொற்கள் தமிழில் இடம் பெற்றன. ஆராமம், சயித்தியம், சேத்தியம், தூபம், தூபி, விகாரை, வேதி, பிட்சு, பிட்சுணி, தேரன், தேரி முதலியன தமிழில் வழங்கி வரும் பாலிமொழிச் சொற்கள்.[3]

**முடிவுரை:** பௌத்தர் சமணரைப் போலவே சிறந்த கல்விமான்கள்; வாதத் திறமையுள்ளவர்கள்; அன்பையே உயிர் நாடியாகக் கொண்டவர்கள். அன்பு, அருள், இரக்கம் முதலிய நற்பண்புகளை மக்கள் உள்ளங்களில் அழுத்தமாகப் பதிய வைத்த சிறப்பு பௌத்த சமயத்திற்கே உரியது எனல் மிகையாகாது. காஞ்சிநகர் அரசன் சீனத்திலும் சப்பானிலும் கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் பௌத்தத்தைப் பரப்பி அழியாப் புகழ்பெற்றான்; காஞ்சியைச் சேர்ந்த திக்நாகர் மிகப் பெரிய பௌத்த ஆசிரியர். இவர் மாணவரே காஞ்சித் தமிழரும் நாளந்தைப் பல்கலைக் கழகத் தலைமைப் பேராசிரியருமாகிய தருமபாலர்

3. மயிலை. சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், பக். 126

(கி.பி. 528—560) என்பவர். இப்பெரு மக்களால் தமிழரது அறிவுத்திறன் வடநாட்டிலும் இலங்கையிலும் சீனம், சப்பான் நாடுகளிலும் பரவியது. அறவண அடிகள், சீத்தலைச் சாத்தனார், புத்ததத்தர், புத்தநந்தி, சாரிபுத்தர் போன்ற தமிழ் பௌத்தர்கள் பாலிமொழியை நன்கு பயின்று பௌத்த சமய நூல்களில் பெரும் புலமை பெற்றிருந்தனர்; தருக்கக் கலையிலும் சிறந்து விளங்கினர். இந்த உண்மை தமிழரது அறிவு நுட்பத்தை நன்கு விளக்குகின்றதன்றோ?

# 6. இசுலாத்தின் செல்வாக்கு

## முன்னுரை

கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக் காபூர் படையெடுப்பு தமிழகத்தில் நிகழ்ந்தது. பின்பு ஏறத் தாழ 50 ஆண்டுகள் மதுரையில் முசுலிம்கள் ஆட்சி இருந்தது. அதன் பிறகு விசயநகர ஆட்சி, அவர்களுக்கு உட்பட்ட நாயக்கர் ஆட்சி என்பன இருந்தன. கி. பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டு வரையில் கருநாடக நவாபுகள் ஆட்சி, ஐரோப்பிய வணிகர் போராட்டங்கள் முதலியன நிகழ்ந்தன. இந்த நூற்றாண்டு களில் நாட்டில் போதிய அமைதி இல்லை. இக்காலத்தில் தான் முசுலிம்கள் தமது தமிழ் நூல்களைச் செய்தனர்.

## சீறாப்புராணம்

கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் கீழக்கரையில் சையத் காதர் என்ற வள்ளல் ஒருவர் இருந்தார். எட்டயபுர அவைக்களப் புலவராகிய உமறுப்புலவர் வாழ்ந்த காலம் அது. வள்ளல் உமறுப் புலவரைக்கொண்டு நபிகள் நாய கத்தின் வரலாற்றைச் சீறாப்புராணம் என்ற பெயரில் பாடுவித்தார். அந்நூல் ஏறத்தாழ 5000 செய்யுட்களைக் கொண்டது. சீதக்காதி இறந்த பிறகு அந்நூல் முற்றுப் பெற்றது. அதனால் பறங்கிப்பேட்டை வள்ளல் அப்துல் காஜி மரக்காயர் என்பவர் ஆதரவில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் பக்ருடீன் புலவர் முகையதீன் புராணம் என்ற காவியத்தைச் செய்தார். அது நாற்பது படலங்களைக் கொண்டது.

## பிரபந்தங்கள்*

(1) உமறுப் புலவர் '**சீதக்காதிக் கோவை**' என்ற நூலைப் பாடினார். (2) '**நபிகள் மீது அம்மானை**' என்னும் நூலைக் கவிக் களஞ்சியப் புலவர் (உமறுப் புலவரின் மகன்) பாடினார். (3) 18-ஆம் நூற்றாண்டில் சையது மீராப் புலவர் 'அலி' என்ற நீதிபதி (caliph) மீது **அம்மானை** பாடினார். (4) சித்திரக் கவி சையது இமாம் புலவர் '**திருமதீனத்து அம்மானை**', '**திரு மதீனத்து அந்தாதி**' என்னும் நூல்களைப் பாடினார். (5) ஷேக் அப்துல்காதர் நயினார் ஆலிம் என்பவர் '**நாகை அந்தாதி**' பாடினார். (6) குலாம் காதிறு நாவலர் '**திருமக்கா திரிபு அந்தாதி**' என்னும் நூலைப் பாடினார். (7) சையத் மீரா லப்பை என்பார் '**நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்**' பாடினார். (8) முகைதீன் கவிராயர் '**முகைதீன் அடிகள் பிள்ளைத் தமிழ்**' பாடினார் (9) சருக்கரைப் புலவர் '**மதீனு அந்தாதி**' இயற்றினார். (10) மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் குலாம் காதிர் நாவலர் '**புலவர் ஆற்றுப் படை**' பாடினார். (11) குமருப் புலவர் '**முதுமொழி மாலை**' என்பதையும், (12) செய்தக்காதிப் புலவர் '**அபிசக்கும மாலை**' என்னும் நூலையும் பாடினார் (அபிசக்கும என்பவர் நீதிபதி உமர் மகளுவர்) (13) நபி நாயகத்தின் பிற்கால வாழ்க்கையைக் கூறும் '**பொன்னரி மாலை**' என்னும் நூலை ஒரு புலவர் பாடினார். (14) கலை ஆசன் ஆலிப் புலவர் '**பூவடிச் சிந்து**' பாடினார். (15) நாங்கூர் சாதுல் அமீது

---

* திருவாங்கூர்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் "**Tamil Culture**" என்னும் வெளியீட்டில் வரைந்துள்ள கட்டுரையையும், திரு. அப்துற்-றஹீம் அவர்கள் எழுதியுள்ள "முஸ்லிம் புலவர்கள்" என்னும் நூலையும் துணையாகக் கொண்டு இஃது எழுதப் பெற்றது.

ஒலியுல்லா அடிகள்மீது மதாருப் புலவர் '**திருக்காரணச் சிங்காரக்கும்மி**' என்னும் பிரபந்தம் பாடினார். (16) முகம்மது காசிம் புலவர் '**ஒலியுல்லா அலங்காரக்கும்மி**' என்னும் நூலைப் பாடினார். (17) சையது அபூபக்கர் புலவர் நபிகளைப் புகழும் '**சீருக்கீர்த்தனை**' என்னும் நூலைப் பாடினார். (18) காயல்பட்டினம் காசீம் புலவர் '**திருப்புகழ்**' பாடினார்.

'ஏசல்' என்பது பழித்தல் என்ற முறையில் பாடப் படும் சிறு நூல். ஆனால், புகழும் முறையில் ஏசல் என்று பெயரிட்டு முசுலிம் புலவர் பாடியுள்ளனர். (19) சாகுல் அமீது புலவரும் அகமத் லப்பை என்பவரும் நபி நாயகம் பெயரில் '**ஏசற் கண்ணிகள்**' என்னும் நூல்களைப் பாடி யுள்ளனர். (20) அசன் அலிப் புலவர் அராபியப் போர் களைப் பற்றி '**ஐந்து படைப்போர்**' என்னும் சிறு நூல் பாடி யுள்ளார். (21) குஞ்சு மூசுப் புலவர் '**செய்தத்துப் படைப் போர்**' என்னும் நூலைச் செய்துள்ளார். செய்தத்து என்பது இளவரசியின் பெயர். (22) அபூபக்கர் லப்பை என்பவர் அல்லாமீதும் அவர் அடியார்மீதும் பத்தியோடு பாடிய நூல் '**சுரதின் முனாஜாத்**' என்பது.

அரபு மொழியில் கதையைச் சொல்லுதல் '**கிஸ்ஸா**' எனப்படும். '**யூசுப் நபி கிஸ்ஸா**' என்ற சிறு நூலை மதாரு சாகிப் புலவர் பாடினார். அப்துல் காதர் சாஹேறப் என் பவர் '**ஸையத்துன் கிஸ்ஸா**' என்னும் நூலைச் செய்தார். சையத்துன் என்பது இளவரசியின் பெயர். இந்நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

**மசலா**—வினாவும் விடையும்: இம்முறையில் சில சிறு நூல்கள் அமைந்துள்ளன. '**நூறு மசலா**' - இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதன்கண் நூறு வினா விடைகள் அமைந்துள்ளன. வண்ணப் பரிமளப் புலவர் '**ஆயிர மசலா**' என்னும் நூலைப் பாடியுள்ளார். '**நாம**'—கதை கூறும் முறை (Chronicle). '**மிகராஜநாம**' என்பது ஒரு

சிறு நூல். இதை மதாருசாகிப் புலவர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் செய்தார். இது நபி துறக்கம் செல்லுதல் பற்றிக் கூறுவது. சையது அகமத் மரக் காயர் என்பவர் காயல்பட்டினம் '**நூருநாம**' என்னும் நூலைச் செய்தார்.

## முசுலிம் சித்தர்கள்

சைவத்தில் வாழ்ந்த சித்தர்களைப் போலவே முசுலிம் சித்தர்களும் சாதி, சமய வேறுபாடுகளைக் கண்டித்தும் நற்பண்புகள் உடையவரைப் போற்றியும் இறைவனை வேண்டியும் சில நூல்கள் செய்துள்ளனர். அவற்றுள் தலை சிறந்தது **குணங்குடி மஸ்தான் சாகிபு** பாடல்களைக் கொண்ட நூலாகும். (2) களங்குடி மச்சரேகை சித்தன் என்ற முசுலிம் மருத்துவப் புலவர் ஒரு நூலைப் பாடியுள்ளார். (3) தக்கலை என்ற ஊரைச் சேர்ந்த பீர் மூகம்மது என்பவர் '**ஞானமாலை**' '**நவரத்தினக் குறவஞ்சி**' என்ற நூல்களைச் செய்துள்ளார். இப்பாடல்கள் யாவும் இந்து-முசுலிம் ஒற்றுமைக்கு வழி கோலியவையாகும்.

## சமய ஒழுக்க நூல்கள்

முசுலிம் சமய விவரங்களை உணர்த்தும் நூல்கள் (**Theological works**) சிலவுண்டு. மகால் பெரிய லிஹ் என்பவர் '**வேத புராணம்**' என்னும் நூலை அச்சிட்டுள்ளார். இதில் பிரார்த்தனை, நோன்பு முதலிய சமயச் சடங்குகளைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. '**ஆசாரக் கோவை**' — இதனைச் செய்தவர் அப்துல் மஜீத். இது திரிகடுகம், சிறுபஞ்சமூலம் போல நீதிப் பொது மொழிகள் கொண்டது. பீர்முகமது சாகிப் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் ஒரு நூல் எழுதினார். அதில் முசுலிம்களின் ஒழுக்கங்கள், வழக்கங்கள், சட்டங்கள் பற்றிய செய்திகள்

காணப்படுகின்றன. இதுவே தமிழில் எழுதப்பட்ட முதல் முசுலிம் நூல் என்று கூறலாம்.

## உரைநடை நூல்கள்

மேலே சொல்லப் பெற்றவாறு 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் சமய வாதங்கள் நிகழ்ந்தன. எனவே, சமயவாத நூல்கள் அக்காலத்தில் எழுதப்பட்டன. அவற்றுள் சில உருது, அரபி, பாரசீக மொழிபெயர்ப்பு நூல்கள். அவற்றுள் சிறந்தது 'முசுலிம் அத்வைத மூல மொழி.' இதனைச் செய்தவர் நெல்லிக்குப்பம் அப்துல் ரஹ்மான் என்பவர். சையது முகமது ஆலிம் என்பவர் 'உலுவுத்தீன்' என்னும் நூலைச் செய்தார். 'காலியார்க்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா' என்பது ஒரு நூலின் பெயர். இது நீதிபதிக்கும் கள்ளனுக்கும் நடந்த உரையாடலைக் கூறுவது. நுண்ணறிவு படைத்த கள்வன் இறுதியில் நீதிபதியைத் தன்பால் இழுத்துக் கொள்கிறான். அரசவை விதூடகனை அபுநவாஸ் என்பவனைப் பற்றிய கதைகள் அடங்கிய நூல் 'அபுநவாஸ்' எனப்பட்டது. இதனை இயற்றியவர் மீரான் சாகிப். முசுலிம் சமயத் தலைவர்களின் வரலாறுகளை, உருது மொழி பெயர்ப்பாகச் சாகுல் அமீது லப்பை என்பவர், 'மௌலானா ரூமி ஜீவிய சரித்திரம்' என்னும் நூலை எழுதினார். சிரியாவை வென்றது பற்றிய நூல் 'புதுக்குச்சம்' எனப்படும். இத்தகைய வீர நிகழ்ச்சிகளைக் கூறும் நூல்களும் சிலவுண்டு. முசுலிம் சட்டத் தமிழ் நூல்கள சில அரபி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு அரபி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள தமிழ் இசுலாமிய நூல்கள் ஏறத்தாழ 30 ஆகும்.

## நன்மைகள்

(1) இசுலாம் சமயம் பற்றிய நூல்கள் அரபு நாட்டிலிருந்து இங்கு வந்தன. அச் சமயம் பற்றிய நூல்கள்

அரபு மொழியிலும் உருது மொழியிலும் பாரசீகமொழியிலும் எழுதப்பட்டுள்ளன. அவற்றை இந்நாட்டுத் தமிழ் முசுலிம்களும் பிறரும் படித்தறியத் தமிழில் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, அவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அவற்றால் இசுலாமிய சமய விவரங்களும் சமய தத்துவமும் இசுலாமிய நாகரிகம், பண்பாடு முதலியனவும் நாம் அறிந்து கொள்ள வசதி ஏற்பட்டிருக்கின்றது; ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தாரின் சமய உணர்ச்சிகளை அறிந்து நட்பு முறையில் பழக இத் தமிழ் நூல்கள் பெருந்துணை புரிகின்றன. (2) இறைவனைப் பற்றிய அருட்பாடல்கள் எச்சமயத்தார் பாடினும் உள்ளத்தைக் குழைவிப்பன அல்லவா? எனவே, பத்தித்துறையில் தமிழ் முசுலிம்கள் பாடிய 'திருப்புகழ்' போன்ற நூல்கள் அறிஞர்களால் வரவேற்கத்தக்கனவேயாகும். (3) இதுகாறும் சொல்லப்பெற்ற தமிழ் நூல்களால் ஏறத்தாழ 1500 உருது, அரபுச் சொற்கள் தமிழ் இலக்கியத்துள் கலந்துள்ளன. இந்தத் தமிழ்ச் சொற்கள் உலகில் வரவேற்கத்தக்கவை என்று பலர் கருதுகின்றனர். சொற்கள் நமது அன்றாடப் பேச்சு வழக்கில் நீக்கமுடியாத நிலையில் இருந்து வருகின்றன. கருநாடக நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் இச்சொற்களுட் பல இசைபற்றியும், சட்டம் பற்றியும் நிலம்பற்றியும் வழக்கில் வந்துள்ளன.

**சில சான்றுகளைக் கீழே காண்க**

(1) அர்ஜி, ராஜி, வக்கீல், வஜா, ஜப்தி—சட்டம் பற்றிய சொற்கள்.

(2) கஞ்சிரா, தண்டோரா—இசை பற்றிய சொற்கள்.

(3) ஜில்லா, தாலுக், மாகாண்—நிலப்பிரிவு பற்றியவை.

(4) கிஸ்தி, ரயத், ஜமாபந்தி—வருவாய் பற்றிய சொற்கள்.

(5) ஆரக், மிட்டாய், பூந்தி, சர்பத்—குடிவகை பற்றிய சொற்கள்.

(6) அத்தர், பத்தி—மணப் பொருள் பற்றிய சொற்கள்.

(7) அண்டா, கூஜா—வீட்டுப்பொருள் பற்றிய சொற்கள்.

(8) உஷார், ஜல்தி, பலே, பேஷ், சபாஷ், கப்ஸா, அல்கா, சவுடால் முதலியன வழக்குச் சொற்கள்.

இவற்றை நோக்க உருதுவின் மூலமாக வந்த இந்த அரபுச் சொற்களுக்குத் தமிழ்மொழி பெரிதும் கடமைப் பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

**முடிவுரை**

இன்றைய தமிழகத்தில் நூற்றுக்கு ஒன்பது வீதம் முசுலிம்கள் இருக்கின்றனர். இவருள் பெரும்பாலார் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர். இவருட் பலர் உருது தங்கள் தாய்மொழி என்று 1951-ஆம் ஆண்டு மக்கள் தொகை அறிக்கையில் கூறியுள்ளனர். இது அவர்தம் தவறான கருத்து. அவர்கள் சமயத்தால் முசுலிம்களே தவிர மொழியால் தமிழர். இந்த உணர்ச்சி அவர்களிடம் வேரூன்றுமாயின் தமிழிலக்கியம் வளம் பெறும். மேலே சொல்லப்பெற்ற முசுலிம் தமிழ்ப் புலவர் களைப் போலவே இவர்களும் தமிழ்ப்பற்றுடன் விளங்கு வராயின் தமிழ் மேலும் வளம்பெறும். மேலே சொல்லப் பெற்ற புலவர்களைப் போலவே இந்த நூற்றாண்டில் சதாவதானி ஷேக் தம்பிப் பாவலர் போன்ற புலவர் பெரு மக்கள் இருந்து வருகின்றனர் என்பது பாராட்டற் குரியது.

முசுலிம் சித்தர்களைப் போல விரிந்த சமய நோக்கம் எல்லா முசுலிம்களிடத்தும் இருக்குமாயின்—அவ்வாறே இந்துக்களிடமும் இருக்குமாயின்—இருசமயக்கொள்கை களும் சமய தத்துவமும் கலைகளும் நாட்டில் பரவ வழி உண்டாகும்.

கருநாடக நவாபுகளின் ஆட்சியில் தமிழகத்தில் கட்டடக் கலை வளர்ச்சியுற்றது. இசைக்கலை ஓரளவு வளர்ச்சியுற்றது. யுனானி மருத்துவ முறையால் மருத்துவக் கலையும் வளர்ச்சியுற்றது.

# 7. கிறித்தவ சமயத்தார் தொண்டு

இந்தியாவுக்குப் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் வந்தனர்; வாணிகம் செய்தனர். இவருள் முதலில் வந்தவர் போர்ச்சுகீசியர். அவர்கள் நமது நாட்டினர் சிலரைக் கிறித்தவராக்கி அவருக்குத் தம் மொழியைக் கற்பித்தனர். போர்ச்சுகீசிய வீரர் இந்தியப் பெண்களை மணந்து கொண்டனர். அவர்களுக்குப் பிறந்தவர்கள் போர்ச்சுகீசிய மொழியையே பேசலாயினர். போர்ச்சுகீசியருக்குப் பின் வந்த டச்சுக்காரர் முதலியோர் போர்ச்சுகீசிய மொழியையே இந்நாட்டில் பொது மொழியாகப் பேசி வந்தனர். அவ்வணிகர்களுடன் வாணிகத்தின் பொருட்டுப் பழகி வந்த தமிழர் போர்ச்சுகீசிய மொழியைக் கற்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இக்காரணங்களால் போர்ச்சுகீசிய மொழிச் சொற்கள் மட்டும் தமிழில் கலக்கலாயின.

அன்னாசி, கொய்யா, பப்பாளி (பப்பளி), வாத்து, குசினி, பீங்கான், கோப்பை, விஸ்கோத்து (பிஸ்கோத்து), அரக்கு, கமிசு, சப்பாத்து, பாப்பூசு, பொத்தான், மேசை, கதிரை (நாற்காலி), புனல் (Funnel), கடுதாசி, பேனா, கிராதி, விராந்தை (விராண்டா), சிமேந்து (சிமிட்டி), பீப்பா, மேஸ்திரி, கப்பித்தான், ஆயா, பாதிரி, பாப்பு (போப்), பட்டாளம், துருப்பு, சிப்பாய், துப்பாக்கி, வயினெத்து (Boyonet), கும்பசு, நங்கூரம், சாவி, ரசீது, ஆஸ்பத்திரி, ஸ்கூல், கும்பாதிரி (God father), கும்பதினி

(Godmother), விவிலியம் (பைபிள்), பட்டாசு, ஜன்னல் முதலியன.

## இராபர்ட்-டி - நொபிலி

இவர் இத்தாலி நாட்டினர்; சமய போதகராய்க் கி. பி. 1606-இல் தமிழகம் வந்தார். இவர் தமிழைப் பிழையறக் கற்றார். ஞானோபதேச காண்டம், மந்திர மாலை, ஆத்தும நிர்ணயம், தூஷண திக்காரம், சத்திய வேதலட்சணம், சகுண நிவாரணம், பரம சூட்சும அபிப் பிராயம், கடவுள் நிர்ணயம், புனர் ஜென்ம ஆட்சேபம், நித்திய சீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, யேசுநாதர் சரித்திரம் முதலிய பல நூல்களைத் தமிழ் உரை நடையில் எழுதினார்; தமிழ்—போர்ச்சுகீசிய அகராதி ஒன்றையும் வெளியிட்டார்.

## வீரமா முனிவர்

இவரும் இத்தாலி நாட்டினர். கான்ஸ்டெண்டின் ஜோசப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். இவர் கி. பி. 1700-இல் தமிழகம் வந்தார். தெலுங்கு, வட மொழி, தமிழ் ஆகிய மூன்றையும் கற்றுத் தேர்ந்தார்; இந்துஸ்தானி, பாரசீக மொழிகளையும் கற்றார்; 1740 வரையில் திருச்சியை ஆண்ட சந்தாசாகிபின் திவானாக இருந்தார். பின்பு இவர் திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள மணப்பாடு என்னும் ஊரில் தங்கினார்; 1742-இல் அங்குக் காலமானார்.

இவர் தமிழ் 'எ' கர 'ஒ' கரங்களில் திருத்தத்தை உண்டாக்கினார். ஏசுநாதர் வரலாற்றைத் 'தேம்பாவணி' என்ற பெயரில் ஒரு காவியமாகப் பாடினார்; அதற்கு உரை எழுதினார். திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி யம்மாள் அம்மானை என்பன இவர் இயற்றிய செய்யுள் நூல்கள்.

வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகமறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக் கணிதம், வர்மன் கதை, பரமார்த்த குரு கதை என்பவை இவர் இயற்றிய உரைநடை நூல்கள்.

தொன்னூல் விளக்கம் (ஐந்து இலக்கணங்களையும் பற்றியது), கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் இரண்டும் இவர் எழுதிய இலக்கண நூல்கள். இவர் சதுர் அகராதி ஒன்றை வெளியிட்டார். இதுவே தமிழில் எழுதப்பட்ட முதல் அகராதி.[1] சதுர் அகராதி—பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி, தொடை அகராதி என்ற நான்கு பிரிவுகளையுடையது. அதனால் சதுர் அகராதி எனப்பட்டது.

## சீகன் பால்கு ஐயர்

இவர் செர்மனி நாட்டவர்; கி. பி. 1706-இல் தரங்கம் பாடிக்கு வந்தார். அங்குக் கோயில்களைக் கட்டினார்; பல பள்ளிகளை நிறுவினார்; பலரைக் கிறித்தவராக்கினார்; கிறித்தவ சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்; செர்மனி நாட்டிலிருந்து முதன் முதல் அச்சுப் பொறியைத் தரங்கம்பாடிக்கு வரவழைத்தார்; அதனில் தம் நூல்களை அச்சிட்டார். தமிழ் இலத்தீன் இலக்கணத்தையும், தமிழ்—இலத்தீன் அகராதியின் சில பகுதிகளையும் அச்சிட்டார்'[2]

## எல்லிஸ் துரை

இவர் ஆங்கிலேயர்; 1796-இல் சென்னையில் அரசாங்க அலுவலில் அமர்ந்தார். இவர் தமிழ், வட மொழி இரண்டிலும் வல்லவர்; சென்னைக் கல்விச் சங்கத்தின் சார்பில் ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேர்த்தார்; திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு

1. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 85
2. ஷை. பக். 69

ஆங்கிலத்தில் உரை எழுதி வெளிப்படுத்திஞர்; புலவர் முத்துச்சாமிப் பிள்ளையைக் கொண்டு வீரமாமுனிவர் வரலாற்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதுவித்தார்; வீரமாமுனிவர் இயற்றிய நூல்களைத் தேடிச் சேர்த்தார்.

## இரேனியஸ் ஐயர்

இவர் செர்மனி நாட்டவர்; 1814—இல் தமிழகம் வந்தார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள டோஞுவூரை அமைத்தவர் இவரே; அதைச் சுற்றிப் பன்னிரண்டு கிராமங்களையும் அமைத்தார். புத்தகம் எழுதும் சங்கம் ஒன்றை அமைத்தார்; அதன் வாயிலாகப் பல நூல்களையும் வெளியிடச் செய்தார். இவர் **வேத உதாரணம் திரட்டு** முதலிய பல தமிழ் உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.[3]

## போப் ஐயர்

இவர் ஆங்கிலேயர்; திருநெல்வேலி, தஞ்சை, நீலகிரி மாவட்டங்களில் சமய போதகராய் இருந்தார்; 19-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் தொண்டு செய்தார்; இவர் **திருவாசகம், திருக்குறள், நாலடியார்** என்னும் மூன்று நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; தமிழ் இலக்கணத்தை மூன்று பாகங்களாக எழுதிஞர். புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை இவற்றிலுள்ள சில பாடல்களை ஆங்கிலத்தில் பாக்களாக மொழிபெயர்த்தார். சமயத் தொடர்பான பல கட்டுரைகளைத் தமிழ் உரைநடையில் எழுதிஞர்.[4]

## கால்டுவெல் ஐயர்

இவர் அயர்லாந்து நாட்டினர்; கி. பி. 1838-இல் சென்னைக்கு வந்தார்; திருநெல்வேலி மாவட்டத்தில்

---

3. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 110

4. ஷெ பக். 114-115

இடையன்குடியில் தங்கிச் சமயத் தொண்டு செய்தார்; இவர் பல ஆண்டுகள் ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அரிய ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்; திருநெல்வேலி வரலாறு என்ற நூலையும் ஆங்கிலத்தில் எழுதினார். நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம் என்ற தமிழ் உரைநடை நூல்களை எழுதினார்; ஞானஸ்நானம், நற்கருணை என்ற பொருள்கள் பற்றி இரண்டு நீண்ட கட்டுரைகள் எழுதினார்.[5]

## அகராதி ஆசிரியர்கள்

தமிழில் வந்த முதல் அகராதி வீரமாமுனிவர் இயற்றிய சதுர் அகராதி என்பது. பெப்ரீசியஸ் என்ற செர்மன் பாதிரியார் 1779-இல் விரிவான அகராதி ஒன்றை வெளியிட்டார். ராட்லர் என்பவர் முப்பத்தேழாயிரம் சொற்களைத் தொகுத்தார். அவருக்குப் பின் டெயிலர் என்பவர் ராட்லர் முயற்சியைத் தொடர்ந்து ஆயிரத்து நானூறு பக்கங்கள் கொண்ட பெரிய அகராதியை வெளிப்படுத்தினார். பெர்சிவல் முதலிய அமெரிக்க அறிஞர் திரட்டிய பேரகராதியை வின்ஸ்லோ என்ற அறிஞர் வெளியிட்டார். அதில் அறுபத்தேழாயிரம் சொற்கள் அடங்கியுள்ளன. காலப்போக்கில் தமிழில் வழங்கி வரும் சொற்களையும் சேர்த்து போப் ஐயர் வின்ஸ்லோவின் அகராதியை விரிவாக்கி வெளியிட விரும்பினார். அவர் இறந்து விடவே, அம்முயற்சியை சேண்ட்லர் என்ற ஆங்கில அறிஞர் மேற்கொண்டார்; சென்னை அரசாங்க ஆதரவில் அகராதியை வெளியிடத் தொடங்கினார்; ஒரு பகுதி வேலை முடிந்த பிறகு அகராதியை வெளியிடும் பொறுப்பையும் உரிமையையும் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டது.

---

5. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 120

இருபத்தைந்து ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு தமிழ்ப் பேரகராதி ஏழு பிரிவுகளுடன் வெளி வந்தது. இதில் நூறாயிரம் சொற்கள் காணப்படுகின்றன.[6]

## தமிழ் உரைநடை நூல்கள்

தமிழில் முழு உரை நடை நூல்களை முதன் முதல் எழுதி வெளியிட்டவர் மேனாட்டுப் பாதிரிமாரே ஆவர். கி. பி. 1579-இல் கிறிஸ்தவ வேதோபதேசம் என்ற நூல் வெளியிடப்பட்டது. 1579-இல் கிறிஸ்தவ வணக்கம் என்னும் நூல் அச்சிடப்பட்டது. 17-ஆம் நூற்றாண்டில் இராபர்ட்-டி-நொபிலி, ஜான் டி. பிரிட்டோ என்ற பாதிரிமார்கள் சில உரைநடை நூல்களை எழுதினர். 19-ஆம் நூற்றாண்டில் அச்சுப் பொறிகள் தமிழ் நாட்டிற்கு வந்த பிறகே உரைநடை நூல்கள் தமிழில் பெருகின. நாடெங்கும் பள்ளிகள் திறக்கப்பட்டன. எனவே, பலவகைப் பாட நூல்கள் தேவைப்பட்டன. சென்னைக் கல்விச் சங்கம், சென்னைப் பாடப்புத்தகச் சங்கம் என்ற சங்கங்கள், உலக சரித்திரம், இந்திய சரித்திரம், விஞ்ஞான பாட நூல்கள் முதலியவற்றை வெளிப்படுத்தின. இவற்றுள் பல நூல்களை எழுதி வெளியிட்டவர் கிறித்தவ அறிஞரே யாவர்.[7]

## செய்தித் தாள்கள்

தமிழகத்தில் கிறித்தவரே தமிழ்ச் செய்தித் தாள்களையும் முதன் முதல் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்டவற்றுள் தமிழ்ப் பத்திரிகை (1831), சுவிசேஷப் பிரபல விளக்கம் (1840), நற்போதம் (1840), பால தீபிகை (1840), சிறுபிள்ளையின் நேசத் தோழன்

---

6. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறித்துவத் தமிழ்த் தொண்டர், பக். 76-83
7. மயிலை. சீனி வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 24-29

(1849), தினவர்த்தமானி (1856), மிஷன் பாடசாலைப் பத்திரிகை (1858), அருணோதயம் (1628), சுவிசேஷ தூதிகை (1863), சத்திய வேதக்கொடி (1882), தீர்க்க தரிசன சுப்பிர தீபிகை (1889) கிறிஸ்தவன் (1868) என்பன குறிப்பிடத் தக்கவை.[8] இச்செய்தித் தாள்கள் தமிழ் உரைநடையை நாட்டில் பரப்பிய பெருமையை உடையவை.

## ஆங்கிலச் சொற்கள்

ஆங்கில ஆட்சியால் ஆங்கிலச் சொற்கள் பல தமிழ் வழக்கில் நிலைபெற்றுவிட்டன. அவற்றுள் கவர்னர், கோர்ட், காப்பி, ஆபீஸ், சம்மன், சர்ச், ஷர்ட், கோட்டு, மோட்டார், சோப்பு, ரோடு முதலியன குறிக்கத் தக்கவை.

## பழமொழிகள்

கிறித்தவம் நாட்டில் பரவ நேர்ந்த காரணத்தால் ஐரோப்பியரைப் பற்றியும் கிறித்தவம் பற்றியும் சில பழமொழிகள் தமிழில் வழங்கி வருகின்றன. அவற்றுள் பின் வருவன குறிக்கத்தக்கவை.[9]

(1) உடுத்துக்கெட்டான் வெள்ளைக்காரன், உண்டு கெட்டான் சோனகன், புதைத்துக் கெட்டான் தமிழன்.

(2) உன் சமர்த்திலே குண்டு பாயாது.

(3) ஊசியின் காதிலே ஒட்டகம் நுழையுமா?

(4) எத்தனை தரம் சொன்னாலும் பரங்கி வெற்றிலை தின்னான்.

(5) ஒரு குண்டிலே கோட்டை பிடிக்கலாமா?

---

8. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 62—66

9. ஷை. பக். 67—69

(6) ஒரு சுருட்டுப் பத்துநாள் குடிப்பான்.

(7) குண்டுபட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானும்.

(8) குண்டும் இல்லாமல் மருந்தும் இல்லாமல் குருவி சுடலாமா?

(9) தண்டச் சோத்துக்காரா குண்டு போட்டால் வாடா.

(10) தாடி பற்றிக்கொண்டு எரியச்சே சுருட்டுக்கு நெருப்புக் கேட்கிருன்.

(11) தீர்க்கதரிசி பீங்கான் திருடி.

(12) துப்பாக்கி வயிற்றிலே பீரங்கி பிறந்தது போல.

பீட்டர்பெர்சிவல் ஐயர் 19-ஆம் நூற்ருண்டில் தமிழில் வழங்கும் பழமொழிகளுள் ஏறத்தாழ இரண்டாயிரம் பழமொழிகளைத் திரட்டி வெளிப்படுத்தினுர். இவ்வாறே லாசரஸ் ஐயர் பத்தாயிரம் பழமொழிகள் அடங்கிய நூலொன்றை வெளியிட்டார்.[10]

திருக்குறளை வீரமாமுனிவர் இலத்தீனிலும், கிரால் என்பவர் செர்மானியத்திலும் போப்பையர் ஆங்கிலத்திலும், லெமிரேசா என்பவர் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டனர். இப்பெருமக்களின் தொண்டிஞல் திருக்குறளின் சிறப்பு உலகெல்லாம் பரவியுள்ளது. கால்டுவெல் ஐயர் கொற்கை, காயல் என்னுமிடங்களை அகழ்ந்து பார்த்து, அவற்றின் பழமையையும் பெருமையையும் இந்திய அரசாங்கத்திற்கு உணர்த்திஞர். ஜாகர் என்ற செர்மானிய அறிஞரும், ரேயர் என்பவரும் ஆதிச்சநல்லூர் மேட்டின் ஒரு பகுதியை அகழ்ந்து

10. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறித்துவத் தமிழ்த் தொண்டர், பக். 88—89

ஆராய்ந்து நமது பழம் பெருமையை அறிவித்தனர். இந்திய மொழிகளில் மிகவும் பழமை வாய்ந்தது தமிழே என்பதையும், தமிழ், தெலுங்கு ஆகிய தென்னாட்டு மொழிகளும் வட இந்தியாவிலுள்ள இராஜ் மகால் முதலிய திருந்தாத மொழிகளும் ஓர் இனத்தனவே என்பதையும் உலகறியச் செய்த **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்ற நூலை எழுதிய பெருமை கால்டுவெல் ஐயருக்கே உரியது.[11]

பைபிள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதால் இயேசு நாதரின் வரலாறும் அவர் அறிவுரைகளும் தமிழகத்தில் நன்கு பரவின. எளிமை, அன்பு, பொறுமை, நல்லொழுக்கம் முதலிய பண்புகள் தமிழரிடம் மலர அந்நூல் ஓரளவு துணை புரிகின்றது என்பதில் ஐயமில்லை.

கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் மக்களுக்காகக் கல்வி நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் தோற்றுவித்தனர்; வாழ்வற்ற மக்களுக்கு வாழ்வளித்தனர். இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பாலான கிறித்தவர் கல்வி கற்றிருப்பதற்குக் கிறித்தவர் சபைகளின் தொண்டே சிறந்த காரணமாகும். இன்று தமிழர் வாழ்வில் மேனாட்டு நாகரிகம் நன்கு பரவியிருப்பதற்குக் கிறித்தவ ஆட்சியே காரணமாகும்.

## இந்தியக் கிறித்தவர்

**வேதநாயகம் பிள்ளை:** இவர் முனிசீபாக இருந்தவர்; சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர்; சிறந்த புலவர்; பெண்கள் முன்னேற்றத்திற்காகப் **பெண்மதிமாலை** என்னும் செய்யுள் நூலைப்பாடினார்; சமயப் பொது நோக்கிற்காகச் சர்வ சமய சமரசக் கீர்த்தனம் என்னும் செய்யுள் நூலைப் பாடினார். இவர் எழுதிய பிரதாப முதலி

11. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறித்துவத் தமிழ்த் தொண்டர், பக். 84, 85, 89—91

யார் சரித்திரம் மிகச் சிறந்த கற்பனைக் கதை. அது தமிழில் எழுந்த முதல் நவீனம் என்று சொல்லலாம்.

**கிருஷ்ண பிள்ளை:** இவர் திருநெல்வேலித் தமிழர். ஜான் பன்யன் ஆங்கிலத்தில் எழுதிய மோட்சப் பிர யாணம் என்னும் ஆங்கில நூலை **இரட்சணிய யாத்திரிகம்** என்று தமிழ்க் காவியமாகப் பாடியுள்ளார்.

**வேதநாயக சாஸ்திரியார்:** இவரும் திருநெல்வேலித் தமிழர்; தஞ்சையில் பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்து கொண்டு, பராபரன் மாலை, ஞானக் கும்மி, ஆதி ஆனந்தம் என்னும் பாடல் நூல்களை இயற்றினார்; **பெத்லகேம் குறவஞ்சி** என்னும் நாடக நூலையும் இயற்றினார்.

**சற்குணம் உவின் பிரட் ஐயர்:** இவரும் திருநெல் வேலி மாவட்டத்தில் நாசரேத் ஊரில் பிறந்தவர்; பல மொழிகளைக் கற்றவர், ஜான் பன்யன் எழுதிய 'ஹோலி வார்' என்னும் ஆங்கில நூற்பொருளைத் 'திருப் போரா டல்' என்னும் பெயரில் மொழி பெயர்த்தார்; **தாவீது அரசன்** அம்மானை, உதிர மகத்துவம், இரத்தினவளி நாடகக் கதை முதலிய நூல்களை இயற்றினார்.

**நயனப்ப முதலியார்:** (இவர் காலம் கி. பி. 1779 முதல் 1845 வரை) இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர். இவர் திருச்சிற்றம்பலக் கோவை, தஞ்சைவாணன் கோவை, ஒருதுறைக் கோவை, நாலடியார், திவாகரம், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களை ஏட்டுப் பிரதியிலிருந்து அச் சிட்டு வெளிப்படுத்தினார்.

**பவர் ஐயர்:** இவர் ஆங்கிலோ—இந்தியர்; தமிழை நன்கு கற்றவர். இப் பெரியார் விசுவாசப் பிரமாண விளக்கம், நியாயப் பிரமாண விளககம், வேத அகராதி, தரும சாஸ்திர சாரம் முதலிய நூல்களைச் செய்திருக் கிறார்.

**வித்துவான் சாமிநாத பிள்ளை:** இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர்; எல்லிஸ் துரையின் தமிழாசிரியர். இவர் நசரைக் கலம்பகம், சாமிநாதப் பிள்ளைத் தமிழ், ஞானுதிக்க ராயர் காப்பியம் என்ற நூல்களைப் பாடினார்.[12]

**தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்:** இவர் சிறந்த மருத்துவர்; இசை அறிவு மிகுந்தவர். **கருணாமிர்த சாகரம்** என்ற அரிய இசை நூலை எழுதிப் புகழ் பெற்றவர்.

மேலும் பல்வேறு கிறித்தவப் பெருமக்கள் தமிழில் பல நூல்களை எழுதியுள்ளனர். இத் தொண்டினால் தமிழ்ச் செய்யுள் நூல்களும் உரைநடையும் எண்ணிக்கையிலும் பொருளிலும் வளரலாயின. கிறித்தவ சமயச் செய்திகளைத் தமிழர் அறியவும் பல உண்மைகளை உணரவும் வாய்ப்பு ஏற்பட்டது.

---

12. மயிலை. சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 125—131

# 8. அயல் நாடுகளில் தமிழர் செல்வாக்கு

## கிறிஸ்துவுக்கு முன்

தென் இந்தியாவில் தமிழ், தெலுங்கு கன்னடம் மலையாளம், துளுவம் என்னும் மொழிகள் திராவிட மொழிகள். இவ்வாறே நடு மாகாணத்திலும், வங்காள மலைப் பகுதிகளிலும் கோண்டு, இராஜ்மகால் என்னும் மொழிகள் பேசப்படுகின்றன. பலுசிஸ்தானத்தில் பிராகுயீ (Brahui) என்னும் திராவிட மொழி பேசப்படு கிறது. ஹரப்பா, மொகஞ்சதரோ என்னும் இடங்களில் திராவிடர் நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே, ஆரியர் வருகைக்கு முன் இந்தியாவில் திராவிடர் வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவு. தென் பாரசீகத்திலும் திராவிட இனம் இருக்கிறது. யூப்ரடிஸ், டைகரிஸ் என்னும் ஆறுகளுக்கு இடைப்பட்ட சமவெளியில் வாழ்ந்த சுமேரியர் உருவ அமைப்பிலும், தலை அமைப்பிலும் தென் இந்தியத்திராவிடரையே ஒத்திருந்தனர் என்பது ஆய்ராச்சி யாளர் முடிபு. சுமேரியர் நாட்டில் மலையாள நாட்டுத் தேக்கமரத் துண்டும் மெல்லிய ஆடையும் (மஸ்லின் ஆடை) கண்டெடுக்கப்பட்டன. இவை இரண்டும் தென் நாட்டில் இருந்து சென்றவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவற்றின் காலம் ஏறத்தாழக் கி. மு. 3000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதும் அவர் எண்ணமாகும்.

கிரேக்க நாகரிகத்திற்கு முற்பட்டது எகிப்திய நாகரிகம். கி. மு. 2000 ஆண்டுகட்கு முன் பாரசீக வளைகுடா வழியாக இந்தியாவுக்கும் எகிப்துக்கும் கடல் வாணிகம் நடைபெற்றது. தென் இந்திய வணிகர் தம் நாட்டுப் பொருள்களை அரேபியரிடம் விற்றனர்; கி. மு. 26-ஆம் நூற்றாண்டில் யானைத்தந்தம், ஆடைகள், மணப் பொருள்கள் என்பவை எகிப்துக்குச் சென்றன என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[1]

அகில்—சந்தனம் முதலிய வாசனைக் கட்டைகள் எகிப்துக்குச் சோமாலிலந்து வழியாகச் சென்று சேர்ந்தன. கி. மு. 12-ஆம் நூற்றாண்டில் சீன வணிகர் மலேயா நாடுகளில் வந்து வாணிகம் செய்து வந்தனர். சீனத்துப் பட்டும் சர்க்கரையும் தமிழகத்திலும் மேல்நாடுகளிலும் இறக்குமதி ஆயின. சீனத்துப் பொருள்கள் மேற்குக் கடற்கரை வழியாகவே எகிப்துக்குச் சென்றன. வெற்றிலை (வெறுமை—இலை)—இதன் பெயர் என்ன? இது இந்தியப் பொருளன்று. இது மலேயாவிலிருந்து இறக்குமதியாகி யிருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[2]

கி. மு. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் அரசனுக்குத் தமிழ்நாட்டுக் கப்பல்கள் வாயிலாக மயில்தோகை, யானைத் தந்தம், மணப்பொருள்கள் முதலியன சென்றன. ஈப்ரு மொழியிலுள்ள 'துகி' என்பது தமிழ்த் தோகை என்பதாகும்; 'அகல்' என்பது அகில் என்பதாகும். இந்திய இரும்பு அசீரியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பஞ்சைத் தரும் பருத்திச் செடிகளும் இலவ மரங்களும் 'நினவெஹ்' என்னும் நகரில் நடப்பட்டன.

1. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 36—43
2. Ibid pp. 101—102

சிறுத்தை முதலிய விலங்குகளின் தோல்கள் மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நல்லெண்ணெயும் அனுப்பப்பட்டது. திமில் உடைய எருதுகள் பாரசீக வளைகுடாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. பொனீசியர் கப்பல்களில் சேர நாட்டு மிளகு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. அக்காலத்தில் ஏடன் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது. தமிழ் வணிகர் கொண்டு சென்ற பொருள்களை அரேபியர் ஏடன் என்ற துறைமுகத்தில் பெற்று, ஆப்பிரிக்கருக்கு விற்றனர்.[3]

கி. மு. 606-இல் அசீரியப் பேரரசு மறைந்தது. பாபிலோன் நகரம் வாணிகத்தில் சிறந்த நகரமாக மாறியது. யவனர், யூதர், பொனீசியர், இந்தியர், சீனர் என்பவர் தங்கள் பொருள்களைக் கொண்டு சென்று, அந்நகரத்தில் விற்கலாயினர்; அந்நகரத்தில் தென்னிந்திய வணிகர் குடியேறி வாழலாயினர். அக்குடியேற்றம் கி. பி, 7-ஆம் நூற்றாண்டு வரையில் அந்நகரில் தொடர்ந்து இருந்து வந்தது. கி. மு. 538-இல் சைரஸ் என்ற பாரசீகப் பேரரசன் பாபிலோனியப் பேரரசை வீழ்த்தினான். அவனுக்குப் பின் வந்த டேரியஸ் தரைவழி வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் பெருக்கினான். அலெக்ஸாண்டரால் ஏற்படுத்தப்பட்ட அலெக்ஸாண்டிரியா நகரம் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நடைபெற்ற கடல் வாணிகத்தில் சிறந்த பங்கு கொண்டது. சூயஸ் கால்வாய் வழியாகவும் தரைவழியாகவும் வாணிகம் நடைபெற்றது. இவ்வாணிகத்தால் எகிப்து, முன் இழந்த வாணிகப் பெருமையை மீண்டும் பெற்றது. கி. மு. 3-ஆம் நூற்றாண்டின் பேரரசனாக விளங்கிய முதலாம் தாலமியின் ஊர்வலங்களில் இந்தியப் பெண்கள் காணப்பட்டனர்; இந்திய

3. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 129—184

வேட்டை நாய்களும், இந்தியப் பசுக்களும், இந்திய மணப் பொருள்களும் காணப்பட்டன.

கிறித்துவுக்கு முற்பட்ட முதல் ஐந்து நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடைபெற்ற வாணிகத்தில் கிரேக்கர் சிறந்த பங்கு கொண்டனர். தமிழ் வாணிகம் சிறப்புற நடைபெற்றது. அவர்கள் மொழியில் அரிசி, என்பது 'ஒரிஸா' என்றும், கருவா என்பது 'காப்பியான்' என்றும், இஞ்சிவேர் என்பது 'சிக்கிபெரஸ்' (Ziggiberes) என்றும் பிப்பிலி என்பது 'பெப்பரி' என்றும் மாறி வழங்கலாயின.

ரோமப் பேரரசனான அகஸ்டஸ் கி. மு. 30-இல் எகிப்தைக் கைப்பற்றினான். அவன் ரோமப் பெருநாட்டுக்கும் இந்தியாவுக்கும் நேரிடையான கடல் வாணிகத்தை வளர்க்க முயன்றான். தமிழ் வேந்தரிடமிருந்து வணிகர் தூதுக் குழுக்கள் அப்பேரரசனைச் சென்று கண்டன. அப்போது நடைபெற்ற வாணிகத்தில் இந்திய வாணிகமே ரோமப் பெருநாட்டு வாணிகத்தைவிடச் சிறந்திருந்தது. பண்டமாற்றுக் குறைவாக இருந்தமையால், ரோம நாணயங்கள் மிகுதியாகச் செலவாயின.

இந்திய யானைகள், புலிகள், சிறுத்தைகள், குரங்குகள் மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இந்திய வேட்டை நாய்களுள் தமிழகத்து நாய்கள் இலக்கியப் புகழ் பெற்றவை.

" கானுறை வாழ்க்கைக் கத நாய் "

" மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய் "

எனவே, கிளிகளும், மயில்களும் அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டவாறே தமிழகத்து வேட்டை நாய்களும் மேனாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம்.

ரோமப் பெருநாட்டில் தமிழகத்து முத்துக்கள் மிகுதியாக விலையாயின. முத்துக்கள் அருகி வழங்கிய போது ஒன்று எட்டாயிரம் பவுன் மதிக்கப்பட்டதாம். பொனீசியர் தமிழ் நாட்டு மிளகை வாங்கி, ரோமப் பெரு நாட்டில் விற்பனை செய்தனர். அதுவும், பலநிற ஆடை களும் அவர்களது சிறப்பு வாணிகமாம். இலவங்கப் பட்டை எகிப்தில் மிகுதியாகச் செலவானது; பின்னர், டேரியஸ் காலத்தில் பாரசீகப் பெருநாட்டில் மிகுதி யாகத் தேவைப்பட்டது. இஞ்சி மருந்துக்குப் பயன் படுத்தப்பட்டது. கிரேக்கரும் பிறரும் நல்லெண்ணெயை நன்கு வரவேற்றனர். கிரேக்க நாட்டுக் கோவில்களில் காட்சிப் பொருள்களாகத் தேங்காய்கள் வைக்கப்பட்டன. அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. சொபொகிலஸ் (Sophocles) என்பவர் அரிசி ரொட்டிகளைப் பற்றிக் குறித்துள்ளார். மலையாளத் தேக்கும் இறக்குமதி செய்யப்பட்டது. இந்தியத் தேக்கு கொண்டு பாரசீக வளைகுடாவில் கப்பல்கள் கட்டப்பட்டன.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி யில் இந்தியத் தலைவர் இருவர் யூப்ரடிஸ் ஆற்றின் மேல் புறத்தில், வான் ஏரிக்கு மேற்புறத்தில் குடியேறினர். அங்குக் கண்ணனுக்கும் பலதேவனுக்கும் இரண்டு கோவில்கள் கட்டினர். கண்ணனும் பலதேவனும் அவதாரங்கள் என்று புராணங்கள் கூறினும், அவ்விரு வரையும் சேர்த்து வடநாட்டில் வழிபட்டதாகச் சான்று இல்லை. ஆனால் தமிழகத்தில் கண்ணனாகிய மாயோன் முல்லைநிலத் தெய்வமாக வழிபடப்பட்டான். வெண் ணிறமுடைய பலதேவனும் கோவிலில் வழிபடப்பட்டான்; அவனுக்குத் தனிக்கோவிலும் இருந்தது.

" வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"

என்பது சிலப்பதிகாரம்.

மேலும் பலதேவனுக்குப் பனைக் கொடி உரியது. வட இந்தியாவில் கங்கைச் சமவெளியில் பனைமரம் செழிப்பதில்லை. தமிழகத்திலேயே பனைமரங்கள் மிகுதியாகும். எனவே, தமிழகத்திலிருந்து யூப்ரடிஸ் கரைக்குச் சென்ற தமிழ்த் தலைவர்களே அங்குக் கண்ணனுக்கும் பலதேவனுக்கும் கோவில்கள் கட்டினர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

கர்னல் ஜெரினி என்ற ஆராய்ச்சியாளர், "ஏசுப் பெருமானுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வட இந்தோ-சீனத்திற்குத் தரை வழியாகவும் தென் இந்தோ சீனத்திற்குக் கடல் வழியாகவும் வணிகர் சென்று வந்தனர்" என்று கூறியுள்ளார். தமிழர் அங்கு வாணிகம் செய்து வந்தனர். அந்நாட்டில் தக்கோலா (தக்கோலம்) என்பது சிறந்த வணிக நகரமாகும். சென்னைக்கருகில் உள்ள 'தக்கோலம்' என்னும் ஊரின் பெயர் இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

சீனத்துப் பட்டும் பிற பொருள்களும் தரை வழியாக மேல் நாடுகளுக்குச் சென்றதோடு, கடல் வழியாகவும் சென்றன. தமிழர் அவற்றைச் சூயஸ் கால்வாய் வரையில் கொண்டு சென்று யவன வணிகர்க்கு விற்று வந்தனர்.

பர்மா, மலேயா, சீனம் முதலிய நாடுகளுடன் தமிழகம் வாணிகம் செய்து வந்தது. தமிழகப் பொருள்களுள் மிகச் சிறந்தவை, மிளகும் மணப் பொருள்களும் ஆகும். தமிழ் வணிகர் இவ்விரண்டிற்கும் பதிலாகப் பட்டும் சர்க்கரையும் பெற்றனர்.

## கிறிஸ்துவுக்குப் பின்

தமிழகம் ரோமப் பேரரசுடன் கிறித்துவுக்குப் பின்னும் தொடர்ந்து வாணிகம் செய்து வந்தது. இரும்பு,

விலங்குகளின் தோல்கள், ஆட்டு மயிர், நெய் முதலியன ரோமப் பெருநாட்டிற்கு அனுப்பப்பட்டன. யானைத் தந்தம் மிகுதியாக அனுப்பப்பட்டது. உருவச் சிலைகள், தேர்கள், வண்டிகள், மேசைக் கால்கள், சீப்புகள் முதலியன ரோமப் பெரு நாட்டில் தந்தத்தால் செய்யப்பட்டன. மன்னார் வளைகுடாவில் எடுக்கப்பட்ட முத்துக்கள் ரோமப் பெருநாட்டுப் பெண்மணிகளை அழகுபடுத்தின. "இங்ஙனம் பெண்கள் முத்துக்களை அணிந்து வருவதால் ரோமப் பெருநாட்டின் செல்வம் வற்றி வருகிறது," என்று திபெரியஸ் (கி. பி. 16—37) என்ற ரோமப பேரரசன் செனட் சபைக்கு எழுதியுள்ளான். இதைக்கொண்டு முத்து வாணிகம் எந்த அளவு ரோமப் பெரு நாட்டில் நடந்திருத்தல் வேண்டும் என்பதை எளிதில் அறியலாம். தமிழகத்துப் பொருள்களுக்குப் பதிலாக ரோம நாட்டு பொன், வெள்ளி நாணயங்களும், மதுவகைகளும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டன.

தமிழகத்திலிருந்து ரோமப் பெரு நாட்டுக்குச் சென்ற ஒவ்வொரு கப்பலிலும் பாதிக்கு மேற்பட்ட சரக்கு மிளகாகவே இருந்தது. ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெல்லப்பாகு, நல்லெண்ணெய் முதலியனவும் உறையூரில் நெய்யப்பட்ட மிகவுயர்ந்த மெல்லிய ஆடை வகைகளும் ரோம நாட்டுக்கு அனுப்பப்பட்டன; தேக்கு, அகில், சந்தனம் முதலிய மரத் துண்டங்களும் அனுப்பப் பட்டன. தேங்காய், நெய், வாழை, அரிசி, சோளம், கம்பு முதலிய தானியங்கள், புளி, வெற்றிலை, பாக்கு முதலியனவும் ஏற்றுமதி செய்யப் பெற்றன. முசிறித் துறைமுகத்திலிருந்து வயிரம் முதலிய விலை உயர்ந்த மணிகள் ரோமப் பெருநாட்டுக்கு அனுப்பப்பட்டன.

இப்பல பொருள்களையும் பெற்றுக் கொண்ட ரோமர்கள் இவற்றுக்குப் பதிலாகப் பொன், வெள்ளி நாணயங்களையும் உயர்ந்த மதுவகைகளையும், பவளம், ஈயம்,

தகரம், எந்திரப்பொறிகள் முதலியவற்றையும் ஏற்றுமதி செய்தனர்.

கி. பி. 60-இல் **பெரிப்புளூஸ்** என்னும் நூலை எழுதிய ஆசிரியர் இந்தியத் துறைமுகங்களை நேரில் கண்டு பல செய்திகளைக் குறித்துள்ளார். சேர நாட்டில் தொண்டி, முசிறி, குமரி என்ற துறைகளையும், பாண்டிய நாட்டில் கொற்கைத் துறைமுகத்தையும், சோழநாட்டில் காவிரிப் பூம்பட்டினத்தையும் குறித்துள்ளார். கொற்கையில் கொடிய குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவரே முத்துக் குளித்து வந்தனர் எனக் கூறியுள்ளார். உறையூர் முத்து வாணிகத்திற்குப் பெயர் போனது என்றும் குறித்துள்ளார். கிழக்குக் கரைத் துறைமுகங்களிலிருந்து பெரிய கப்பல்கள் கங்கைக்கும் பர்மாவுக்கும் சென்றன என்றும் கூறியுள்ளார்.

கி. பி. 150-இல் தமது குறிப்பு நூலை வரைந்த **தாலமி** என்பவர் பெரிப்ளூஸ் நூலாசிரியரை விடத் தமிழகத்தைப் பற்றி மிகுதியான விவரங்களைத் தந்துள்ளார். அவர் தென் இந்தியாவைப் பார்க்கவில்லை; ஆயினும் தென் இந்தியாவில் தங்கி இருந்த தம்மவர் கூறியவற்றையே விவரமாக எழுதியுள்ளார். அவற்றை நோக்க, தமிழகத்தை முடியுடை மூவேந்தரும் சிற்றரசர் பலரும் ஆண்டு வந்தனர் என்பதும், ஏறத்தாழச் சமநிலையில் இருந்தனர் என்பதும் தெரிகின்றன. சேரர், ஆயர், கரையாயர் (கரையாளர்), பாண்டியர், பரதர், சோழர், அருவாளர் எனப் பல இனத்தவர் தமிழகத்தில் இருந்தனர் என்று அவர் குறித்துள்ளார். கருவூர், மதுரை, உறையூர், மாவிலங்கை (மாமல்லபுரம்), தொண்டி, முசிறி, கோட்டாறு, குமரி, கொற்கை, தனுக்கோடி, பெருங்கரை (பெருந்துறை?), கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம், மோகூர் முதலிய நகரங்கள் அவரால் குறிக்கப்பட்டுள்ளன.

மதுரையில் வையை ஆற்றுக் கரைப் பகுதிகளிலும் பிற வெளியிடங்களிலும் கணக்கற்ற ரோமச் செம்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை மதுரையில் இருந்த யவன வணிகர் தம்முள் வழங்கி வந்த நாணயங்கள் ஆகலாம். எனவே, யவனர் பலர் மதுரை மாநகரில் தங்கியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[4]

காவிரிப்பூம்பட்டினம் முதலிய துறைமுக நகரங்களில் யவனர் முதலிய அயல்நாட்டு வணிகர் தங்கி இருந்தனர் என்பது சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலியவற்றால் அறியக் கிடைக்கிறது.

" யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப.'[5]

" பேரி யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி."[6]

இவற்றால் யவன வணிகர் தேறலையும் பொன் நாணயங்களையும் தமிழகத்தில் கொடுத்து, மிளகு முதலியவற்றை வாங்கிச் சென்றமை உணரப்படும்.

" மத்திகை வளை இய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் "[7]

---

4. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 303—312, 317—319
5. புறநானூறு, 56
6. அகநானூறு, 149
7. முல்லைப் பாட்டு, வரி 59—61

" கடிமதில் வாயில்காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர் "[8]

என்ற அடிகள் யவன வீரர் தமிழரசரிடம் பணிபுரிந்து வந்ததைப் பகர்கின்றன.

ரோம நாட்டுப் பொறியியல் வல்லுநர் (Engineers) தமிழரசர் கோட்டை வாயில்களிலும் கோட்டைகளிலும் இயந்திரப் பொறிகளை அமைத்துத் தந்தனர் என்பது,

" முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப "

என்னும் நூற்பாவிற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் கூற்றால் அறியப்படும்.

"முழு அரணாவது, மலையும் காடும் நீருமல்லாத அக நாட்டுள் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு புறஞ் சூழ்ந்து, அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதணமும் மெய்ப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ்சீப்பு முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்".[9]

மதுரை கோட்டை மதில் மீது பலவகை இயந்திரப் பொறிகள் இருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. வளைந்து தானே எய்யும் இயந்திர வில், கரிய விரலை உடைய குரங்குபோல் இருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி, கல்லை உமிழும் கவண், காய்ந்து இறைத்தலால் சேர்ந்

8. சிலப்பதிகாரம், காதை 14, வரி 66—67
9. தொல்காப்பியம், புறத்திணை இயல், நூற்பா 10 உரை

தாரை வருத்தும் நெய், செம்பை உருக்கும் மிடா, உருகக் காய்ச்சி எறிவதற்கு எஃகு பட்டிருக்கும் உலைகள், கல் இட்டு வைக்கும் கூடை, தூண்டில் வடிவாகச் செய்து விடப்பட்டு வைத்து மதில் ஏறும் எதிரிகளைக் கோத்து வலிக்கும் கருவி, கழுக்கோல் போலக் கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி, ஆண்டலைப்புள் வடிவாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி வரிசைகள், மதில்மீது ஏறுவோரை மறியத் தள்ளும் இருப்புக்கவை, கழுக்கோல், அம்புக்கட்டு, ஏவறைகள், சிற்றம்புகள் வைத்து எய்யும் இயந்திரம், மதிலின் உச்சியைப் பிடிப்பவர் கைகளைக் குத்தும் ஊசிப் பொறிகள், பகைவர் மேல் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறி, மதில் உச்சியில் ஏறினவர் உடலைக் கொம்பால் கிழிக்கும் இரும்பால் செய்து வைத்த பன்றிப் பொறி, மூங்கில் வடிவாகப் பண்ணி அடிப்பதற்கு அமைத்த பொறி, கதவுக்கு வலிமையாக உள் வாயிற்படியில் நிலத்தில் விழவிடும் மரங்கள், கணைய மரம், விட்டேறு, குந்தம், ஈட்டி, நூற்றுவரைக் கொல்லி, தள்ளி வெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப் பொறி, ஞாயில்(குருவித்தலை).[10]

யவனர் கைத்தொழில் திறம் தமிழரால் பாராட்டப் பட்டது. யவனர் **பாவை விளக்குச்** செய்வதில் பெயர் பெற்றவர்.

> **" யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
> **கையேந் தையகல் "**

காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்துள் ஓர் அற்புத மண்டபம் அமைக்கப்பட்டது. அதனை,

10. சிலப்பதிகாரம், காதை 15, வரி 207—217 உரை,

" மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி "[11]

அமைத்தனர் என்று மணிமேகலை செப்புகிறது.

கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகக் கருதப்படும் பெருங்கதையிலும் யவனரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. யவனர் நகைகள் ("யவன மஞ்சிகை")[12] செய்தனர்; அழகிய பாவை விளக்குகளைச் செய்தனர்:

" யவனப் பாவை அணி விளக்கு "[13]

யவனர் மகர வீணையைத் தம் கைத்திறனால் அழகுபடுத்தினர்:

" ....................யவனக் கைவினை
மாணப் புணர்ந்த தோர் மகர வீணை "[14]

அவர்கள் அழகிய பெட்டிகளைச் செய்தனர்;[15] வண்டிகளில் தங்கத் தாமரைகளைப் பதித்து அழகு செய்தனர்.

" யவனக் கைவினை ஆரியர் புனைந்தது
தமனியத் தியன்ற தாமரை போல
.........................வையம் "[16]

பெருங்கதை எழுதப்பட்ட காலத்தில் சிறப்புடைய நகரங்களில் யவனர் சேரி இருந்தது என்பது,

---

11. காதை 19, வரி 107—9
12. 1.32, வரி 76
13. 1.17, வரி 175
14. 3.16, வரி 22—23
15. யவனப் பேழை 3.22, வரி 213
16. 1.38, வரி 233—34, 239

"ஐம்பதின் இரட்டிய யவனச் சேரி"[17]
என்பதால் அறியப்படும்.

கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் ரோமைக் கைப்பற்றிய அலரிக் என்பவன் மூவாயிரம் பவுண்டு நிறையுள்ள மிளகைக் கைப்பற்றினான் என்பது அறியப்படுவதால், தமிழக வாணிகம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டிலும், ரோமப் பெருநாட்டுடன் தொடர்ந்து நடைபெற்று வந்தது என்பது தெரிகிறது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் அராபியர் சிரியா, எகிப்து, பாரசீகம் ஆகிய நாடுகளை வென்றனர்; இந்தியர் மேலை நாடுகளுடன் நடத்திய வாணிபத்தில் இடை ஆட்களாக இருந்து வேலை செய்தனர்.[18]

## பல்லவர் காலத்தில்

பல்லவர் காலத்தில் தமிழகத்திற்கும் சீன நாட்டிற்கும் கடல் வாணிகம் நடைபெற்றது. சீனர் பௌத்த சமயத்தினர். அவர்கள் நாகப்பட்டினம் என்ற துறைமுக நகரத்தில் தங்கியிருந்தனர். அவர்களுக்காக அந்நகரத்தில் இரண்டாம் நரசிம்மவர்மன் ஒரு கோவிலைக் கட்டினான்; சீனப் பேரரசன் எழுதி அனுப்பிய பெயரை அக் கோவிலுக்கு வழங்கினான்.[19] இதனால் சீனர்—தமிழர் வாணிகமும் நல்லுறவும் பல்லவர் காலத்தில் வளர்ந்து வந்தன என்பது தெளிவு.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் மலேயா நாட்டில் தகௌபா என்னும் இடத்தில் மணிக்கிராமம் என்ற தமிழ் வணிகர் சங்கம் இருந்தது என்பது ஒரு கல்வெட்டால்

17. 3. 4, வரி 8
18. P.T.S. Ayyangar, History of the Tamils, p. 321
19. டாக்டர் மீனாட்சி, பல்லவர் ஆட்சியும் சமுதாய வாழ்வும், பக். 68—69

தெரிகிறது. சோழர் பகுதியிலிருந்து அங்குச் சென்ற வணிகன் ஒருவன், அப்போது தமிழகத்தை ஆண்ட 'அவனி நாரணன்' என்றவன் பெயரால் ஒரு குளத்தை அமைத்தான் என்று அக்கல்வெட்டுக் கூறுகிறது. 'அவனி நாரணன்' என்பது மூன்றும் நந்திவர்ம பல்லவனுடைய விருதுப் பெயர்களில் ஒன்று. தமிழ் வணிகர் மலேயா, சீனம் போன்ற கீழை நாடுகளிலும் தங்கி வாணிகம் செய்தனர் என்னும் உண்மையை இவற்றால் அறியலாம்.

## சோழர் காலத்தில்

முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் என்ற சோழ மன்னர்கள் சீனத்துக்குத் தூதுக் குழுவினரை அனுப்பினர். முதற் குலோத்துங்கனால் அனுப்பப்பட்ட தூதுக் குழுவில் 72 பேர் இருந்தனர். அவர்கள் யானைத் தந்தம், மணப் பொருள் முதலியவற்றை எடுத்துச் சென்றனர். சீனப் பேரரசன் பதிலுக்குப் பல பொருள்களை வழங்கிச் சிறப்பித்தான்.[20]

கி. பி. 1280-இல் குலசேகர பாண்டியன் ஜமாலுத்தீன் என்ற தூதுவனைச் சீனத்துக்கு அனுப்பினான்; தன் பகைவரை வெல்லத் தனக்கு உதவி புரியும்படி வேண்டினான். சீனப் பேரரசன் அத்தூதுவனை வரவேற்றான்; அவனுடன் தன் தூதுவனையும் பாண்டிய நாட்டிற்கு அனுப்பினான். அச்சீனத் தூதன் சிறிது காலம் பாண்டிய நாட்டில் தங்கியிருந்து கி. பி. 1282-இல் சீனத்துக்குத் திரும்பினான். பாண்டியரின் விலையுயர்ந்த முத்துக்களையும் நகைகளையும் மெல்லிய பட்டாடைகளையும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் (ஆண்டுதோறும்) தன் தூதர்

20. K.A.N. சாஸ்திரி, சோழர், பக் 266—267

வாயிலாகச் சீனத்துக்கு அனுப்பினான். கி. பி. 1285-இல் சீனத்திலிருந்து தென் இந்திய நாடுகளுக்குத் தூதர் வந்தனர். இது முதல் ஆண்டுதோறும் இரு நாடுகளிலிருந்தும் தூதர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.[21]

இவ்வாறு தமிழரசர்கள் சீனத்தோடு உறவு கொண்டாற் போலவே மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள் இவற்றை ஆண்ட அரசர்களோடும் நல்லுறவு கொண்டு இருந்தனர். கி. பி. 1006-இல் அந்நாட்டு அரசனது வேண்டுகோளால் முதலாம் இராசராசன் நாகப்பட்டினத்தில் புத்தர் கோவில் ஒன்றை எடுப்பிக்க உதவினான்; அதற்கு ஆனைமங்கலம் என்ற கிராமத்தை மானியமாக விட்டான்.[22]

## வாணிக உறவால் பயன்கள்

எகிப்து, சுமேரியா, கிரீட், மால்ட்டா முதலிய இடங்களில் சிவலிங்கங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. தென்னாட்டுக் கோவில் முறைப்படி சுமேரியாவில் கொடி மரம், நந்தி முதலியவை இருந்தன என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். துருக்கி, எகிப்து, சிரியா இவற்றின் பழைய வரலாறுகளிலும் காகஸஸ் மலைபற்றிய வரலாற்றிலும் காணப்படும் குறிப்புகள் சில, நம் புராணச் செய்திகளுடன் ஒன்றுபடுகின்றன. 'பால்' (Bal) என்னும் இளங்கடவுள் ஒரு மலையை வேலால் பிளந்ததாக ஒரு குறிப்புக் காணப்படுகிறது. இது முருகன் கிரவுஞ்சமலையைப் பிளந்த வரலாற்றோடு ஒன்றுபடுகிறதன்றோ? அரபு நாட்டுக் கதைகளுள்

---

21. V.R.R. தீட்சிதர் 'தென்னிந்தியாவும் சீனமும்,' பக். 16—18

22. K.A.N. சாஸ்திரி, ஸ்ரீ விஜய வரலாறு, பக். 75—76

ஒன்று நமது பெரிய புராணத்துள் காணப்படும் இயற்பகை நாயனார் வரலாற்றை ஒத்துள்ளது. நபிநாயகத்திற்கு முன் வாழ்ந்த அரேபியர் தங்கள் கோவில்களில் தமிழரைப் போலவே பல கடவுளர் உருவங்களை வைத்து வழிபட்டு வந்தனர்.

பொனீசியர் மழிக்கப்பெற்ற தலையையும் துளையிடப் பெற்ற காதையும் உடையவராக இருந்தனர். அவர்கள் சிறந்த கடல் வாணிகர். இங்கிலாந்திற்கு உயர்ந்த ஆடைகளை முதன் முதலாகக் கொண்டு சென்றவர்கள் பொனீசியர்களேயாவர். அவர்களைப் போலவே மழித்த தலையையும் துளையிடப் பெற்ற காதையும் உடையவர்கள் நமது நாட்டில் வாழும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் ஆவர். இவர்களும் பல நூற்றாண்டுகளாகக் கடல் வாணிகத்தில் புகழ் பெற்றவர்கள். பொனீசியரோடு பழகியதால் இச் செட்டிமார்கள் தலையை மழித்துக் கொண்டனர்—காதுகளை துளையிட்டுக் கொண்டனர் போலும்!

அரிசி, இஞ்சிவேர், தோகை முதலிய தமிழ்ச் சொற்கள் ஈப்ரு முதலிய மொழிகளில் இடம் பெற்றுள்ளன என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் நோக்க, இந்நாடுகளில் தமிழ் வணிகர் சென்று குடியேறி இருந்தனர்—தங்கள் வழிபாட்டுக்குரிய கோவில்களை அமைத்துக் கொண்டனர்—நாளடைவில் அவர்களுடைய சொற்களும் பழக்க வழக்கங்களும் சமயச் செய்திகளும் வழிபாட்டு முறைகளும் அந்நாடுகளில் பரவின—இவ்வாறே அந்நாட்டு மக்கள் கதைகளும் பழக்கவழக்கங்களும் பிறவும் தமிழ் வாணிகரிடம் பரவின என்று கொள்ளுதல் முறையாகும்.

இங்ஙனமே மலேயா முதலிய கீழ்நாடுகளில் தங்கிய தமிழ் வணிகர் தாங்கள் தங்கியிருந்த இடங்களுக்குத்

தமிழ்ப் பெயர்களை இட்டு வழங்கினர். அவற்றுள் மதுரா (மதுரை) என்பது ஒன்று. அகத்தியர் கோயில்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. இராமாவ தார நிகழ்ச்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இந்தோ—சீனத்திலும் பிற இடங்களிலும் இந்துசமயக் கோயில்கள் சிற்பப் பேரழகுடன் சிறந்து காணப்படு கின்றன. தமிழர்க்கே உரிய மார்கழி நோன்பு—திருப் பாவை திருவெம்பாவை படித்தல் மலேயா நாட்டில் இன்றும் ஒருவாறு அம்மக்கள் பழக்கத்தில் இருந்து வருகின்றன. பல நூற்றாண்டுகளாக நடந்து வந்த வாணிகத் தொடர்பால் இவை ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலை.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

# 9. தமிழர் நாகரிகம்

மக்கள் உணவு, உடை, உறையுள், பயிர்த்தொழில், கைத்தொழில், கல்வி, வாணிகம், கலைவளர்ச்சி, சமயத் துறை முதலியவற்றில் நல்லறிவு பெற்று விளங்குதலும் பழகுதலும் நாகரிகம் எனப்படும். பழைய கற்கால மனிதன் அறிவாலும் ஆற்றலாலும் முன்னேறிப் புதிய கற்கால மனிதன் ஆனான். சக்கி முக்கிக் கற்களைக் கொண்டு தீ உண்டாக்கிய மனிதன், எண்ணெய் விளக்கைக் கண்டறிந்து பயன்படுத்தியது முன்னேற்றமாகும். மரப்பட்டையில் எழுதிய மனிதன் பனை ஓலையை எழுத்தாணிகொண்டு எழுதியது முன்னேற்றமாகும். வாழ்க்கைக்கு இன்றியமையாத இத்தகைய முன்னேற்றத் துறைகளின் தொகுப்பே நாகரிகம் எனப்படும்.

## அரசு

பழைய தமிழகப் பெரும்பகுதிகள் முடியுடை மூவேந்தரால் ஆளப்பட்டன. சிறு நிலப்பகுதிகள் சிற்றரசரால் ஆளப்பட்டன. சிற்றரசர்க்கு முடியில்லை; பேரரசருக்கு முடியிருந்தது. மன்னனுக்கு ஆட்சியில் யோசனை கூறவும் ஆட்சியைக் கவனிக்கவும் ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் சங்ககாலத்தில் இருந்தன. இத்தகைய குழுக்கள் சிறிது மாறுதலுடன் பின் நூற்றாண்டுகளிலும் இருந்து வந்தன. ஆட்சி விரிய விரிய, அரசியல் அலுவலர் தொகையும் அலுவல் துறைகளும் மிகுதிப்பட்டன. அரசன் குடிகளின் நலன்களைக் கண்

னும் கருத்துமாகப் பாதுகாத்தான்; ஆறுகள், ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் இவற்றை வெட்டுவித்தான்; ஆறில் ஒரு கடமை வாங்கினான்; உள்நாட்டு வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் ஊக்கினான்; வணிகத் துறையில் சிறந்தவர்க்குப் பட்டமும் பரிசும் வழங்கினான்; நாட்டுக்கு உயிர் குடிகள். ஆதலால், அவர்கள் நலனைத் தன் நலனாகக் கருதினான்; இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் உள்ள அறிஞர்களை ஆதரித்தான்.

## போர்க்கலை

சங்ககால மக்கள் போரை ஒரு கலையாகவே வளர்த்து வந்தனர்; ஒவ்வொரு வகைப் போருக்கும் இவ்விவ்வாறு செய்யப்படுதல் வேண்டும் என்று வரையறுத்து வைத்திருந்தனர்; ஒவ்வொருவகைப் போருக்கும் ஒருவகைப் பூவை அடையாளமாகச் சூடிக்கொண்டனர்; போருக்கென்றே இலக்கண நூலையும் வகுத்தனர். தொல்காப்பியப் புறத்திணை இயலும் பின்வந்த புறப்பொருள் வெண்பா மாலையும் போரைப் பற்றிய இலக்கணம் கூறுவன. இவை, தமிழர் போர்க்கலையில் எந்த அளவு முன்னேறியிருந்தனர் என்பதை நன்கு உணர்த்தும்.

## போர்க் கருவிகள்

சிலப்பதிகார காலத்தில் மதுரைக் கோட்டை மதில் மீது பலவகைப் போர்க் கருவிகள் இருந்தன என்பது தெரிகிறது. வீரர்கள் வில், வேல், சூலம், வாள் இவற்றைக் கொண்டு போரிட்டனர் வடவர் கூட்டுறவால் கதாயுதம் போன்றவை வழக்கிற்கு வந்தன. விஜய நகர ஆட்சிக் காலத்தில் குண்டுகளும் வெடி மருந்துகளும் பீரங்கிகளும் தோன்றின. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் தோன்றிய புதிய கருவிகள் நம் நாட்டிலும் இடம் கொண்டன.

**கல்வி**

சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் எங்ஙில மக்களாயினும் கல்வி கற்று வந்தனர்; அரசனால் மதிக்கப் பெற்றனர். மாதவி போன்ற நடன மகளிர் 64 கலைகளிலும் வல்லவராயிருந்தனர். பல்லவர் காலத்தில் காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்ற கவி பாடும் பெண்மணிகள் இருந்தனர். வடவர் கூட்டுறவால் வடமொழிக் கல்லூரிகள் தோன்றின. தமிழ்க் கல்வியும் நன்கு வளர்ந்தது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழ் நூல்கள் செய்யப்பட்டன வெனின், கல்வி வளத்தைப் பற்றிக் கூற வேண்டுவதில்லை அல்லவா? முசுலிம்கள் ஆட்சியில் உருது, பாரசீகம், அராபி, இந்துஸ்தானி என்ற மொழிகள் முசுலிம்களுக்குக் கற்பிக்கப்பட்டன. ஆங்கில ஆட்சியில் பலதிறப் பள்ளிகள் இருந்து கல்வி நிலையை உயர்த்தி வந்துள்ளன. அறிவுக் கல்வி, தொழிற்கல்வி ஆகிய இரண்டும் இப்பொழுது நன்கு வளர்கின்றன. உலக நாடுகளைப் பற்றிய அறிவு இன்றைய கல்வியால் நன்கு பரவி வருகின்றது.

**தொழில்கள்**

தொழில், பயிர்த் தொழில் என்றும் கைத்தொழில் என்றும் இருவகைப்படும். சிறந்த வாழ்க்கை நூலாகிய திருக்குறள் உழவு என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களைக் கூறுகின்றது. உழவன் சுறுசுறுப்பாக நிலத்தை உழுதல் — எருவிடுதல் — விதைத்தல் — களை யெடுத்தல் — பயிரைப் பாதுகாத்தல் என்பன பற்றிய செய்திகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. ஊர்களில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பயிர்த் தொழில் பற்றிய செய்திகளை நன்கு கவனித்து வந்தனர். வெண்ணெல், செந்நெல் என நெல்வகை பலவாக இன்று பெரு

கியுள்ளன. இன்று பல அணைக்கட்டுகள் கட்டப் பெற்று நீர்வசதி மிகுந்திருக்கிறது. பயிர்த் தொழிலில் பெரும் அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சங்க காலத்தில் நெசவுத் தொழில், பொற்கொல்லத் தொழில், தச்சுத் தொழில் (வண்டிகள்), தேர்கள் செய்தல், கொல்லத் தொழில், சலவைத் தொழில், போர்க் கருவிகள் செய்யும் தொழில், தோற்கருவிகள் செய்யும் தொழில், உடைகளைத் தைக்கும் தொழில், சரிகைத் தொழில், (கயிறு, வலை) பின்னல் தொழில், வாசனைப் பொருள் களைத் தயாரிக்கும் தொழில், முத்தெடுக்கும் தொழில், சங்கு அறுத்துப் பொருள்களைச் செய்யும் தொழில், துணி, நெட்டி முதலியவற்றால் பூக்கள், வாடாத மாலை, பொய்க் கொண்டை முதலியவற்றைச் செய்யும் தொழில், ஓவியத் தொழில், சிற்பத் தொழில், கட்டடத் தொழில், மட்பாண்டத்தொழில், தந்தத் தொழில், மாலை கட்டும் தொழில், குழல், யாழ்போன்ற இசைக்கருவிகளைச்செய்யும் தொழில், மீன்களைப் பதப்படுத்தல், உப்பு உண்டாக்குதல், மிதவை, ஓடம், படகு, கப்பல் இவற்றைச் செய்யும் தொழில், கன்னாரத் தொழில், சாறு இறக்குதல், சாறு விற்றல், இறைச்சி விற்றல், பனையோலைகளைக் கொண்டு பல வகைப் பொருள்களைச் செய்யும் தொழில் எனப் பல வகைக் கைத்தொழில்கள் சங்ககாலத்தில் இருந்தன.

பல்லவர் காலத்திலும் பிற்காலச் சோழர்காலத்திலும் இக் கைத்தொழில்கள் வளம் பெற்றன. பொன்னை உருக்கி நகைகள் செய்தல், பொன் நகைகளில் நவரத்தி னங்களைப் பதித்தல் ஆகிய இருவகை வேலைகளும் சங்ககாலம் முதல் இன்றுவரை இருந்து வருகின்றன. கோவில் வளர்ச்சி மிகுந்த பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் சிற்பத்தொழிலும், கட்டடத் தொழிலும், பொற்கொல்லத் தொழிலும் படிப்படியாக வளர்ச்சி

பெற்றன. இவ்வாறே ஓவியம் வரைதல், பல உலோகங் களினாலும் பாத்திரம் செய்தல் முதலிய தொழில் வகைகளும் முன்னேற்றம் பெற்றன. கோவில் பெருக்கத் தினால் மாலை கட்டும் தொழிலும் வளர்ச்சி பெற்றது. கண்ணி, தார், இண்டை என மலர் மாலைகளுக்குப் பல பெயர்கள் இருத்தலை நோக்க, பிற்காலத்தில் பல வகை மாலைகள் வழக்கில் இருந்தன என்பது தெரிகிறது.

பல்லவர் கப்பற்படை இலங்கைத் தீவுக்கு வீரர்களை ஏற்றிச் சென்றது. இவ்வாறே சோழர் கடற்படையும் வீரர்களை ஏற்றிச் சென்றது. அப்படை இலங்கை, நிக்கோபர், முந்நீர்ப் பழந்தீவுகள், சுமத்ரா, மலேயா முதலிய இடங்களுக்குச் சென்று வெற்றியுடன் மீண்டன. எனவே, சோழரிடம் மிகப் பெரிய கப்பல்கள் இருந்தன என்பது தெளிவு. அக்கால வணிகக் கப்பல்கள் சீனம் வரையில் சென்று மீண்டன. எனவே, வணிகக் கப்பல் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டும் அன்றோ? இவை அனைத்தையும் நோக்க, பிற தொழில்களைப் போலவே கப்பல் கட்டும் தொழிலிலும் வியக்கத்தக்க அளவு முன் னேற்றம் ஏற்பட்டிருந்தது என்பது தெளிவாகும்.

**வாணிகம்**

ஒரு நாட்டு வளத்திற்கு உழவும் வாணிகமும் உயிர் நாடி என்பது வள்ளுவர் கருத்து. நாட்டில் எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களும் விளைவதில்லை. எனவே, குறிப்பிட்ட பொருள்கள் விளையாத இடங் களுக்கு அவற்றை அனுப்புவதும், உள் நாட்டுப் பண் டங்களை விற்பதுவும், வெளி நாட்டுப் பண்டங்களை வருவித்து விற்பதுவும் வணிகர் தொழிலாகும். வாணி கத்தால் செல்வம் வளர் பிறைபோல வளரும். சங்க காலத்தில் மயிலிறகு, யானைத்தந்தம், மிளகு, மணப்

பொருள்கள் வடநாட்டுக்கும் அயல் நாடுகளுக்கும் அனுப் பப்பட்டன. கண்ணாடிப் பொருள்கள், பட்டாடைகள், இயந்திரக் கருவிகள், உயர்ந்த குடிவகைகள் முதலியன வெளிநாடுகளிலிருந்து விற்பனைக்கு வந்திருந்த பொருள்கள் எனப் பட்டினப்பாலை பகர்கிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

இக்கடல் வாணிகத்தைத் தமிழகத்தில் பெருக்கப் பல துறைமுகநகரங்கள் இருந்தன. அவற்றில் பல நாட்டு வணிகரும் தங்கி வாணிகம் செய்தனர்; கலங் கரை விளக்கங்கள் இருந்தன. இறக்குமதிப் பொருள் களை வைக்கவும் பண்டசாலைகள் இருந்தன; சுங்கச் சாவடி இருந்தது. துறைமுகத் தொழிலாளர் பலர் இருந் தனர். துறைமுக நகரங்களில் பெருங்குடி வணிகர் செல்வச் சிறப்பில் திளைத்தனர். வணிகர் தாழ்விலாச் செல்வத்தால் 'இளங்கோக்கள்' என்று அழைக்கப் பட்டனர்.

சங்க கால கடைத்தெருவைப் பற்றிய விவரங்களை அறிந்தால் அக்கால நாகரிகத்தைப்பற்றி ஓரளவு அறிந் தவராவோம். இக்காலக் கடைகளில் பெயர்ப் பலகைகள் இருக்கின்றன. சங்க காலத்தில் இது இன்ன கடை என்பதைக் கொடி அறிவித்தது. பாத்திரக் கடை, தோலாலான பொருள்களைக் கொண்ட கடைகள், பல வகைப் போர்க் கருவிகளைக் கொண்ட கடைகள், மூப்ப

துக்கு மேற்பட்ட ஆடைகளைக் கொண்ட கடைகள், நெட்டிப் பொருள்களைக் கொண்ட கடைகள், மெழுகுப் பொருள்களைக் கொண்ட கடைகள், பழக்கடைகள், மரப் பொருள்களைக் கொண்ட கடைகள், கூலக கடைகள் இவற்றைக் கொண்ட கடைத்தெரு ஒவ்வொரு பெரிய நகரத்திலும் இருந்தது. நால்வகைப் பொன்னை விற்கும் கடைகள், வைரம் முதலிய நவரத்தினங்களை விற்கும் கடைகள் என்பவை கடைத்தெருவில் தனிச் சிறப்போடு விளங்கின.

பல்லவர் காலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் இக்கடைத்தெரு மேலும் பொலிவு பெற்று விளங்கியது. சோழப் பேரரசர் காலத்தில் கடல் வாணிகம் சிறந்திருந்த காரணத்தால், கடைத்தெரு பன்மடங்கு பொலிவுபெற்று இருந்திருத்தல் வேண்டும் அன்றோ? வெள்ளையர் ஆட்சிக்குப் பிறகு எல்லா நாட்டுப் பொருள்களும் நம் கடைத் தெருக்களை அழகு செய்வதை நாம் அறிவோம். நாகரிக வளர்ச்சியின் காட்சிச்சாலை கடைத் தெருவே அல்லவா?

**உணவு**

சங்க காலத்தில் அறுசுவை உண்டி உண்ணப் பட்டது. நெய் பெய்து பல கறிகள் செய்யப்பெற்றன. குறிஞ்சி நில மக்கள் வேட்டையில் கிடைத்த விலங்குகளையும் பறவைகளையும் உண்டனர்; தேன், தினைமா, கிழங்கு வகைகள் முதலியவற்றையும் உட்கொண்டனர். முல்லை நில மக்கள் சோளம், கேழ்வரகு, நெய், தயிர், வெண்ணெய், மோர் முதலியவற்றை உட்கொண்டனர். மருத நில மக்கள் பலவகைச் சோற்றையும் காய்கறிகளையும் மிகுதியாக உண்டனர். நெய்தல் நில மக்கள் மீன், நண்டு, இறால், காய்ந்த மீன் வகைகள் இவற்றை மிகுதியாக உண்டனர். ஒரு நிலத்து மக்கள் தங்கள்

நிலப் பொருள்களைக் கொடுத்துப் பிற நிலப் பொருள்களை உணவின் பொருட்டு வாங்கிக் கொண்டனர். மாதுளங்காய், பாகற்காய், வெள்ளரிக்காய் முதலிய காய் வகைகள் பயன்பட்டன. பல வகை மா (மாவு) பயன்படுத்தப்பட்டது. பலவகை இனிய பானங்கள் வழக்கில் இருந்தன.

"பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி,
விருந்துற் றுற்றி இருந்தெனமாக"

என்னும் புறப்பாட்டு அடிகள் நோக்கத் தக்கவை. அக் காலத் தமிழ் மக்கள் ஆடு, மான், உடும்பு இவற்றின் இறைச்சியைப் பல வகையாகத் தயாரித்து உண்டனர். இறைச்சி கலந்து தயாரிக்கப்பட்ட சோறு 'ஊன் சோறு' எனப்பட்டது. அரசர்கள் தம்மை நாடிவந்த முத்தமிழ் வாணர்க்குச் சிறந்த முறையில் விருந்தளித்தனர் என்பதைப் பத்துப்பாட்டைக் கொண்டு நன்கறியலாம்.

வைதிகர், சமணர், பௌத்தர் இவர்கள் நுழைவுக்குப் பிறகு ஊன் உணவு ஓரளவு குறைந்தது; மரக்கறி உணவு ஓரளவு மிகுந்தது. சைவ வைணவ சமயங்கள் வளர்ச்சியடைந்த பிறகு மரக்கறி உணவு சிறிதளவு மிகுதிப்பட்டது என்று கூறலாம். பின் நூற்றாண்டுகளில் தெலுங்கர், கன்னடர், மகாராட்டிரர், முசுலிம்கள், கிறித்தவர் கூட்டுறவால் பலநாட்டு உணவு தயாரிக்கும் முறைகள் இந்நாட்டில் இடம் பெற்றன. உணவுப் பண்டங்களின் வகைகளும் பெருகின. அவற்றின் பெயர்களும் புதியனவாய்த் தோன்றின. மேனாட்டு நாகரிகம் பரவியுள்ள இக்காலத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பண்டங்களும் குடி வகைகளும் மிகுதிப்பட்டுள்ளன. வடநாட்டார் தொடர்பு வேரூன்றி உள்ள இக்காலத்தில், அவர்கள் தின்பண்டங்களும், உணவு வகைகளும் ஓரளவு பரவியிருக்கின்றன. சீனர், பாரசீகர், இலங்கையர், ஆங்கிலேயர் போன்ற அயல்

நாட்டார் உணவு விடுதிகளும் நம் நாட்டில் இருக்கின்றன. நாகரிகம் உயர உயர, உணவு வகைகளும் பெருகியுள்ளன.

**உடை**

சங்க காலத்தில் பஞ்சினாலும் பட்டினாலும் எலி மயிரினாலும் பலவகை ஆடைகள் நெய்யப்பட்டன. சாதாரண மக்கள் இடுப்பில் ஓர் ஆடையும் உடம்பைப் போர்க்க ஓர் ஆடையும் கொண்டிருந்தனர் என்பது, ''உடுப்பவை இரண்டே'' என்பதால் அறியப்படும். முனிவர்கள் மரவுரியாகிய இடுப்பாடையை அணிந்திருந்தனர். மார்பில் தோலாடை அணிந்திருந்தனர். பருத்திப்பஞ்சு நூலாகப் பெண்களால் நூற்கப் பட்டது; ஆடவரால் ஆடையாக நெய்யப்பட்டது. பால் ஆவி போலும் புகைபோலும் மிக மெல்லிய ஆடைகள் நெய்யப் பெற்றன. பல நிற ஆடைகள் வழக்கில் இருந்தன. முருகன் ''சிவந்த ஆடையன்'' என்று திருமுருகாற்றுப் படை பேசுகின்றது. ஆடை 'ஒலியல்' என்றும் பெயர் பெற்றது. செந்நிறக்காவி ஆடையும் வழக்கில் இருந்தது. பூப்புக்காலத்தில் மாதர் சிவந்த ஆடைகளை உடுத்தினர். கலவிக் காலத்தில் வெள்ளை ஆடையை உடுத்தினர் என்று நூல்கள் கூறுகின்றன. பகற் காலத்தில் பட்டாடை அணிந்த மகளிர் இரவுக் காலத்தில் பருத்தியாடை அணிந்தனர் என்று பட்டினப் பாலை பகர்கின்றது. பிறந்தநாள் விழாவில் அவ்விழாவுக் குரியவர் வெள்ளாடை உடுத்தினர். அரசன் மெய்க் காப்பாளர், தூதர் முதலியோர் உடம்பிற் சட்டையிடு தலும் தலையிற் பாகையிடுதலும் மரபு என்பதைச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

> '' சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
> கஞ்சுக முதல்வர் ஈரைஞ்ஞூற் றுவரும்''

சட்டை மெய்ப்பை என்றும் பெயர் பெற்றது. அரசனிடம் வேலை பார்த்த குதிரை வீரர் முதலிய அலுவலர் சட்டை அணிந்திருந்தனர். அரசனிடம் வேலை பார்த்த பெண்கள்

கச்சு அணிந்திருந்தனர். ஓவியங்களை அமைத்து ஆடை நெய்யும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்று மணிமேகலை கூறுகின்றது.

" வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் பாடம்"

என்பது மணிமேகலை.

ஒவ்வொரு துறையும் வளர்ச்சி பெற்ற பின்நூற்றாண்டுகளில் உடைவகைகளும் வளர்ச்சி பெற்றன. பலவகை இடுப்பாடைகள், மேலாடைகள், பாவாடைகள் பிற்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் பேசப்படுகின்றன. சோழர்கால ஓவியங்களாலும், நாயக்கர் கால ஓவியங்களாலும் மகாராட்டிரர்கால ஓவியங்களாலும்பின் நூற்றாண்டுகளில் உடைவகைகள் மிகுதிப்பட்டன என்பது தெரிகிறது. முகமதியர்கள், கிறித்தவர் சேர்க்கையால் உடைவகைகள் மிகுதிப்பட்டன. மேனாட்டு உடை இன்று பெருவழக்கில் அமைந்துவிட்டது. எனவே, காலப்போக்கில் உடையிலும் நாகரிகம் ஓங்கி வருகிறது. இன்று மகளிர்க்குரிய உடைவகைகள் கணக்கிலடங்கா. இயந்திரப் பெருக்கத்தாலும் விஞ்ஞான வளர்ச்சியாலும் பலவகைப் பொருள்களைக் கொண்டு பல நிற ஆடைகளும் பூ வேலைப்பாடு மிகுந்த ஆடைகளும் இக்காலத்தில் செய்து குவிக்கப்படுகின்றன.

## அணிகள்

சங்க கால அரசர் காலில் வீரக் கழலையும் கையில் தொடியையும் மார்பில் பலவகை அணிகளையும் அணிந்து வந்தனர். பொன்னில் கற்கள் வைத்து இழைக்கப் பெற்ற நகை 'இழை' எனப்பட்டது. மணிக் கற்களால் ஆன நகை 'கலன்' எனப்பட்டது. பெண்கள் கால் முதல் தலை வரையில் நகைகளை அணிந்தனர். இவ்வாறு மாதவி அணிந்து கொண்டாள் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, காற்சரி என்பவை காலணிகள். பொன்வளை

மணிவளை, சங்கவளை, பவழவளை, சித்திரவளை என்பன கையணிகள். வீரசங்கிலி, நேர்ஞ் சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்துமாலை முதலியன கழுத்தணிகள். முதுகு மறைய விடும் பின்தாலி என்பது ஒன்று. அவ்வாறே முன்தாலி என்பது மற்றொன்று. தெய்வ உத்தி, வலம்புரி, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி என்பவை தலை அணிகள். பல வகை மோதிரங்கள் விரலணிகள். அரசன் அரண்மனையில் பொற்கொல்லர் பலர் தொழில் செய்தனர். அவர் தம் தலைவன் அவ்வரசன் பெயரோடு தன் பெயரும் சேர்த்து வழங்கப்பட்டான். பொற்கொல்லர் நூற்றுவர் பின்னே வர வந்த தலைமைப் பொற்கொல்லன்... "வேந்தர் முடிமுதற் கலன்கள் சமைப்பேன்" என்று கோவலனிடம் கூறினான். மன்னனது முடி சமைத்தல் என்பது அரிய தொழில் நுட்பம் வாய்ந்தது. பொன் முடியில் பலவகை உயர்ந்த கற்களைப் பதித்துச் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகச் செய்யப்படுவது. சிறந்த பொற்கொல்லரே இதனைச் செய்து முடிப்பர். தாமம், முகுளம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்து வகைத் தோற்றம் தெரியும்படி பல நிற மணிகளை இழைத்து, மின்னலைப் போல ஒளிவிடும் திருமுடியை முருகப் பெருமான் அணிந்திருந்தார் என்று திருமுருகாற்றுப் படை கூறுகின்றது.

"ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப"

பல்லவர்கால ஓவியங்களிலும் (சித்தன்ன வாசல் ஓவியங்கள்) சிற்பங்களிலும் நூல்களிலும் இருந்து, பல வகைக் கழுத்தணிகளும் கையணிகளும் இருந்தன என்பதை அறிகின்றோம். சோழர்கால ஓவியங்களும் சிற்பங்களும் அக்கால அணிகளைக் குறிக்கின்றன. சுவாமிக்கும் அம்மனுக்கும் செய்யப்பட்ட அணிகளின் பெயர்கள் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. நாயக்கர் கால ஓவியங்களைக் கொண்டு சில அணிகளை அறிகின்றோம். நாகரிகம் மிகுந்த இக்காலத்தில், தொன்று

தொட்டு இருந்த காதணிகளும், கழுத்தணிகளும், கையணிகளும், காலணிகளும் பெரும்பாலும் மறைந்து விட்டன. இரண்டொரு அணிகளே அணியப்படு கின்றன.

**நாணயங்கள்**

சங்க காலத்தில் பொன் என்றும் காசு என்றும் பொன் நாணயங்கள் இருந்தன என்று கருத இடமுண்டு. பல்லவர் காலத்தில் பல நாணயங்கள் வழக்கில் இருந்தன. மாற்றுக் குறையாத நாணயம் துளையிடப்பட்டிருந்தது. அதனால் அது துளைப்பொன் எனப் பெயர் பெற்றது. போர்க் காலத்தில் மாற்றுக் குறைந்த நாணயங்களும் வெளியிடப்பட்டன. அவை தரக்குறைவாக மதிக்கப் பட்டன. அதனாற்றான் திருஞான சம்பந்தர் "வாசி தீரவே காசு நல்குவீர்" என்று இறைவனைப் பாடினார். சோழர் காலத்தில் செம்பாலும் பொன்னாலும் செய்யப்பட்ட காசுகள் வழக்கில் இருந்தன. சிலர் ஆட்சியில் புதுக் காசுகள் செய்யப் பெற்றன. எனவே, பழங்காசு புதுக் காசு என்ற வழக்கு ஏற்பட்டது. இவ்வாறே பாண்டி யரும் நாணயங்களை வெளியிட்டனர். தமிழகத்தை ஆண்ட எல்லா அரச மரபினரும் தம் இலச்சினையோடு நாணயங்களை வெளியிட்டனர். கொற்கை, காயல், காவிரிப்பூம்பட்டினம் முதலிய கடற்கரைப் பகுதிகளில் ரோம நாணயங்களும், நம் நாட்டுப் பல அரசர் நாணயங் களும் இன்றும் கிடைக்கின்றன. மறைந்த நகரங்களைக் குறிக்கும் இடங்களிலும் பல வகைக் காசுகள் கிடைக் கின்றன. தம்முடைய இலச்சினை முதலியவற்றைத் தயாரித்த அச்சில் செம்பையும் பொன்னையும் உருக்கி, வார்த்து, முறையே செம்பு நாணயங்களையும் பொன் நாணயங்களையும் செய்தமை அவர் தம் நாகரிகத்தை நன்கு காட்டுகிறதன்றோ! இன்று செம்பு, நிக்கல், வெள்ளி நாணயங்கள் வழக்கில் இருக்கின்றன. வெளிநாட்டு உறவில் பொற் காசுகளே இன்று பயன்படுத்தப்படு கின்றன.

# 10. தமிழர் நாகரிகம் II

## கட்டடக் கலை

மதுரை மாநகரம் தாமரை மலரைப் போன்ற அமைப்புடையதாய் இருந்தது. அம் மலரின் இதழ்கள் அடுக்கடுக்காகச் சூழ்ந்திருத்தல் போல மதுரையில் தெருக்கள் பலவரிசைகளாக அமைந்திருந்தன. தாமரை மலரின் நடுவில் பொகுட்டு இருப்பதைப் போல நகரின் நடுவில் பாண்டியனது அரண்மனை விளங்கியது. மலரில் மகரந்தப் பொடி நிறைந்திருப்பது போல மக்கள் மதுரையில் வாழ்ந்தனர். இது பரிபாடலில் மதுரையைப் பற்றிக் காணப்படும் வருணனை. சங்ககாலத் தமிழர் நகர அமைப்பில் பெற்றிருந்த கலை அமைப்பை இது நன்கு உணர்த்தும்.

பாண்டியனது அரண்மனை வாயில், தன்மீது உயர்த்தப்பட்ட கொடியோடு யானை நுழையத்தக்கதாக இருந்தது. உள்ளே அகன்ற முற்றம் இருந்தது. முற்றத்துக்கு அப்பால் மாடமாளிகைகள் உயர்ந்து விளங்கின. வாயிலின் இருமருங்கிலும் இலக்குமி நாமகள் உருவங்கள் சுவரில் அமைந்திருந்தன. முனிவரின் ஆசிரமங்கள் மலையை நடுவிற் பிளந்தாற் போன்ற அமைப்புடையவை.

மதுரை நகரில் நிலத்திற்கு அடியில் கழிநீர் செல்வதற்காக பெரிய சுருங்கை அமைக்கப்பட்டிருந்தது. கழிநீர் செல்லும் அவ்வழி ஒரு யானை செல்லத்தக்க வசதி பெற்றிருந்தது. இஃது ஒன்று கொண்டே அக்காலத்தாரது கட்டடக்கலை அறிவை நாம் நன்கு தெளியலாம்.

காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்தில் அற்புத மணிமண்டபம் இருந்தது. அதன் தூண்கள் பவழத்தால் அமைந்தவை; போதிகைக் கட்டைகள் பல வகை மணிகள் பதிக்கப்பட்டவை. மண்டபத்தின் மேல் கூரை பொன் வேயப்பட்டது. அதன் தரை சந்தனத்தால் மெழுகப்பட்டது. இந்த மண்டபம் மகதம், மகாராட்டிரம், அவந்தி, யவனம், தமிழ்நாடு இவற்றைச் சேர்ந்த பலதிறத் தொழிலாளரைக்கொண்டு அமைக்கப் பட்டது என்பதை நோக்க, பலநாட்டுத் தொழிலாளரும் சங்க காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து வேலை செய்தனர் என்பது தெரிகிறது.

பிற்காலச் சோழர் காலத்தில் பெரிய அரண்மனைகள் கட்டப்பட்டன. கங்கைகொண்ட சோழபுரமே புதிதாக அமைக்கப்பட்டது. வானளாவிய விமானங்களைக் கொண்ட பெரிய கோவில்கள் கட்டப்பட்டன. தஞ்சைப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழேச்சரம், தாராசுரம் கோவில், திரிபுவன வீரேசுவரம் என்பவை சோழர் காலக் கட்டடத் திறனுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

வானளாவிய கோபுரங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள், அகன்று உயர்ந்த மண்டபங்கள், திருமலை நாயக்கர் மகால், மதுரைப் புதுமண்டபம், இராமேசுரம் கோயில் என்பவை நாயக்கர் காலக் கட்டடக்கலை முன்னேற்றத்தை நன்கு தெரிவிப்பவை. தஞ்சை அரண்மனையில் உள்ள ஆயுதசாலை, ஏழடுக்கு மாடி, சங்கீத மகால், சரஸ்வதி மகால் முதலியன மகாராட்டிரர் காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இங்ஙனம் கட்டடக்கலை தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திருவாடானையில் அண்மையில் கட்டப்பட்ட கோவில் கோபுரம் இக்காலக் கட்டடக்கலையை நன்கு உணர்த்துவதாகும். இன்று பம்பாய்க் கட்டட முறையில்

வளமனைகள் கட்டப்படுகின்றன. இவ்வாறு, கட்டடக்கலை காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு வளர்ந்து கொண்டே வருகின்றது.

## ஓவியக் கலை

சங்க காலத்தில் திருப்பரங்குன்றம் கோவில் சுவரில் இரதி, மன்மதன், அகலிகை, இந்திரன், கௌதமன் முதலியவரைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. காவிரிப்பூம்பட்டினத்து வளமனைச் சுவர்களில் தேவர், மக்கள், பிற உயிர்களைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன என்று பரிபாடல் பகர்கிறது.

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்"

என்பது மணிமேகலை.

பல்லவர் காலத்துச் சித்தன்னவாசல் ஓவியங்களையும், சோழர் காலத்துத் தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங் களையும், நாயக்கர்கால ஓவியங்களையும் நாம் இன்று காண்கின்றோம். அவை அக்கால மக்களின் ஆடைச் சிறப்பையும், அணிச் சிறப்பையும், கூந்தல் ஓப்பனையையும், பிறவற்றையும் நமக்கு உணர்த்துகின்றன; மேலும் ஓவியக் கலை வளர்ச்சியை நுட்பமாகத் தெரிவிக்கின்றன.

இக்காலத்தில் ஓவியக்கலைப் பயிற்சிக்கும் பள்ளிகள் இருந்து வருகின்றன. பள்ளிகளிலும் ஓவியம் கற்பிக்கப் படுகிறது. இரவிவர்மாவின் ஓவியங்கள் புகழ் பெற்றவை. இயற்கைக் காட்சிகளை இனிதில் எடுத்துக் காட்டும் ஓவியங்கள் இக்கால ஓவியக்கலை வளர்ச்சிக்குச் சிறந்த சான்றுகளாகும்.

## சிற்பக் கலை

சங்ககாலத் தமிழர் மண், சுண்ணும்பு, மரம், கல், கெட்டி முதலியவற்றைக் கொண்டு உருவங்களை அமைக்க அறிந்திருந்தனர்; தூணில் பாவையை அமைத்தனர். (கந்திற் பாவை); கண்ணகியின் உருவத்தைச் செதுக்கினர். கல்லில் வீரனது உருவத்தைச் செதுக்கி அக்கல்லை நட்டு வழிபட்டனர். இவ்வாறே பல்லவர் காலத்தில் உருவச் சிற்பங்கள், பாறைச் சிற்பங்கள் என்பவை தோன்றின. மாமல்லபுரத்தைப் பல்லவர் காலச் சிற்பக் கலைக் கூடம் என்னலாம். பிற்காலச் சோழர் காலத்தில் 14 அடி உயரமுள்ள வாயிற் காவலர்களின் உருவங்கள், சண்டேசர்பதம் உணர்த்தும் சிற்பம் முதலியவை சிற்பக்கலையின் வளர்ச்சியை நன்கு உணர்த்துவன. நாயக்கர் காலச் சிற்பத் திறனை மதுரை ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள குறவன் குறத்தி சிலைகளிலும், கிருஷ்ணபுரத்துச் சிற்பங்களிலும், தாடிகொம்பு, பேரூர், தாரமங்கலம் என்னும் இடங்களிலுள்ள வியத்தகு சிற்பங்களையும் கொண்டு நன்கு அறியலாம். நாயக்கர் காலத்தில் சிற்பக்கலை நன்கு வளர்ச்சி அடைந்ததை இவை எடுத்துக் காட்டும். தஞ்சை அரண்மனையில் சலவைக் கல்லால் இயற்றப் பெற்ற சரபோஜி மன்னர் உருவச்சிலை சிறந்த வேலைப்பாடுடையது. இக்கலை இன்றும் இருந்து வருகிறது. இதன் வளர்ச்சியை இன்று கட்டப்பட்டுள்ள கோயில்களில் காணலாம்; எழுப்பப் பெற்றுள்ள உருவச் சிலைகளில் காணலாம்.

செம்பு, பித்தளை, வெள்ளி, பொன், பஞ்ச உலோகம் இவற்றை உருக்கி, வார்த்து, உருவங்களை அமைக்கும் வார்ப்புக் கலை பல நூற்றாண்டுகளாக இந்நாட்டில் இருந்து வருகிறது. கண்கொள்ளாக் காட்சி தரும் கடவுளர் திருமேனிகளும் நாயன்மார் ஆழ்வார் படிமங்களும் இவ் வார்ப்புக் கலையின் படைப்புகள் அல்லவா?

## இசைக் கலை

சங்க காலத்தில் இசைக் கலையை வளர்ப்பதில் பாணர் பாடினியர் ஈடுபட்டிருந்தனர். குரல், துத்தம் முதலிய எழுவகைப் பண்களும் அவற்றின் விரிவுகளும் வழக்கிலிருந்தன. சீறியாழ், பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் எனப் பல வகை யாழ்கள் இருந்தன. புல்லாங்குழல் முதலிய பலவகை இசைக் கருவிகளும் இருந்தன. இசை நுணுக்கம் போன்ற இசை நூல்களும் இருந்தன.

பல்லவர் காலத்தில் வீணை வழக்கிற்கு வந்தது. சோழர் காலத்தில் சங்ககால இசைக் கருவிகளும், பல் வேறு புதிய கருவிகளும் வழக்கிலிருந்தன. வடமொழி யாளர் தொடர்பால் புதிய சந்தங்கள் தோன்றின. விசயநகர ஆட்சிக் காலத்தில் கருநாடக இசை தமிழகத் தில் கால் கொண்டது. முசுலிம்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களது இசை நுழைவு பெற்றது. ஆங்கிலேயர் காலத்தில் மேனாட்டு இசையும் இசைக் கருவிகளும் இடம் பெற்றன. இன்றைய தமிழகத்தில் இப் பல நாட்டு இசைகளும், இசைக் கருவிகளும் வழக்கில் இருந்து வருகின்றன. தமிழர்க்கு விழிப்பு ஏற்பட்டுத் தமிழிசையை வளர்க்கத் தொடங்கினர். பாடற் கலை இன்று பள்ளி களிலும் கல்லூரிகளிலும் விருப்பப்பாடமாக இருந்து வருகின்றது.

## நடனக் கலை

சங்ககாலத்தில் நடனமாடும் ஆடவன் ஆடுமகன் எனவும், பெண் ஆடுமகள், விறலி என்றும் பெயர் பெற்றனர். வள்ளிக் கூத்து, துணங்கைக் கூத்து, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி முதலிய கூத்து வகைகள் இருந்தன. மாதவி ஆடிய 11 வகைக் கூத்துக்

களும், இறைவன் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் வியத்தகு கூத்தும் சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

பல்லவர் காலத்தில் இறைவன் ஆடிய நடன வகைகள் சிற்பங்களாகக் காட்டப்பட்டன; சித்தன்ன வாசலில் நடன மகளிர் ஓவியங்கள் தீட்டப்பட்டன. சைவத் திருமுறைகளில் இறைவன் நடன வகைகளும் ஆடவர் பெண்டிர் நடனமாடியதும் குறிக்கப்பட்டுள்ளன.

பிற்காலச் சோழர் காலத்தில் எல்லாப் பெருங் கோயில்களிலும் நடன மகளிர் இருந்து சமயத் தொடர் பான நிகழ்ச்சிகள் நடித்துக் காட்டினர். ஆரியக் கூத்தும் தமிழ்க் கூத்தும் வளர்ந்தன. விசயநகர ஆட்சிக் காலத் தில் இக்கலை மேலும் வளர்ச்சி பெற்றது. நடன மகளிர் சமுதாயத்தில் உயர்வாகக் கருதப்பட்டனர். அக்காலத்தில் எழுப்பப்பட்ட கோயில் கோபுரங்களுக்குக் கீழ் உள்ள வாயிற் சுவர்களில் பரதநாட்டிய நடனக் கலை வகையெல்லாம் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டன.

முசுலிம்கள் காலத்தில் இக்கலை வீழ்ச்சியுற்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் சாரதா சட்டத்தினால் நடன மகளிர் செல்வாக்கிழந்தனர். அதுகாறும் வழக்கிலிருந்த கோவில் நடனங்கள் மறைந்தன. இன்று விருப்பமுள்ள எல்லா வகுப்பாரும் நடனக் கலையில் பயிற்சி பெறுகின் றனர். திரைப்பட வளர்ச்சியால் நடனக் கலை வளர்ச்சி யடைந்திருக்கிறது. பரதநாட்டியம், மலையாள நடன வகைகள், மணிப்புரி நடன வகைகள், மேனாட்டு நடன வகைகள் முதலிய பல திறப்பட்ட நடனங்கள் இன்று நடித்துக் காட்டப்படுகின்றன.

## நாடகக் கலை

நாடகம் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் முதலில் நடனத்தைக் குறித்தது. பின்பு கதை தழுவி வரும்

கூத்தையும் குறித்தது. பல்லவர் காலத்தில் வடமொழி நாடகங்கள் எழுதப்பட்டிருந்தன. பெருங் கதையிலும் திருவாசகத்திலும் நாடகங்கள் நடிக்கப் பெற்றன என்ப தற்குச் சான்றுகள் இருக்கின்றன. சோழர் காலத்தில் இராஜராஜேசுவர நாடகம், இராச ராச நாடகம் என்பன நடிக்கப்பட்டன; நாடக ஆசிரியர்கள் அரசனிடம் மானியம் பெற்று வாழ்ந்தனர். பின் நூற்றூண்டுகளில் இராம நாடகம் முதலிய நாடகங்கள் தோன்றின. குறவஞ்சி நாடகம் வழக்கத்திற்கு வந்தது. நாம் வாழும் இந்த இருபதாம் நூற்ருண்டில் நாடகக் குழுக்கள் பல பெருகி விட்டன. திரைப்பட நடிகர்கள் பல நாடகங் களில் நடிக்கின்றனர். புராண இதிகாச நாடகங்களும், பல சீர்திருத்த நாடகங்களும், வரலாற்று நாடகங்களும் இக் காலத்தில் நல்ல முறையில் நடிக்கப் பெற்று வரு கின்றன. நாடகக் கலை உண்மையாகவே வளர்ச்சி யடைந்திருக்கின்றது.

## மருத்துவக் கலை

நம் பாட்டிமார்கள் குடும்ப மருத்துவத்தில் தேர்ந்த வர்கள். அவர்களுடைய முன்னேர்களும் பரம்பரை யாகக் குடும்ப மருத்துவத்தை அறிந்திருந்தார்கள். எனவே, பல நூற்ருண்டுகளாகவே ஒவ்வொரு வீட்டா ரும் மருத்துவக் கலையை ஓரளவு அறிந்திருந்தனர் என்பது தெளிவு. சங்க காலத்தில் மருத்துவன் தாமோதரனர் என்ற புலவர் இருந்தார். எனவே, அக்காலத்தில் மருத்துவர் இருந்தனர் என்பது தெளிவாகும். திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்ற நூல்களின் பெயர்களே மருந்துகளைக் குறிக்கும் பெயர்கள். தமிழ் மருத்துவத்தில் பச்சிலைகளும், வேர்களும் சிறப்பானவை. இம்முறை சித்த மருத்துவம் எனப்படும்.

வடமொழியாளர் கூட்டுறவால் **ஆயுர்வேதம்** இந் நாட்டில் இடம் பெற்றது. முசுலிம்கள் சேர்க்கையால் **யூனனி** மருந்துவமுறை இடம் பெற்றது. ஆங்கிலேயர் நுழைவாலும், ஆட்சியாலும் மேனாட்டு மருத்துவ முறை (அலபதி) பரவி இருக்கிறது. **ஹோமியோபதி** என்ற ஜெர்மன் முறையும் வழக்கிலிருக்கிறது. இங்ஙனம் பல நாட்டு மக்கள் கூட்டுறவாலும் அயலார் ஆட்சியாலும் பல நாட்டு மருத்துவ முறைகள் தமிழ் நாட்டில் இடம் பெற்று மக்களுக்கு நலனைச் செய்து வருகின்றன.

## இலக்கியக் கலை

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய இலக்கியம். பல இலக்கியச் செய்திகளைப் பிழிந்தெடுத்தே **தொல்காப்பியம்** என்ற இலக்கணம் செய்யப்பட்டது. தொல்காப்பியத்தின் காலம் ஏறத்தாழ கி. மு. 300 எனின், அதற்கு முற்பட்ட இலக்கியங்களின் கால அளவை எவ்வாறு கூறுவது? அழிந்தவை போக மீதியுள்ள சங்க நூல்களும் சங்ககால மக்கள் நாகரிகத்தையும் பண்பாட்டையும் நன்கு காட்டுகின்றன. வாழ்க்கையை உணர்த்தும் தொகை நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்களும், பின்னர் எழுந்த தோத்திர நூல்களும், சரித்திர நூல்களும் மிகப் பல புராணங்களும் 96 வகைச் சிறு நூல்களும் தமிழ் இலக்கியச் செல்வங்களாகும். இசுலாத்தைப் பற்றியும், கிறித்தவத்தைப் பற்றியும் எழுந்த நூல்கள் சிலவாம். இக்காலத்தில் அறிஞர் பலரால் எழுதப் பெற்றுள்ள பெருங்கதைகள், சிறு கதைகள், நாடக நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், விஞ்ஞான நூல்கள், மருத்துவ நூல்கள், வேறு கலைகளைப் பற்றிய நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் இவையெல்லாம் தமிழர் நாகரிக உயர்வைக் காட்டுகின்றன.

## நிலப் பகுப்பும் காலப் பகுப்பும்

பழந்தமிழர் தமிழகத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்து வகையாகப் பிரித்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மரங்கள், விலங்குகள் முதலியன, பெரும்பொழுது, சிறு பொழுது இவை இவை எனக் குறித்துள்ளனர். இவைபற்றிய விவரங்களை யெல்லாம் அகப் பொருள் நூல்களில் விரிவாகக் காண லாம். அக்கால மக்கள் ஓராண்டை ஆறு காலங்களாகப் பிரித்தனர். அவை கார்காலம், குளிர்காலம், முன் பனிக்காலம், பின் பனிக்காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம் என்பன. ஒரு நாளை இவ்வாறே ஆறு பிரிவுகளாகப் பிரித்தனர். அவை வைகறை, காலை, நண்பகல், மாலை, எற்பாடு, நள்ளிரவு என்பன. இன்னின்ன நிலத்தார்க்கு இன்னின்ன இசைக்கருவிகள் உரியன என்றும் வகுத்தனர்.

## மலர்கள்

நம் முன்னோர் சங்க காலத்தில் பலவகை மலர்களை யும் அவற்றின் பெயர்களையும் நன்கு அறிந்திருந்தனர். அவை சிவந்தகாந்தட்பூ, ஆம்பற்பூ, அனிச்சப்பூ, குளத் திற்பூத்த செங்கழுநீர்ப்பூ, குறிஞ்சிப்பூ, வெட்சிப்பூ, செங்கோடு வேரிப்பூ, தேமாம்பூ, செம்மணிப்பூ, விரிந்த கொத்தினையுடைய பெரிய மூங்கிற்பூ வில்லப்பூ, நெருப்பை ஒத்த எறுழம்பூ, மராமரப்பூ, கூவிரப்பூ, வட வனப்பூ, வாகைப்பூ, வெட்பாலைப்பூ, பஞ்சாய்க்கோரை, வெண் காக்கணம்பூ, கருவிளம்பூ, பயனிப்பூ, வாணிப்பூ, குரவப்பூ, பச்சிலைப்பூ, மகிழம்பூ, காயாம்பூ, ஆவிரம்பூ, சிறுமூங்கிற்பூ, சூரைப்பூ, சிறுபூளை, குன்றிப்பூ, மரு தப்பூ, கோங்கம்பூ, மஞ்சாடிப்பூ, தேறுப் பாதிரிப்பூ, செருந்திப்பூ, புனிவிப்பூ, சண்பகப்பூ, நாறுகரந்தை, காட்டு மல்லிகைப்பூ, மாம்பூ, தில்லைப்பூ, பாலைப்பூ,

கல்லிலே படர்ந்த முல்லைப்பூ, கஞ்சங்குல்லைப்பூ, பிடலப்பூ, செங்கருங்காலிப்பூ, வள்ளிப்பூ, நெய்தற்பூ, செம்முல்லைப்பூ, தாமரைப்பூ, ஞாழற்பூ, மௌவற்பூ, கொகுடிப்பூ, பழக்கால் மல்லிகைப்பூ சாதிப்பூ, கருந் தாமக் கொடிப்பூ, வெண்கோற்பூ, தாழம்பூ, சுரபுன்னைப்பூ, காஞ்சிப்பூ, கருங்குவளைப்பூ, ஓமைப்பூ, மரவப்பூ, தணக்கப்பூ, இரண்டம்பூ, இலவம்பூ, கொன்றைப்பூ, அடுப்பம்பூ, ஆத்திப்பூ, அவரைப்பூ, பகன்றைப்பூ, பலாசம்பூ, அசோகம்பூ, பிச்சிப்பூ, கருநொச்சிப்பூ, தும்பைப்பூ, துலாய்ப்பூ, விளக்கு போன்ற தோன்றிப்பூ, நந்தியாவட்டைப்பூ, புன்னுகப்பூ, பருத்திப்பூ, பீர்க்கம்பூ, குருக்கத்திப்பூ, சந்தனப்பூ, அகிற்பூ, புன்னைப்பூ, நாரத்தப்பூ, நாகப்பூ, இருவாட்சிப்பூ, கரிய பெரிய கிருந்தப்பூ, வேங்கைப்பூ, மலையெருக்கப்பூ முதலியன. இது ஒன்றிலிருந்தே நம் முன்னோரது பூவினைப் பற்றிய அழுந்திய புலமையை — இயற்கையில் தோய்ந்த இதயத்தினை உணரலாமன்றோ!

## சமுதாய அமைப்பு

சங்க காலத்தில் இன்றுள்ள சாதிகள் இருந்தன என்பது கூறக்கூடவில்லை. அதனால் அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த எல்லா நிலை மக்களும் கல்வி கற்க வசதி இருந்தது. குறத்தி, வேட்டுவச்சி, பாடினி முதலிய எல்லோரும் கல்வி கற்றனர்; புலமை கருதி மன்னரால் மதிக்கப் பெற்றனர்.

சங்க காலத்தில் தொழில்—நிலம்—பண்பு பற்றி எழுந்த பெயர்கள் பல்லவர் காலத்தில் சாதிப் பெயர் களாகத் தோற்றமெடுத்தன. இச்சாதி வேறுபாடுகள் நாயன்மாராலும் ஆழ்வாராலும் கண்டிக்கப்பட்டன. ஆயினும், இவை பிற்காலச் சோழர் காலத்தில் வேரூன்றி

மக்களைப் பல பிரிவினராக பிரித்துவிட்டன; குலத்திற்கு ஒரு நீதி ஏற்பட்டது. இதனால் சமுதாய ஒற்றுமை குலைந்தது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிகளை அறியாத இசுலாமிலும் கிறித்தவத்திலும் சேர்ந்தனர். சுருங்கக் கூறின், சாதி வேறுபாடுகள் புதிய சமயங்களை வளர்த்தன.

தாழ்த்தப்பட்ட இந்துக்கள் பல கொடுமைகளுக்கு ஆளாயினர். இந்த நூற்றாண்டில்தான் காந்தியடிகளாலும் பிற நன்மக்களாலும் இவ்வேறுபாடுகள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டன. அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசக் கல்வி அளிக்கின்றது. ஆங்கிலக் கல்வியும் நாகரிகமும் பரவப் பரவ. சாதி வேறுபாடுகள் மறைந்து வருகின்றன. தமிழகத்தில் இன்று கலப்புத் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் தமிழ்ச் சமுதாயம் இவ்வேறுபாடுகளை ஒழித்து விடும் என்று உறுதியாகக் கூறலாம்.

**சமயம்**

சிவ நெறியும், மால்நெறியும் வடவர் கூட்டுறவால் சைவ வைணவங்களாக மாறின. பௌத்தமும் சமணமும் இந்நாட்டில் கால்கொண்டன. பின்னர் இசுலாமும் கிறித்தவமும் நுழைந்தன. இன்றும் இச்சமயங்கள் இருந்துவருகின்றன. சமயக் கொடுமையும் இன்று பேரளவு நிலவி வருகின்றது. சமய நெறி படிப்படியாக வளர்ந்து வருகிறது.

ஒவ்வொரு சமயத்தையும் குறிக்கும் விழாக்கள் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. இந்துக்களே பெரும்பாலராய் இந்நாட்டில் இருக்கின்றனர்; தொன்று தொட்டு அவர்கள் விழாக்களே பலவாக இருந்து வருகின்றன. அரசாங்கம் எல்லாச் சமயத்தார் விழாக்களுக்கும் நோன்புகளுக்கும் விடுமுறை அளித்து எல்லாச் சமயத்தினரையும் ஒப்ப நடத்துவது நாகரிகத்தின் சிறந்த அடையாளமாகும்.

# 11. தமிழர் நாகரிகம் III

## சமய தத்துவம்

பழைய மக்கள் உலகம், உயிர், கடவுள் என்ற மூன்றையும் உணர்ந்தனர்; உயிருக்கும் கடவுளுக்கும் தொடர்பு உண்டு என்பதை அறிந்தனர்; கடவுள் விருப்பப் படியே யாவும் நடைபெறுவதாக நம்பினர்; "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதை உணர்ந்தனர்; நல்ல ஒழுக்கமே கடவுளை அடைவிக்கும் நெறி என்று துணிந்தனர்; எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதை அறிந்தனர். சைவர்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை நாட்டில் பரப்பினர். உயிர் வேறு—கடவுள் வேறு அல்ல என்பது சங்கரர் சமய தத்துவம். ஆன்மாவிற்கும் இறை வனுக்கும் உள்ள தொடர்பு அத்வைத சம்பந்தம். அது போலவே ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு அத்வைதத் தொடர்பு. ஆனால், இரண்டாம் அத்வைதம் முதல் அத்வைதத்தை விடச் சிறந்தது பற்றி விசிட்டாத்வைதம் எனப்பட்டது. மாத்வாச் சாரியார், துவைத மதக்கருத்துக்களைப் போதித்தார். இறைவனும் உயிரும், இறைவனும் பொருள்களும், உயிரும் பொருள்களும், ஓர் உயிரும், மற்றோர் உயிரும், ஒரு பொருளும் பிறபொருளும் எனப் பிரமத்தில் பல குணங்கள் உண்டு என்று கூறுகின்றார். சமண சமயம் தானம், தவம், சீலம், அருகதேவன் வழிபாடு ஆகிய நான்கும் மோட்சத்தை அடைவிப்பன என்று பேசு கின்றது. 'அவா அறுத்தலே முத்திக்கு வழி' என்று

பௌத்தம் பறைசாற்றுகிறது. அன்பு, இன்னா செய்யாமை, அவா அறுத்தல் முதலிய பண்புகள் தேவையென்று பொதுவாக எல்லாச் சமய தத்துவ நூல்களும் உரைக்கின்றன. மேனாட்டார் நம் சமய தத்துவ நூல்களின் உண்மைகளை அறிந்து வியக்கின்றனர். மேனாட்டுச் சமய தத்துவமும் இக்காலத்தில், கல்லூரி களில் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. இன்று சமய தத்துவம் பயிலுகின்ற கல்லூரி மாணவர் சங்கரர், இராமாநுசர், மாத்வர் இவர்தம் தத்துவக் கருத்துக் களையும், சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், பிற சமயக் கருத்துக்களையும் நன்கு பயிலுகின்றனர். பல்கலைக் கழகங் களிலும் சமய தத்துவ ஆராய்ச்சி நடைபெறுகிறது.

## பொழுது போக்குகள்

குறிஞ்சி நிலத்தில் ஆடவரும், பெண்டிரும் சேர்ந்து குரவையாடுவர். முல்லை நிலத்தில் ஆயர் குழலூதுவர்; ஆய்ச்சியர் ஆடிப் பாடுவர். மருத நிலத்தில் மக்கள் புனல் விளையாட்டு, உண்டாட்டு விழா முதலியவற்றில் பொழுது போக்குவர். பொதுவாக அக்காலத் தமிழ் மக்களுள் சிலர் கோழிப்போர், கௌதாரிப்போர், ஆட்டுக்கிடாய்ப் போர் முதலிய விளையாட்டுகளில் பொழுது போக்குவர். காற்றாடி விடுதலும் ஒருவகை விளையாட்டு; வேடிக்கை யாகச் சூதாடுதலும் உண்டு.

நெய்தல் நிலமக்கள் பொதுவிடத்தில் கூடுவர்; மேலே சொல்லப்பட்ட விலங்குகளையும், பறவைகளையும் போரிடச் சொல்லி வேடிக்கைப் பார்ப்பர்; பின்னர்த் தம்முள் மற்போரும் கருவிப் போரும் செய்வர்; பிறகு கவண் கல் வீசி விளையாடுவர்; முழுநிலா இரவில் தழை உடை அணிந்த தம்பதிகளோடு மணல் முற்றத்தில் கூடு வர்; அவ்விடத்தில் சினைச் சுறுவின் கொம்பை நடுவர்; அதன்மேல் தாழம்பூவையும், வெண்டாளிப் பூ

மாலையையும் சூட்டுவர்; அதனிடம் ஏறிய தெய்வத்தை வழிபடுவர்; பின்பு பனங்கள்ளையும், நெல்லால் சமைத்த கள்ளையும் குடித்துக் களித்து விளையாடுவர். அம்மக்கள் கடலில் விளையாடுவர்; பின்பு ஆற்று நீரில் குளிப்பர்; நண்டுகளைப் பிடித்தாட்டுவர்; கடலலைகளைக் காலால் மிதிப்பர்; மணலினால் பாவைகளை அமைப்பர்; உயர்ந்த மாடங்களிலிருந்து வரும் இன்னிசையைக் கேட்டு மகிழ்வர். பரதவர் பற்றிய இவ்விவரங்கள் பட்டினப் பாலையில் குறிக்கப் பட்டுள்ளன.

பிற்காலத்தில் எழுதப்பெற்ற புறப்பொருள்வெண்பா மாலையிலும் கோழிப் போர் முதலியன கூறப்பட்டுள்ளன. அரசன் தன் ஓய்வு நேரங்களில் புலவர்களோடு பேசிப் பொழுது போக்குவான்; ஆடல் பாடல்களில் நேரத்தைக் கழிப்பான். இப்படியே செல்வரும் கழித்தனர். எளிய மக்கள் தம் பிள்ளைகளோடும் நண்பர்களோடும் பேசியும் விளையாடியும் பொழுது போக்கினர். கோவில்களிலும் மடங்களிலும் நடைபெற்ற சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டனர்; கோவில் விழாக்களில் பொழுது போக்கினர். அடிக்கடி நிகழும் மற்போர், வாட்போர் முதலிய பரிசுப் போட்டிகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

வையை போன்ற ஆறுகளில் வெள்ளம் வரும் போது மக்கள் ஆற்று நீரில் குதித்து நெடுநேரம் விளையாடிப் பொழுது போக்குவர். விசயநகர வேந்தர் ஆட்சிக் காலத்தில் நவராத்திரி விழா ஒன்பது நாளும் சிறப்பாக நடை பெற்றது. ஒன்பது நாட்களிலும் பலவகை விளையாட்டுகளும் வேடிக்கைகளும் நடைபெற்றன. அவர்களுக்கு அடங்கிய நாயக்கர் ஆட்சியில் தமிழகத்தில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

இன்று நாடகம், படக்காட்சி, பலவகை விளையாட்டுகள், வானொலி, இசை, இன்ன பிறவற்றில் மக்கள்

தம் ஓய்வு நேரங்களைக் கழிக்கின்றனர். சிலர் நூல்களைப் படித்து மகிழ்கின்றனர்; சிலர் சொற்பொழிவு கேட்டு இன்புறுகின்றனர்; பின்னும் சிலர் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர்.

## நீதி முறை

சங்க காலத்தில் அறங்கூறும் அவையங்கள் என்னும் நீதிமன்றங்கள் பெயர் பெற்றன. தராசின் நடுவில் உள்ள முள் போல நடுவு நிலையிலிருந்து வழக்கை விசாரித்து நீதி வழங்கவேண்டும் என்பது வள்ளுவர் அறவுரை. பொற்கைப் பாண்டியன், நெடுஞ்செழியன், மனு நீதி கண்ட சோழன் முதலியோர் நீதியால் தம் பெயரை நிலை நிறுத்தியவராவர்.

பல்லவர் காலத்தில் கிராம ஆட்சியாளர்கள் நீதி வழங்கி வந்தனர். அக்கால உயர் நீதிமன்றம் 'தருமாசனம்' எனப்பட்டது. சோழர் காலத்திலும் கிராம வழக்குகளை ஊராட்சி மன்றத்தினர் விசாரித்து நீதி வழங்கினர். பெரிய வழக்குகளை நாட்டுப் பெருமக்கள் கூடித்தீர்த்தனர். கோவில் வழக்குகளை கோவில் ஆட்சியாளர் தீர்த்து வைத்தனர். மன்னனே நீதிபதியாக இருந்து நீதி வழங்கிய வழக்குகளும் உண்டு. தற்செயலாக நேர்ந்த குற்றங்களுக்கு மென்மையான தண்டனைகளும், வேண்டுமென்றே செய்யப்பட்ட குற்றங்களுக்கு வன்மையான தண்டனைகளும் விதிக்கப்பட்டன. எண்ணிறந்த கல்வெட்டுக்கள் இவ்வுண்மைகளைத் தெரிவிக்கின்றன.

இக்காலத்தில் மேனாட்டு முறையில் மிகப் பல நீதிமன்றங்கள் தோன்றிப் பணியாற்றி வருகின்றன. ஆங்கில ஆட்சியில், சாதிக்கொரு நீதிகூறும் பழைய முறை மறைந்துவிட்டது. எல்லோருக்கும் குற்றத்திற்கேற்ற தண்டனை விதிக்கப்பட்டது.

## பழக்கம்

பழக்கம் என்பது பயிற்சியின் முதிர்ச்சி எனப் பொருள்படும். பழக்கம் உயர்ந்ததாக இருப்பின் அது தரும் பயன் சிறந்ததாகும். இளமை முதல் நல்ல ஒழுக்க நெறிகளில் பயிலுகின்ற ஒருவன் காலப் போக்கில் சமுதாயத்தில் நன்மகனாகக் கருதப்படுவான். இளமை முதல் தீய நெறிகளில் பழகும் ஒருவன் பொது மக்களால் வெறுக்கப்படுவதோடு தானும் கெட்டு அழிவான். எனவே, சான்றோர் வகுத்த நல்ல நெறிகளில் பழகுவதே வரவேற்கத்தக்கது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்". ஆதலின் இளமை முதலே நன்னெறிகளில் பழகுதல் விரும்பத்தக்கதாம். நற்பழக்கச் செயல்களின் பயனே உயிர்க்கு உற்றதுணையாய் அமையும்; அமைந்து இன்பமும் அமைதியும் பயக்கும்.

பயிற்சி முதிர்ச்சி அடைந்தபின், அறிவு நிலை உணர்வு நிலையை எழுப்பித் தானும் அதன்கண் ஒன்றிப் போகும். அந்நிலையே உணர்வு நிலை; மனிதனை இன்பத்தில் ஆழ்த்தி மகிழ்வூட்டும்; எனவே, மனிதனுக்கு நற்பயிற்சியும் அதன் முதிர்ச்சியுமாகிய பழக்கம் இன்றியமையாததாகும். மனிதன் ஏற்றுக் கொண்ட எத்துறையிலும் கல்வி, பயிர்த் தொழில், கைத்தொழில் ஆகிய எத்துறையிலும் பயிற்சியும், அதன் முதிர்ச்சியும் பெறுதலே இன்ப வாழ்க்கைக்குக் காரணமாய் அமைகின்றது. பழக்கத்தால்தான் தகுதிவருகின்றது. தகுதி உடையவரே வாழ்க்கையில் உயருகின்றனர். நினைந்து பழகிய பின்னரே பழக்கம் பயனுடையதாகும். இவ்வாறு நினைந்து பேசிய சொற் பழக்கங்களில் ஒன்றே 'இடக்கர் அடக்கல்' என்பது. இது நற்பழக்கத்தை உணர்த்துகின்றது.

செயல் என்பது உடம்பு கருவியாக நிகழ்வது. செயற்பழக்கம் நல்லதாயின் மனிதன் செயல்கள்

எல்லாம் நல்லனவாய் அமையும். பிசிராந்தையாரின் இன்ப வாழ்க்கை மனம், சொல், செயல் என்னும் மூன்றின் நற்பழக்கத்தால் இயன்றது அறியத்தகும்.

## வழக்கம்

நம் முன்னோர் தத்தம் பெருமுயற்சியால் வருந்திப் பயின்று தேறிய பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கங்களாக மாறுகின்றன. முதலில் தரிசாய்க் கிடந்த நிலப் பகுதிகளை எவ்வாறோ தெரிந்து திருத்தி விதை விதைத்துப் பயிர் விளைக்கக் கற்றுக்கொண்ட பழக்கம் பின்பு வழி வழியே வழக்கமாய் நடைபெறுவதால் தான், நாம் அவ்வழக்கத்தைக் கடைபிடித்து, மிகவும் எளிமையாக உழவு முறையும் உணர்ந்து பயிர் செய்து, பயன் பெறுகின்றோம். இங்ஙனமே நம் முன்னோர் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பழகிப்பழகிச் செய்தனவற்றை இன்று 'வழக்கம்' என்ற பெயரால் நாம் பெருமுயற்சியின்றிச் செய்து வருகின்றோம். இலக்கணத்திலும் 'வழக்கு' என்னும் சொல் பயில்கின்றது. மக்கள் பழக்க முதிர்ச்சியால் கொண்டவை எல்லாம் வழக்கமாக மாறுகின்றன. வழக்கை உயிர்நாடியாகக் கொண்டு வழக்கத்தின் சிறப்பினை எளிதில் உணரலாம்.

முதலில் தோன்றிய உயர்ந்தோர் பழக்கங்கள் காலப் போக்கில் வழக்கங்கள் என்று பெயர் பெற்று, பின் வரும் மக்களுக்கு மேல்வரிச் சட்டங்களாக அமைகின்றன. இவ்வாறே உயர்ந்தோர் ஒழுக்கங்களும் காலப் போக்கில் வழக்கங்களாக மாறுகின்றன. வழக்கம் என்ற நிலைக்கு வந்தவை பின்வரும் மக்களால் எளிதில் பின் பற்றப்படுதலை நமது வாழ்க்கையிலே நாம் காணுகின்றோம். 'இது எங்கள் குடும்ப வழக்கம்' என்று மக்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். இவ் வழக்கம் எளிதில் மாருத நிலை பெற்றிருத்தலையும் நாம்

நம் வாழ்க்கையில் காணுகின்றோம். நன்மக்களால் பயிலப் பெற்றுக் காலப் போக்கில் வழக்கங்களாக மாறியவையே திருக்குறள் முதலிய அறநூல்களில் எடுத்து ஓதப்படும் அறவுரைகள் என்பது அறியத்தகும். இங்ஙனம் ஓதப்பெற்ற வழக்கங்களைப் பின்பற்றுதலே 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' எனப்படுவது. இவ்வழக்கிற்கு மாறுபட்டு நடப்பவர் 'பல கற்றும் கல்லாதவர்' என்பது வள்ளுவர் கருத்து. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பது தொல்காப்பியம். எனவே, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது, உயர்ந்தோர் பின்பற்றும் பழக்கங்களைப் பின்பற்றி நடத்தல் எனப் பொருள்படும். வழக்கம் என்பது பொதுமக்களிடம் தோன்றி, அவரால் ஊட்டம் பெற்று நிகழ்வதே ஆயினும், அதனைச் செப்பம் செய்து எப்பொழுதும் இருக்கத்தக்க முறையில் ஏற்றம் தருபவர் சான்றோரே ஆதலின், வழக்கத்தின் மதிப்பு உயர்கின்றது.

அன்பிற்கு நிலைக்களமாகிய குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுதல் மிகப் பழைய காலத்திலிருந்து நம்மிடம் இருந்துவரும் வழக்கங்களில் ஒன்றாகும். இவ்வழக்கத்திலிருந்து எழுந்ததே,

> "மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என்னும் திருக்குறள். இவ்வாறே பிறைதொழுதல், சிலம்பு அணிதல், அம்புலி காட்டல், சூள் செய்தல், நெல் உகுத்துப் பரவுதல், வெள்ளணி அணிதல், செவ்வணி அணிதல் முதலியன தொன்றுதொட்டு வரும் வழக்கங்களாகும். இவ்வழக்கங்களையெல்லாம் புறநானூறு போன்ற சங்க நூல்களில் கண்டு மகிழலாம்; பிற்காலத்தில் எழுந்த வழக்கங்களைப் பின் நூல்களில் கண்டு தெளியலாம். இவ்வழக்கங்கள் மக்கள் நாகரிகத்தை மிகுத்துக் காட்டுவனவாம்.

**ஒழுக்கம்**

ஒழுகுதல்—தொடர்ந்து நடைபெறல்; ஒழுக்கம் தொடர்ந்த நடை.

நல்ல ஒழுக்கம் சிறப்பினைத் தருதலால் உயிரினும் மேலானதாகப் போற்றப்படுவதாகும். உயிர் எல்லாப் பொருளிலும் சிறந்தது; ஆயினும், ஒழுக்கம் போல விழுப்பம் தாராது; உயிர்க்கு உறுதுணையாய் அமைவது ஒழுக்கம ஒன்றே. ஒருவனது ஒழுக்கம் குன்றினால் அவனைச் சேர்ந்த எல்லாம் குன்றிவிடும். ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை. ஒழுக்கத்தில் சுருங்காதவர் மனவலிமையுடையவர். ஒழுக்கம் ஒன்றே மேம்பாட்டை அடைவிக்கும். நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையிலும் இன்பம் பயக்கும். ஒழுக்கமுடையவர் மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லார். உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வழியே ஒழுகுதல் அறிவுடையோர் செயலாகும். இவை வள்ளுவர் கருத்துக்கள்.

நல்ல ஒழுக்கத்திற்கு மறுதலையானது தீய ஒழுக்கம். அதனைச் சான்றோரும் அறநூல்களும் அழுத்தந் திருத்தமாகக் கண்டித்துள்ளனர்.

செல்வர், வறியவர், நண்பர், பகைவர் என எவரிடத்தும் வெறுப்பின்றியும், தமது கொள்கை விடாதும், நன்றாய் ஒழுகுதலே சிறந்த ஒழுக்கம் எனப்படும். கோவூர்கிழார் பாடலொன்று ஒழுக்கத்திற்குச் சிறந்த சான்றாய் அமைந்துள்ளதைக் காண்க:

"பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி...
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்லது ஓங்குபுகழ்

**மண்ணுள் செல்வம் எய்திய**
**நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.''**

## இல்வாழ்க்கை

சங்க காலத் தமிழர் பலர் காதல் மணம் புரிந்து இல்வாழ்க்கை நடத்தினர் என்று நூல்கள் கூறுகின்றன. அன்பை அடிப்படையாகக் கொண்ட அவர்களது இல்வாழ்க்கை பெரும்பாலும் நல்ல முறையிலேயே நடந்து வந்தது. அன்பே இல்வாழ்க்கையின் தனிப் பண்பு; அறமே இல்வாழ்க்கையின் தனிப்பயன்.

**''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.''**

என்பது திருக்குறள்.

ஒத்த குடி, ஒழுக்கம், ஒத்த கல்வி, ஒத்த பண்பு ஒத்த அருள் உணர்ச்சி, ஒத்த உணர்வு முதலிய பண்புகள் இருவரிடமும் பொருந்தியிருத்தல் வேண்டும் என்பது முன்னோர் கருத்து. இப்பொருத்தங்களோடு கணவனும் மனைவியும் இல்வாழ்க்கை நடத்தும்போது தலைவன் உயர் கல்வி கற்பதற்குத் தலைவியைப் பிரிவான்; நாடுகாத்தற் காகப் பிரிவான்; அரசரிடைப் போர் நிகழ்வதைத் தடுக்கத் தூது செல்வான்; பொருள் தேடவும் பிரிவான்; அரசனுக்கு உதவி செய்யப் பிரிவான்; பரத்தையர் பொருட்டும் பிரிவான்.

மனையில் இருந்து அறம் புரியும் உரிமை தலைவிக்கே சிறப்பாக உரியது. அதனால் அவள் மனைவி, மனைக் கிழத்தி, இல்லாள் எனப்பட்டாள். அவள் இல்வாழ்க்கைக்கு அரசியாக இருப்பவள்; அதனால் வாழ்வரசி எனப் பட்டாள். பொருள் தேடி வீடு கொணர்தல் கணவன் கடமை; அப்பொருளை வகுத்துக் குடித்தனம் செய்தல் மனைவியின் கடமை. இங்ஙனம் பெண் இல்லத்தில் அரசு செலுத்துகிறாள். ''தாய் அறியாச் சூல் இல்லை' என்பது போல மனைவி அறியாத எதனையும் கணவன் செய்யான்.

விருந்து உபசரித்தல் இல்வாழ்வார் சிறந்த கடமை. இதனைப் பழந்தமிழர் போற்றிப் பாதுகாத்தனர். இறந்த முன்னோர், துறவிகள், விருந்ினர், சுற்றத்தார் இவர்களைப் போற்றுதல் இல்வாழ்வார் கடமை என்று வள்ளுவர் கூறியுள்ளார். தன் தாய் வீட்டில் கிடைக்கும் தேன் கலந்த பாலினும், தலைவனுடன் சென்று பாலைநிலத்தில் மான் உண்டு எஞ்சிய நீரைச் சிறப்பாகக் கருதும் மனப் பண்பு தலைவிக்கு இருந்தது. சுருங்கக்கூறின், சங்க கால மனைவி,

> "தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
> தகைசான்ற சொற்காத்து"

வாழ்ந்து வந்தாள் என்று கூறலாம்.

கணவன் பரத்தையரிடம் நட்புக்கொள்ளின், மனைவி அவனை நயமாகத் திருத்துவாள்; "தைத்திங்கள் தண்கயம் போலப் பலர் படிந்து உண்ணும் நின் பரத்தை மார்பில் பட்ட நினது மார்பை யான் தீண்டேன்" என்று கூறிப் பரத்தையின் இழிந்த நிலையை எடுத்துக்காட்டுவாள்; "வேண்டேன் பெரும, ஆண்டுசெய் குறியோடு ஈண்டு நீ வரலே" என்று வேண்டிக்கொள்வாள்; அவன் மேலும் கேளானாயின் ஊடல் கொள்ளுவாள். கணவன் பலவகையிலும் மனைவியின் ஊடலைத் தீர்ப்பான்.

தாய்மார் தாம்பெற்ற இளங்குழந்தைகளைக் கையில் ஏந்திக்கொண்டு, பூசைக்கு வேண்டிய பூ, புகை முதலியவற்றோடு, தம் கணவருடன் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டனர் என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது.

சங்க காலத்தைப் போலவே பிற்காலத்திலும் நாயன்மார் வாழ்க்கையும் நன்முறையில் நடைபெற்றது. கணவனும் மனைவியும் ஒத்த கருத்துடன் சமயத் தொண்டு செய்தனர். செம்பியன் மாதேவியார்,

குந்தவ்வையார், சோழப் பேரரசிகள் சிறந்த சமயப் பற்றுடன் திகழ்ந்தனர்.

இக்காலத்தில் சங்ககாலக் காதல் மணம் சிறிதளவு பரவி வருகிறது. 'குணம் பேசிக் குலம் பேசித் திலகவதியார் திருமணத்தை முடிவு செய்த படியே இப்பொழுது பெரும்பாலான திருமணங்கள் முடிவு செய்யப்படுகின்றன. எனினும், காதல் அடிப்படையில் முடியும் திருமண வாழ்க்கையே மிகச்சிறந்தது' என்பது அறிஞர் கருத்தாகும்.

# 12. தமிழர் பண்பாடு

“ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகளுள் கற்றவனையே மிகுதியாக விரும்புவாள். சமுதாயத்தில் கல்வி கற்றவன் தாழ்ந்தவனாயினும், உயர்ந்தவர் அவன் யோசனையைக் கேட்பர். அவனது யோசனையையே அரசனும் மதிப்பான். எனவே, கற்றவனே வீட்டிலும் சமுதாயத்திலும் அரசியலிலும் சிறப்புப் பெறுவான். ஆதலால் எப்பாடுபட்டாவது ஒவ்வொருவரும் கல்வி கற்பது இன்றியமையாததாகும்,” என்று ஆரியப்படை கடந்த **நெடுஞ்செழியன்** கூறியுள்ளான். அரசனே இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்பின், அவன் ஆண்ட நாட்டில் கல்விக்குக் குறைவு உண்டோ? தமிழகத்தில் அரசன் முதல் குறவன் குறத்தி ஈறாக எல்லா மக்களும் கல்வி கற்றிருந்தனர். கூலவாணிகன், மருத்துவன், கொல்லன், அறுவை வாணிகன் முதலிய பல தொழில் ஆடவரும், பாணர், குயவர், வேடர் என்ற பல இனப் பெண்டிரும் அரசர்கள் பாராட்டத்தக்க புலமையைப் பெற்றிருந்தனர் என்ற உண்மையைச் சங்கப் பாடல்களால் அறியலாம். வளமனையைக் காத்துவந்த பெண்மணியும் கவி பாடினாள் எனின், அக்காலத்துத் தமிழ்ச் சமுதாயம் சிறந்த முறையில் கல்வி பெற்றிருந்தது என்பதை எளிதில் அறியலாம் அன்றோ? கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்தவர் சான்றோர் எனப்பட்டனர்.

அக்கால மன்னர்கள் கல்விக்கு மிக்க மதிப்பை அளித்தனர்; கலைகளில் வல்லவரைப் போற்றினர்;

தம்மை நாடிவந்த கலைஞர் எந்நாட்டவராயினும் அவருக்குப் பரிசில்கள் ஈந்தனர்; உயர்ந்த முறையில் உணவு அருத்தினர். இங்ஙனம் பேரரசரும் சிற்றரசரும் பிறதலைவர்களும் கற்றவரைப் போற்றியதால், தமிழகத்தில் கலை மணம் கமழ்ந்தது. வணிகர்கள் தாம் சென்ற நாட்டு மொழிகளைக் கற்றனர். சாதுவன் வரலாறே இதற்குச் சான்று பகரும். இங்ஙனம் சமுதாயத்தால் ஆதரிக்கப் பெற்ற புலவர்கள் உள்ள எழுச்சியால் பல பாடல்களைப் பாடினார்கள்; வள்ளுவர் திருக்குறளைச் செய்தார்; மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலை என்ற காப்பியத்தைச் செய்தார்; இளங்கோ வடிகள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் செய்தார். உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் ஒரு சமுதாயத்திலிருந்து எழுந்தது எனின், அச்சமுதாயம் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்திருத்தல் வேண்டும் என்பது கூறுதே அமையும் அன்றோ!

### சமுதாய அமைப்பு

குறிஞ்சி, பாலை முதலிய ஐவகை நிலங்களில் தலைமக்கள், பொது மக்கள் என்ற இரண்டே பிரிவுகள் இருந்தன. பெரிய நகரங்களில் மட்டும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், பலவகைத் தொழிலாளர்கள் என்ற பிரிவினர் இருந்தனர். இவையாவும் தொழில் பற்றியும், நிலம் பற்றியும், பண்பு பற்றியும் உண்டான பிரிவுகளே தவிர, இன்றுள்ளவை போலப் பிறவி பற்றிய சாதிகள் அல்ல. இந்த உண்மையை நாம் மறந்துவிடலாகாது. நவரத்தினங்களை விற்றவர் முதல் அப்பம் விற்றவர் ஈறுக வாணிகம் செய்த அனைவருமே 'வணிகர்' என்று அக்காலத்தில் அழைக்கப்பெற்றனர். எனவே, இன்றுள்ள கடுமையான சாதிப் பிரிவுகள் அக்காலச் சமுதா

யத்தைப் பிரிக்கவில்லை. குறத்தி, குயத்தி, பாணத்தி முதலியோரும் சமுதாயத்தில் புலமையும் மதிப்பும் பெற்றனர் என்பதை நோக்க— இன்றும் அந்நிலை வராமல் இருத்தலைக் காண—அக்கால சமுதாய அமைப்பு இன்றைய அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது என்பதைத் தெளிவாக அறியலாம். அரசர் தம்மை யொத்த அரசரிடமோ, நிலக்கிழார்களிடமோ பெண் கொண்டனர். தலைமக்கள் தலைமக்களிடமும், பொது மக்கள் பொது மக்களிடமும் மண உறவு கொண்டனர்.

### மன்னரும் மக்களும்

அரசர்கள் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற இரண்டு பெரிய அவையினரின் ஆலோசனைப்படியே அரசாண்டு வந்தனர். அவருள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளும் இருந்தனர். இக்காலத்தில் நடை பெறுவதைப் போன்ற தேர்தல் முறை அக்காலத்திலும் இருந்தது. இவை அனைத்திற்கும் மேலாக, அரசர்கள் இரவில் மாறுவேடம் பூண்டுகொண்டு நகரைச் சுற்றி வருவர்; மக்களின் தேவைகளையும் அரசாங்கத்திடம் உள்ள குறைகளையும் அறிவர்; அவற்றை நீக்கமுற்படுவர். பொற்கைப் பாண்டியன் வரலாறே இதற்கு ஏற்ற சான்றாகும். "நான் காசியாத்திரை சென்ற பிறகு தனியாக இருக்கவேண்டுமே என்று கவலைப்படாதே. அரச வேலி உன்னைப் பாதுகாக்கும்" என்று மதுரையிலிருந்த பிராமணன் தன் மனைவியிடம் கூறினான் என்பதை நோக்க, பொதுமக்கள் அரசன் ஆட்சியில் கொண்டிருந்த நம்பிக்கையை நன்கறியலாம்.

கண்ணகி எவர் துணையுமின்றி நேரே அரண்மனை சென்று பாண்டியனைக் கண்டாள்; அரசனது தவற்றைச் சுட்டிக் காட்டினாள்; அரசன் தன் தவறு உணர்ந்து இறந்தான் என்பது நோக்க, பொது மக்கள்

ஆபத்துக் காலங்களில் நேரே மன்னரிடம் சென்று முறையிடலாம் என்ற நிலைமையும், மன்னன் பொறுமையாக மக்கள் குறையைக் கேட்டு முறை வழங்கினான் என்பதும் தெளிவாகின்றன அல்லவா?

மநுநீதிச் சோழன் அரண்மனைக்கு முன் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. குறைவுடையோர் அதனை ஆட்டுவர்; உடனே மன்னன்முன் கொண்டு செல்லப் படுவர். மன்னன் அவர்தம் குறைகளைக் கேட்டு முறை செய்தான். அச்சோழன் பசுக் கன்றுக்காகத் தனது மகனையே முறை செய்தான் என்பதை நோக்க, நீதி வழங்கும் முறையில் தமிழ் வேந்தரது உயர்ந்த பண்பாட்டை அறியலாம். இதுகாறும் கூறப்பெற்ற சான்றுகள் மன்னரும் மக்களும் கொண்டிருந்த தொடர்பை நன்கு தெரிவிக்கின்றன. தீக்கடைக்கோல் தீப்பற்றும் ஆற்றல் உடையது. ஆயினும் அது வீட்டு இறப்பிற் செருகப்படும். அதனால் வீட்டுக்குக் கெடுதி இல்லை. தகடூரை ஆண்ட அதியமான் தீயைப்போலப் பெரும் வீரம் உடையவன்; ஆயினும் அதனை அடக்கிக் கொண்டு அனைவரிடமும் சமமாகப் பழகுவான். தீக் கடைக்கோலைக் கடைந்தால் தீ வெளிப்படல் போல் அவனைச் சினப்பித்தால் அவனது பெரு வீரம் வெளிப் படுமாம். தமிழ் அரசர் மக்கள் பிறவிக்கு உரிய பண்புகள் உடையவராய், அவற்றைத் தகுதி அறிந்து பயன்படுத்தினர் என்பது இதனால் பெறப்படுகிறதன்றோ?

## மன்னரும் புலவரும்

தமிழ் வேந்தர் தமிழைத் தம் உயிரெனக் கருதினர்; இயற்றமிழில் வல்ல புலவரையும், இசைத்தமிழில் வல்ல பாணரையும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் நன்கு மதித்துப் போற்றினர்; அவர்கள் மனம் மகிழும்

படி சிறப்பு விருந்துகள் நடத்தினர்; அவர்கள் கேட்ட வற்றை யெல்லாம் வழங்கினர். "கற்றுரைக் கற்றுரே காமுறுவர்" என்றபடி கல்வி நலம் வாய்க்கப்பெற்ற தமிழ் வேந்தர் முத்தமிழ்ப் புலவர்களை நன்கு போற்றினர்; அவர்களைத் தம் உற்ற நண்பராகக் கொண்டனர்; தம் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளச் செய்தனர். அவ்வையார் தொண்டைமானிடம் தூது சென்று, அதியமானுடன் நிகழ இருந்த போரைத் தடுத்தார். கோவூர்கிழார் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இவர்தம் பகைமையை ஒழிக்கப்பாடுபட்டார். கபிலர், பரணர் முதலிய புலவர்கள் பேகனது மணவாழ்க்கையைச் செம்மைப்படுத்தினர். தம் மக்கள் மீது போருக்கெழுந்த கோப்பெருஞ் சோழனைப் பொத்தியார் முதலிய புலவர்கள் தடுத்து நிறுத்தினர். தன் தமையனைக் கொல்ல விரும்பிய இளங்குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் அறவழிப் படுத்தினார். மூவேந்தரும், சிற்றரசரும் பூசலின்றி—போர் இன்றி—ஒற்றுமையாக வாழ்தல் வேண்டும் என்று புலவர் பெருமக்கள் பாடுபட்டனர். தமிழ் வேந்தரும் இயலும் வரை அப்பெரு மக்களின் அறிவுரைகளைக் கேட்டனர்.

புலவர்கள் பிழை கண்டவிடத்து அதனை எடுத்துக் கூறி அவ்வப்போது அரசர்களைத் திருத்தி வந்தனர். குடிகளை வருத்தி வரி வாங்குதல் கூடாது, நீர் தேங்கி யுள்ள சிறிய குட்டையைப் பெரிய குளமாக மாற்ற வேண்டும், எப்பொழுதும் மறக்கள வேள்வியே செய்தல் ஆகாது, அறக்கள வேள்வியிலேயே ஈடுபடுதல் வேண்டும், சினம் கொள்ளலாகாது—என்பன போன்ற அறிவுரைகளைப் பிசிராந்தையார், மாங்குடி மருதனார் முதலிய புலவர் பெருமக்கள் சமயம் வாய்த்த போதெல் லாம் அறிவுறுத்தி வந்தனர். தமிழ் மன்னரும் அவ்வறி வுரைகளுக்குச் செவி சாய்த்தனர்.

பாரியின் பொருட்டுக் கபிலர் பறம்பு மலையில் அகப்பட்டுக் கொண்டதும் உயிர் துறந்ததும் சிறந்த தியாகம் அல்லவா? அதியமானுடன் அவ்வையார் போர்க்களம் சென்று அவனை ஊக்கப்படுத்தி வந்தது செயற்கரிய செயலன்றோ? கோப்பெருஞ் சோழனோடு பொத்தியார் வடக்கிருந்து உயிர் நீத்தது பாராட்டத்தகும் பண்பன்றோ? உள்ள நட்பின் காரணமாகவே பிசிராந்தையார் அச்சோழனோடு வடக்கிருந்தமை பெரிதும் பாராட்டத் தக்கதன்றோ? புலவர்கள் வள்ளல்கள் இறந்த பொழுது ஒன்று கூடிப் புலம்பிய பாக்கள் பல. பயனுள்ளபோது கூடி, இறக்கும் தறுவாயில் பிரிதல் பலரது இயல்பு. ஆனால், உயர்ந்த பண்பாடுடைய புலவர் பெருமக்கள் இன்பத்திலும் துன்பத்திலும் தங்கள் வள்ளல்களோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதை மேற்சொல்லப்பெற்ற சான்றுகள் விளக்கி நிற்கின்றன.

## மன்னர் ஒழுக்கம்

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியன்**, "யான் என் பகைவரை வெல்லேனாயின், மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக; குடிகள் பழி தூற்றும் கொடுங்கோலன் ஆகக்கடவன்," என்று சூளுரைத்தான்.

**பூத பாண்டியன்**, "யான் என் பகைவரை வெல்லேனாயின், என் உயிர்க்குயிரான மனைவியை விட்டுப் பிரிவேனாகுக; குடிமக்களைக் காக்கும் பொறுப்பு வாய்ந்த அரச மரபிலிருந்து மாறிப் பிறப்பேனாகுக," என்று சூளுற்றான்.

சோழன் **நலங்கிள்ளி**, "யான் என் பகைவரை வெல்லேனாயின், என் மாலை பொது மகளிர் மார்பில் துவள்வதாக," என்று சபதம் செய்தான்.

சேரன் செங்குட்டுவன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் தன் தவற்றை உணர்ந்து உயிர் விட்டான் என்பதைக் கேட்டவுடன் சாத்தனாரை நோக்கி, "மழை பெய்யாவிடினும், உயிர்களுக்குத் துன்பம் நேரினும், அரசன் மீதே குற்றம் சுமத்தப்படும். நாட்டைப் பாது காக்கும் அரசப் பொறுப்பு மிகவும் இரங்கத்தக்கது," என்று வருத்தத்தோடு கூறினான்.

இவையனைத்தும் எவற்றை உணர்த்துகின்றன? தமிழ் மன்னர் தம் மனைவியர்க்குத் துரோகம் செய்யா தவர், குடிகளைப் பாதுகாப்பதிலே கண்ணும் கருத்து மாய் இருந்தவர், புலவர் பெருமக்களை நன்கு மதித்தவர் என்பன போன்ற சிறந்த பண்புகளை அறிவிக்கின்றன என்னலாம்.

மணிமேகலை மீது காமவெறி கொண்ட உதய குமரன் கொல்லப்பட்டான் என்பதை அறிந்தவுடன், அவன் தந்தையான நெடுமுடிக்கிள்ளி, "சோழ அரசனது பட்டத்திற்குரிய மகன் காமவெறியால் கொல்லப்பட் டான் என்ற செய்தி சேர, பாண்டியர்க்கு எட்டு முன்னரே அவனுடலை எரித்து விடுங்கள்," என்று கூறினான். இஃது அம்மன்னனது சிறந்த ஒழுக்கத்தை உணர்த்துகிறதன்றோ?

காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட ககந்தனுக்கு ஆண்மக்கள் இருவர். அவருள் ஒருவன் ஆற்றில் நீராடிவிட்டு வந்த மங்கை ஒருத்தியைக் காமக் குறிப்பு டன் நோக்கினான். இதனை உணர்ந்த ககந்தன் அவனை வாளால் வெட்டினான். மற்றொரு மகன் வேறொரு பெண்ணைக் கண்டு மயங்கித் தன் மாலையை எடுத்துக் கழுத்தில் போட முனைந்தான். இதனையறிந்த ககந்தன் அவனையும் வாளால் வெட்டினான். பட்டத்திற்குரிய அவன் மக்கள் இருவரையும் அவர்கள் ஒழுக்கம் தவறிய

காரணத்தால், வாளால் வெட்டிய தந்தையின் ஒழுக்கத்தை என்னெனப் பாராட்டுவது!

## இல்வாழ்க்கை

அக்காலத் தமிழர் இல்வாழ்க்கை பெரும்பாலும் காதல் மணத்தை அடிப்படையாகக் கொண்டது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பெரும்பகுதி காதல் மணச் செய்திகளையே கூறுவதாக அமைந்துள்ளது. சங்கப் புலவர் பாக்கள் பல இவ்வகப் பொருள் பற்றியனவாகவே அமைந்திருக்கின்றன. எனவே, இல்லற இன்பத்துக்கு அடிப்படையாக அக்காலத் தமிழர் களவு மணத்தைக் கொண்டனர் என்பது தெளிவு.

இத்தகைய காதல் மணம் நிகழ்ந்த போதிலும், பரத்தமை நாட்டில் இருந்து வந்தது. ஆடல் பாடலில் வல்ல பொதுப் பெண்டிரும், ஒருவனை அண்டி வாழும் காமக்கிழத்தியரும் அக்காலத்தில் இருந்தனர். ஆடவர் சிலர் ஓரோவழி இப்பரத்தையர்பால் ஈடுபடுதல் உண்டு. இதனுல் மனைவியர் ஊடல் கொள்ளுதலும் உண்டு. கணவரை நயமான முறையில் நல்வழிப்படுத்தும் காரிகையரும் இருந்தனர். "இப் பிறப்பில் உன்னேடு பொருந்த வாழ்தல் இயலவில்லையாயினும், அடுத்த பிறவியிலேனும் உன்னேடு சேர்ந்து வாழ விரும்புகிறேன்" என்று நயமாகக் கூறிக் கணவரைத் திருத்திய மனைவியர் பலர்; "நீ பரத்தையரிடம் உறைவதால் இறந்துவிடலாம் என்று கருதுகிறேன். ஆனல் உன்னைப்பற்றிய நினைவு அடுத்த பிறவியில் உண்டாகாமற் போகுமோ என்ற அச்சத்தால் இறக்க அஞ்சுகிறேன்" என்று கூறித் திருத்திய பெண்மணிகளும் இருந்தனர். "தை மாதத்துக் குளத்தில் பலரும் நீராடுவர்; அதுபோல் பலரோடும் முயங்கும் பரத்தையின் மார்பிலே தோய்ந்த நினது மார்பகத்தை யான் தழுவேன்" என்று கண

வனுக்குப் பரத்தையர்பால் அருவருப்பை உண்டாக்கித் திருத்திய மகளிரும் உண்டு. இத்தகைய நல்லுரைகளாலும் இடிப்புரைகளாலும் கற்புடை மகளிர் தம் கணவரைத் திருத்தினர்.

விருந்தோம்பல் இல்வாழ்வானது சிறந்த கடமையாகக் கருதப்பட்டது. கணவன் இல்லாதபோது மனைவி விருந்தோம்பலைக் கவனித்து வந்தாள். பௌத்த சமண சமயங்களைச் சேர்ந்த குடி மக்கள் அவ்வச் சமயத் துறவிகளை உண்பிப்பதில் இன்பம் கண்டனர்; அத் துறவிகள் வரையறுத்த ஒழுக்கத்தின்படி வாழ்ந்து வந்தனர்; அடைக்கலப் பொருளைத் தம் உயிர் போலப் பாதுகாத்தனர்.

தமிழர் கடவுளுண்மையை அறிந்தவர்கள்; பிள்ளை பெற்ற தாய்மார் தம் குழந்தைகளை ஏந்திக்கொண்டும், வழிபாட்டுப் பூ முதலியவற்றை எடுத்துக் கொண்டும் கணவருடன் கோவில்கட்குச் சென்றனர்; சமயச் சான்றோர் அறிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர். இன்றும் இவை பின்பற்றப்படுகின்றன.

மாதவி பல கலைகளில் வல்லவள்; பொது மகள் மரபிலே பிறந்தவளாயினும் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் உடையவள்; ஒருவனோடு வாழ்தலையே விரும்பியவள்; பரத்தமையை வெறுத்தவள்; தன் மகளான மணிமேகலையை மாதவி சமயச் சார்புடையவளாக மாற்றி விட்டாள்.

## வீரத்தாய்மார்

தமிழ்ப் போர் வீரர்களைப் பெற்றெடுத்த தாய்மார்கள் உயர்ந்த நாட்டுப் பற்றும் வீர உணர்ச்சியும் உடையவர்கள். தனது முதுமையைக் கருதித் தன்னை விட்டு அகலாது இருந்த தன் ஒரே மைந்தனைத் தேற்றி, வயது

முதிர்ந்த தாய் ஒருத்தி போர்க்களம் அனுப்பினுள்; "மார்பில் காயம்பட்டு இற; முதுகில் காயம்பட்டு வராதே" என்று கூறி அனுப்பினுள். அவன் முதுகில் காயம்பட்டு இறந்தான் என்று எவனே கூறியதைக் கேட்ட தாய் சினந்து வீட்டிலிருந்த வாளைக் கையிலேந்தி. "என் மகன் முதுகில் காயம்பட்டு இறந்திருப்பின், அவ னுக்குப் பால் சுரந்த மார்பகத்தை அறுப்பேன்" என்று சூளுரைத்துப் போர்க்களம் சென்ருள்; தன் மகன் மார் பில் காயம்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டு, அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

முதலில் நடைபெற்ற போரில் ஒரு பெண்மணி தன் கணவனை இழந்தாள். பின்பு மற்ருெரு போர் நடை பெற்றது. அவள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தன் மகனை யழைத்து, அவனுக்குப் போருடை தரித்து, வாளைக் கையில் கொடுத்துப் போர்க்களத்திற்கு அனுப்பினுள்.

இத்தகைய வீரத் தாய்மார்கள் வாழ்ந்த காலமே சங்க காலம். நாட்டுப் பற்றும் வீர உணர்ச்சியும் மிக் குடைய இத்தாய்மார்க்குப் பிறந்த பிள்ளைகள் வீரத்தில் சிறந்திருந்தனர் என்பதைக் கூறவும் வேண்டுமோ? தமிழ் நாட்டு வீரர்கள் முன் வைத்த காலைப் பின் வையா தவர். ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு போர் செய்து உயிர் துறப்பதையே கடமையாகக் கொண் டனர். "மரத்தில் கட்டப்பெற்றிருந்த மத்தளம் காற்ற டிக்கும்பொழுது கிளைகள் உராய்தலால் ஓசையை உண் டாக்கும். அவ்வோசையைப் பகைவர் படையெடுக்கும் ஓசை என்று எண்ணித் தமிழ் வீரர் கொதித்து எழுவர்" என்று புறநானூற்றுப்பாடல் ஒன்று குறிக்கின்றது. போர்க் களத்தில் மார்பில் உண்டாகும் புண் 'விழுப்புண்' என்று

கூறப்படும். தமக்கு விழுப்புண் படாத நாட்கள் தமது வாழ்க்கையில் பயன்படாத நாட்கள் என்று வீரர்கள் கருதினர். இது திருக்குறள் தெரிவிக்கும் செய்தியாகும். தம் குடியிற் பிறந்த பெண்ணை அவள் விருப்பத்துக்கு மாறாக முடியுடை வேந்தரே பெற நினைப்பினும், வீரர் விட்டுக்கொடார்; அதற்காகத் தூது வந்தவரை அவமதித்து அனுப்புவர்; தம் உயிருள்ளவரையில் அத்தகைய திருமணத்துக்கு உடன்படார்.

வீரர்கள் தங்கள் அரசனிடம் பேரன்பு கொண்டவர்கள். அரசன் வாழவேண்டுமென்று தம் வழிபடு கடவுளை வணங்கினர். சிலர் அரசனது நல்வாழ்விற்காகத் தம் உயிரையே பலிகொடுப்பதாக வேண்டிக் கொண்டதும் உண்டு. தங்கள் தலைகளை அரிந்து அத்தெய்வத்திற்குக் காணிக்கையாக அளித்த வீரர்களும் உண்டு. தமிழ் வீரர்களின் நாட்டுப்பற்றையும், அரசப்பற்றையும், மான உணர்ச்சியையும், வீர உணர்ச்சியையும் உணர்த்தும் பாக்கள் பலவாகும்.

இத்தகைய வீரர் போர்க்களத்தில் இறந்தவுடன், இவர்களுடைய ஆவியற்ற உடம்புகளைத் தழுவி உயிர் விட்ட பத்தினிமார் பலராவர். செயற்கரிய செய்து இறந்த வீரர்களுக்கு அரசர்கள் கல் நடுதல் உண்டு. அக்கல்லில் இறந்த வீரனது பெயரும் பீடும் உருவமும் செதுக்கி வீரர் வழிபடுவர். அவன் நிகழ்கால வீரர்க்கும் வருங்கால வீரர்க்கும் எடுத்துக்காட்டாக மதிக்கப்பட்டான். இத்தகைய வீரக்கற்கள் சங்ககாலத் தமிழகத்தில் மிகப் பலவாக இருந்தன என்பதைப் பழம்பாடல்கள் தெரிவிக்கின்றன.

இக் கல்நடுதல் தேசிய விழாவாகக் கருதப்பட்டது. வீரரது உருவம் பொறிக்கத்தக்க கல்லைக் காணுதல், அதனை நன்னீரில் நீராட்டுதல், அதில் வீரரது உருவத்

தைப் பொறித்தல், அவனது பெயரும் பீடும் எழுதுதல். அதனை அவன் இறந்த இடத்தில் அல்லது அவன் உடலை எரித்த இடத்தில் நடுதல், அதற்கு வழிபாடு செய்தல் என்பன முறைப்படிக் கையாளப்பட்டன. இது பற்றிய விதிகள் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கல்லாக நின்ற அவ்வீரனை அவன் குடும்பத்தினரும் பிற வீரரும் வழிவழியாகத் தொழுது வந்தனர்.

# 13. தமிழர் பண்பாடு II

## அறம்

திருவள்ளுவர் 'அறத்துப்பால்' என்ற தலைப்பில் அறவிதியை விரிவாகக் கூறியுள்ளார். அஃது இல்லறமென்றும் துறவறமென்றும் இருவகையாகும். இல்லறத்தார் செய்யும் கடமைகள் இன்னவை, துறவறத்தார் தகுதி இன்னவை என்று அறத்துப்பால் விளக்குகின்றது. இல்வாழ்க்கை அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டும்; கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக மனைவி அமைதல் வேண்டும்; மக்கள் பெற்றோர்களுக்கு நற்பெயர் தேடித் தரல் வேண்டும்; விருந்தோம்பல் இல்லறத்தாரின் சிறந்த கடமை; இல்லறத்தார் இனியவற்றையே கூறல் வேண்டும்; ஒருவர் செய்த நன்றியை மறத்தலாகாது; எதனிலும் நடுவு நிலைமை தவறலாகாது; ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகும்; பிறனில் விழையாத ஒழுக்கம் தேவை; பொறுமை வேண்டும்; அழுக்காறுகொள்ளல் ஆகாது; பிறர் பொருளை விரும்பலாகாது; புறங்கூறல் ஆகாது; பயனற்ற சொற்களைப் பேசலாகாது; தீய செயல்களைச் செய்ய அஞ்சவேண்டும்; உலக நடையினை அறிந்து ஒழுகுதல் வேண்டும்; ஈகைப் பண்பு தேவை; புகழ்பெற வாழ்வதே வாழ்வு; அருளுடையவராக வாழ்தல் வேண்டும்; புலால் உண்ணலாகாது; தீயவரோடு உறவு கொள்ளலாகாது; பிறர் பொருளைக் கவர்தல் ஆகாது; வாய்மை உடையவராக இருத்தல் வேண்டும்; கோபத்தை அடக்குதல் வேண்டும்; பிறர்க்குத் தீமை செய்யலாகாது; உயிரைக் கொல்லுதல் ஆகாது; யாக்கை

நிலையாமையை உணர்தல் வேண்டும்; உள்ளத் துறவு வேண்டும்; மெய்ப்பொருள்களை அறிதல் வேண்டும்; அவா அறுத்தல் வேண்டும்; ஊழைப்பற்றிய உண்மைகளை அறிதல் வேண்டும். இவை பற்றித் திருவள்ளுவர் 380 குறட்பாக்களில் பல செய்திகளைக் கூறியுள்ளார். இவை யனைத்தும் அக்காலத் தமிழரது உயர்ந்த பண்பாட்டை உணர்த்தும் அல்லவா?

தமிழர் நீதிமன்றத்திற்கு அறக்களம் என்று பெயரிட்டனர். நீதிபதிகள் அறக்களத்து அந்தணர் என்று பெயர் பெற்றனர். திக்கற்றவர், நோயாளர், குருடர். முடவர் முதலியோர்க்கு இலவச உணவு உதவிய இல்லம் 'அறக் கூழ்ச்சாலை' எனப்பட்டது. மணிமேகலை அமுத சுரபியின் உதவியால் அறம் செய்தாள் என்று மணிமேகலை என்னும் காப்பியம் கூறுகிறது.

தமிழர் போரிலும் அறத்தைக் கையாண்டனர். ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பிய அரசன் முதற்கண் அந்நாட்டு ஆநிரைகளைக் கவர்தல் மரபு. அவை போரில் கொல்லப்படலாகாது என்ற அறவுணர்ச்சியே இதற்குக் காரணம். சில சமயங்களில் பசுக்களைக் கவர்ந்த பிறகு, "குற்றமற்ற பார்ப்பனர், பெண்கள், நோயாளர், பிள்ளை பெறுதவர், முதியவர் ஆகியோர் இந்நாட்டை விட்டு அகலுங்கள். நாங்கள் படையெடுக்கப் போகிறோம்" என்று முரசறைந்து அறிவிப்பது வழக்கம். இது மிகச் சிறந்த பண்பாடு அல்லவா?

## கொடை

இப்பிறவியில் நல்லதைச் செய்தால் அடுத்த பிறவி யில் நல்ல நிலையை அடையலாம் என்ற எண்ணத்தோடு அறம் செய்வதே பெரும்பாலோர் கொள்கை. இது

ஒன்று கொடுத்து மற்றொன்று பெறும் வணிகமுறை போன்றது. பயன் கருதிச் செய்யப்படும் கொடை அருள் உணர்ச்சியால் உண்டாவதன்று.

முல்லைக்கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பு இல்லாது காற்றால் அலைப்புண்டபோது பாரி வள்ளலின் மனம் உருகியது. அவன் தேரை அக்கொடி படர்வதற்குத் துணையாக வைத்துக் கால் கடுக்க நடந்து சென்றான். மயிலின் ஆட்டத்தைக் கண்டு, அது குளிரால் நடுங்குகிறது என்று எண்ணிப் பேகன் தான் போர்த்திருந்த போர்வையை அதன் மேல் வீசிச் சென்றான். பாரி வள்ளல் புலவர், பாணர், கூத்தர் என்ற வறுமையுற்ற அறிஞருக்குத் தன் முந்நூறு ஊர்களையும் பரிசாக அளித்து விட்டான். ஆய் வள்ளல் கொடுக்க இயலாத தன் மனைவியின் நகை ஒன்று தவிர மற்ற எல்லாவற்றையும் புலவர் பெருமக்களுக்கு வழங்கினான். நடுக் காட்டில் புலவரது குடும்பத்தைக் கண்ட நள்ளி என்னும் வள்ளல் தன்னை இன்னானென்று அறிவியாமலேயே, அவர்களுக்கு விருந்திட்டான்; தான் அணிந்திருந்த விலையுயர்ந்த நகை ஒன்றையும் அளித்தான்; "யான் இந்த இடத்தில் இவ்வளவே செய்தல் முடிந்தது; பொறுத்தருள்க" என்று கூறி அகன்றான். இவ்வாறு தன் பெயரையும் அறிவியாமலே அறிஞர்க்கும் எளியர்க்கும் வேண்டுவன நல்கிய வள்ளல்கள் பலர் சங்க காலத்தில் வாழ்ந்தனர்.

கருநெல்லிக்கனியை உண்பவர் நீண்ட நாள் உடல் நலம் பெற்றிருப்பார் என்பதை நன்கு அறிந்திருந்தும், அதியமான் அதனைத் தான் உண்ணாது, அவ்வையாரை உண்ணும்படிச் செய்தான். இவ்வாறு அருளுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பேரரசரும் சிற்றரசரும் செய்த அறங்கள் பலவாகும். அவர்களது கொடையின் அளவு அவர்களது மனவிரிவின் அளவைப் பொறுத்

திருந்தது. இத்தகைய கொடைத்திறனே தமிழை வாழ்வித்தது என்பது மிகையாகாது.

## கடமையுணர்ச்சி

"மகனைப் பெற்றுச் சமுதாயத்திற்கு வழங்குதல் எனது கடமை; அம்மகனைச் சிறந்த அறிஞனாக்குவது தந்தையின் கடமை; அவனை நாட்டுக்கு ஏற்ற குடிமகனாக்குவது அரசனது கடமை; அவனுக்குப் போர்க் கருவிகளைச் செய்து தருதல் கொல்லனது கடமை; போரில் சிறந்த வீரம் காட்டுதல் மகனது கடமை" என்று ஒரு தாய் கூறியதைப் **புறநானூற்றுப்** பாடல் ஒன்று தெரிவிக்கிறது. அக்காலத் தாய்மார் பெற்றிருந்த அறிவு நலம் இதிலிருந்து பெறப்படுகிறதன்றோ? இத்தகைய கடமையுணர்ச்சி சிறந்த பண்பாடுடைய மக்களிடமே காணப்படுவதாகும் என்பதில் ஐயமுண்டோ?

## உயர்ந்த கருத்துக்கள்

(1) "எந்த ஊரும் எமது ஊரே; எல்லோரும் எம்முடைய சுற்றத்தார். (2) ஒருவனுக்குக் கேடோ ஆக்கமோ வருவது அவனாலேயே தவிர பிறரால் அன்று. (3) சாதல் என்பது புதியதன்று; கருவில் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது. ஆதலால் வாழ வெறுப்பு வந்தபோது, இது கொடியது என்று எண்ணவுமில்லை. (4) பேரியாற்று நீரின் வழியே செல்லும் மிதவை போல் நமது அரிய உயிர் ஊழின் வழிப்படும் என்பதை அறிஞர் நூலால் தெரிந்திருக்கிறோம். ஆகவே, நாம் நன்மையால் மிக்கவரை மதிப்பதும் இல்லை; அவ்வாறே நன்மையால் சிறியோரைப் பழித்தலும் இல்லை" என்று **கணியன் பூங்குன்றனார்** புகன்றுள்ளார். இவ்வுயரிய கருத்துக்கள் தமிழ் மக்களது உயர்ந்த மன நிலையை உணர்த்துவனவாகும்.

நாட்டில் நல்லவர் மிகுந்திருத்தல் வேண்டும்; உலகம் நாடாக இருப்பினும் அல்லது காடாக இருப்பினும், நல்லவர்கள் இருக்கும் இடம் நல்லதாகவே இருக்கும் என்பது சங்ககாலச் சான்றோர் கருத்து.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

—புறநானூறு

முனிவர்கள் மழித்தலும் நீட்டலும் செய்வதைவிட ஒழுக்கத்தில் உயர்ந்திருத்தலே சாலச் சிறந்தது என்று வள்ளுவர் வற்புறுத்தினார்.

## புலவர் பண்பாடு

தமிழ்ப் புலவர்கள் தாம் வாழ்ந்து பிறரையும் வாழ்விப்பவர்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. கோவலனும் கண்ணகியும் இல்லற இன்பம் துய்த்தனர் என்பதை இளங்கோவடிகள் வெளிப்படையாகக் கூறாமல் சிறந்த பண்பாட்டு முறையில் நின்று,

"தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலில்,"

திளைத்தனர் என்று கூறியுள்ளார். பெரிய புராணம் செய்த சேக்கிழார் பெருமான், ஏனாதி நாயனார் தன் பகைவனோடு வாட்போர் செய்யும்போது அப்பகைவன் அவரை வாளால் வெட்டினான் என்பதைக் கூறவும் நாணினவராய்,

"நினைந்தஅப் பரிசே செய்தான்"

என்று நயம்படக் குறித்தனர். திருநீலகண்ட நாயனார், மனைவியிருந்தும் பொது மகளிடம் சென்று வந்ததைக் குறிப்பிட விரும்பிய சேக்கிழார்,

"இளமை மீதூர இன்பத் துறையினில் எளியர் ஆனார்"

என்று குறித்திருத்தல் நோக்கத்தக்கது. இவ்வுயரிய பண்பாட்டு முறையைப் பின்பற்றிய கல்வியிற் சிறந்த கம்பரும், "நாட்டை வேண்டுமாயின் உன் மகன் ஆளட்டும்; மற்றொன்றை (இராமன் காடு செல்ல வேண்டும் என்பதை) மறந்து விடு" என்று தயரதன் சொன்னதாக,

"மண்ணே கொள் நீ; மற்றையது ஒன்றும்மற என்றான்"

என்று கூறியிருத்தல் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

சிலப்பதிகார காவியம் செய்த இளங்கோவடிகள் வாழ்த்துக் காதையுள் காவியம் படிப்பவர்க்குச் சில அறிவுரைகள் கூறியுள்ளார்.

"ஆசையையும் துன்பத்தையும் அகற்றுங்கள்; கடவுளை உணருங்கள்; உணர்ந்தவரைப் போற்றுங்கள்; பொய் பேச அஞ்சுங்கள்; புறங் கூறுதீர்கள்; புலாலை நீக்குங்கள்; உயிர்க்கொலை அகற்றுங்கள்; தானம் செய்யுங்கள்; தவம் பல செய்யுங்கள்; பிறர் செய்த நன்றியை மறவாதீர்கள்; தீ நட்பை இகழுங்கள்; பொய்க்கரி புகலாதீர்கள்; சான்றோர் நன்மொழிகளைக் கேளுங்கள்; அறநெறியாளர் அவையை நாடுங்கள்; பிறன் மனைவியை விரும்பாதீர்கள்; எவ்வுயிர்க்கும் பிழை செய்யாதீர்கள்; அறநெறியைக் கைவிடாதீர்கள்; கள், களவு, காமம், பொய், பயனில சொல்லுதல் இவற்றை விடுங்கள்; இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையற்றவை; இருக்கும் வரையில் நல்லதையே செய்யுங்கள்; அது தான் உயிருக்கு உறுதுணையாவது" என்று கூறியிருத்தல் அடிகளது உயர்ந்த பண்பாட்டை உணர்த்துவதாகும்.

"உன்னைச் சேர்ந்தவர்க்கும், நீ அன்பு காட்டும் மக்கட்கும், சுற்றத்தார்க்கும், நமக்கு உதவி செய்தவர்க்கும்,

நான் குமணனிடம் பரிசிலாகப் பெற்ற செல்வத்தை உதவு; அது பற்றி என்னைக் கேட்க வேண்டா; நமக்கு இச்செல்வம் பல நாள் வருமே என்று கவலைப்படாதே" என்று மனைவியிடம் கூறிய புலவர் பெருஞ்சித்திரனரது பரந்த மனப்பான்மையை என்னென்பது!

உயர்ந்த கல்வியும் சிறந்த ஒழுக்கமும் பரந்த நோககமும் கொண்ட புலவர் பெருமக்கள் ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? மக்கள் எப்படி இருக்க வேண்டும்? எது உரிமை வாழ்க்கை? — என்பன போன்ற வற்றை வரையறுக்கின்றனர். அவர்தம் அறிவில் உருவாகிய அமைப்பு முறை உலகத்தில் அமையவில்லை. அதனல் அவர்கள் தங்கள் நூல்களில் தங்கள் படைப் பாகத் தாங்கள் கருதியவற்றைப் படைத்துவிடுகின்றனர். இத்தகைய படைப்பைக் கம்பர் தமது இராமாயண நூலில் படைத்துள்ளார்.

கோசல நாட்டில் குற்றம் ஒன்றும் இல்லை; அதனல் எமன் இல்லை. எல்லோரும் தத்தம் மனதில் நன்கு சிந்தித்துச் செயல் புரிவதால் கோபம் என்பது இல்லை; நல்ல அறங்கள் செய்வது தவிர வேறு ஆற்றல் இல்லாத படியால் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு இல்லை" என்று கம்பர் அழகாக உரிமை வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுகின்ருர்.

"கோசல நாட்டில் வறுமை என்பது இல்லை; அதனல் ஈகை என்பதும் இல்லை. கோசல நாட்டினர்க்குப் பகைவர் இல்லை; அதனல் அவர்களிடம் வீரமும் காணப் படவில்லை. பொய் என்பது அங்கு இல்லை; அதனல், உண்மை என்பதும் அங்குக் காணப்படவில்லை. எல்லார்க்கும் கேள்வியறிவு பொருந்தியிருந்தது; அதனல் அங்கு அறியாமை இல்லையாம்."

என்று மக்களது உரிமை வாழ்க்கையை நன்கு விளக்கியுள்ளார். சிறந்த அரசன் ஆட்சி புரியும் நல்ல நாட்டில் குடிமக்கள் தங்களை உயர்ந்த பண்பாடுடைய மக்களாக ஆக்கிக்கொண்டு இவ்வாறு நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதன்றோ கம்பரது விருப்பம்!

## இன்ப வாழ்க்கை

**பிசிராந்தையார்** பல ஆண்டுகள் உலகில் வாழ்ந்தவர். அவருக்குத் தலையில் நரையில்லை. அதனைக் கண்டு புலவர்களே வியந்தனர். அதற்குரிய காரணத்தை அறிய அவாவினர். புலவர் நகை முகத்தோடு அவர்களைப் பார்த்து, "(1) என் மனைவி இல்வாழ்க்கைக்கு ஏற்ற குணங்களால் மாட்சிமைப்பட்டவள்; (2) என் மக்களும் குணங்களாற் சிறந்தவர்; (3) என் வேலையாட்களும் அத்தகையவரே; (4) யான் வாழும் ஊரில் கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்த சான்றோர் பலராக வாழ்கின்றனர்; (5) நாடாளும் மன்னன், அறநெறியில் நடக்கின்றான்; இவ்வைந்து காரணங்களாலும் என் தலையில் நரை தோன்றவில்லை" என்று கூறினார். இதிலிருந்து இன்ப வாழ்வுக்குத் திறவுகோல் எது என்பதைப் புலவர் விளக்கி விட்டார் அல்லவா?

## பிறர் நுழைவால்

சங்க காலத்தில் பௌத்தரும் சமணரும் வட நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்தனர்; "உயிர்க் கொலை கூடாது — புலாலை உண்ணலாகாது — குடி ஆகாது— எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணுதல் வேண்டும்— குருடர், செவிடர், முடவர், அநாதைகள் இவர்களுக்கு உதவ வேண்டும்" என்று அருளுணர்ச்சியை மிகுதியாக ஊட்டினர். அவ்வறிவுரைகளையே நாம் திருக்குறளிலும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காண்கின்றோம்.

அவ்வறிவுரைகளை ஏற்ற தமிழ் மக்கள் சிலர் — சாதுவன் போன்றவர் — கள், புலால் முதலியவற்றை ஒழித்தனர்; சமண பௌத்த சமயங்களைச் சார்ந்தனர். கோவலன், இளங்கோவடிகள் முதலியோர் சமணராய் வாழ்ந்தனர்; சாத்தனார், சாதுவன், மாதவி, மணிமேகலை முதலியோர் பௌத்தராய் வாழ்ந்தனர். இத்தகைய சமய மாற்றத்தால் மக்களுடைய வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் முதலியன மாற்றம் பெற்றன. சிலர் தலையை மழித்தனர்; சிலர் முடியை வளர்த்தனர். அச்சமயத்தாருடைய சமய நூல்களில் இடம்பெற்ற பிறமொழிச் சொற்கள் தமிழ் நூல்களிலும் இடம் பெறலாயின. புத்த சாதகக் கதைகளும் சமணத் தொடர்பான கதைகளும் நாட்டில் வழங்கலாயின. இன்னா செய்யாமை, அருளுடைமை, கள் உண்ணாமை, புலால் மறுத்தல், பொய்யாமை, உண்ணா நோன்பிருத்தல் முதலியன பௌத்த சமணர் கூட்டுறவால் தமிழகத்தில் கால்கொண்டன.

வேதங்களைத் தம் சமய நூல்களாகக் கொண்ட வைதிகர் நுழைவால் வேதகால ஆரியச் சமய நூற் செய்திகள் தமிழர் சமய நூல்களிற் கலப்புண்டன. சிவன், உருத்திர சிவனாக மாற்றப்பட்டான்; முருகன் சுப்பிரமணியனானான்; கொற்றவை துர்க்கை ஆனாள். வடநாட்டுச் சமயத் தொடர்பான கதைகள் பல இத் தெய்வங்களோடு இணைக்கப்பட்டன. திருமாலின் அவதாரக் கதைகள் இடம் பெற்றன. இவற்றின் பயனாகச் சங்ககாலத் தமிழகத்தில் நகர மக்களிடம் தமிழர் சமயமும் வைதிக சமயமும் கலந்த ஒரு புதுச் சமயம் நிலவியிருந்தது என்று கூறுதல் பொருத்தமாகும்.

வைதிகர் கூட்டுறவால் விழாக்கள் பெருகின. நோன்புகள் வலுத்தன. காத்யாயினியை வழிபடும்

தைந் நீராடல் அல்லது அம்பா ஆடல் அல்லது மார்கழி நோன்பு என்பது வழக்கிற்கு வந்தது. மொட்டையடித்தல் சமண பௌத்தர்களால் வந்தது. துவராடை அணிதல் பௌத்தரது சேர்க்கையால் வந்தது. வைதிகர் கூட்டுறவால் தமிழ் ஊர்களினுடைய பெயர்கள் பிற்காலச் சோழர்க்குப் பிறகு விருத்தாசலம், வேதாரண்யம், சுவேதாரண்யம் என்பனபோல மாறிவிட்டன, திருக் கோவில் வழிபாடு வடமொழியில் இடம் பெற்றது. சுவாமி, அம்மன் பெயர்களும் வடமொழிப் பெயர்களாக மாறின; இன்றளவும் வடமொழிப் பெயர்களே இருந்து வருகின்றன.

சங்ககால அரசருள் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவர் வேதவிதிப்படி இராச சூய யாகத்தையும் பல்வேறு யாகங்களையும் செய்தனர் என்பதை, அவர்கள் பெயர்களை அடுத்துள்ள பெயர்களே அறிவிக்கின்றன. மாடல மறையோன் சேரன் செங்குட்டுவனிடம் செல்வாக்குப் பெற்ற மறையவனாக இருந்தான். இச்செய்திகள், தமிழரசர் சங்க காலத்திலேயே வைதிக நெறியில் வாழத் தலைப்பட்டுவிட்டனர் என்பதை அறிவிக்கின்றன அல்லவா?

சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்ட பல்லவர்கள் வேதியர்களைக் கூட்டம் கூட்டமாக வரவழைத்துத் தமிழ் நாட்டில் குடியிருத்தினர்; அவர்களுக்குப் பல ஊர்களை மானியங்களாக வழங்கினர்; வடமொழியாளர் கூட்டுறவால் சிவநெறியும் வேதநெறியும் மிகுதியாகக் கலந்தன. ஒவ்வொரு தலத்திற்கும் கதைகள் பெருகின. இவை பற்றிய விவரங்களைத் திருமுறைப் பாடல்களில் பரக்கக் காணலாம்.

இக்கதைகள் போலப் பிற்காலத்திலும் கதைகள் பெருகின.

சங்ககாலத் தமிழரசர் எல்லாச் சமயங்களுக்கும் ஒத்த மதிப்பு அளித்தனர். அதனால், அக்காலத்தில் சமயப் பூசல்கள் ஏற்படவில்லை, ஆனால், பல்லவர் காலத்தில் சமயப் பூசல்கள் ஏற்பட்டன. சமணமும் பௌத்தமும், சமணமும் சைவமும், சமணமும் வைணவமும் ஒன்றோடொன்று பூசல் இட்டன. இறுதியில் சமணரும் பௌத்தரும் வெல்லப்பட்டனர். சைவமும் வைணவமும் செல்வாக்குப் பெற்றன. சங்க காலத்திற்குப் பிறகு தமிழர் பண்பாடு தாழ்ந்து விட்டதற்கு இதைவிடச் சான்று வேறு வேண்டுமா?

பிற்காலச் சோழர், கங்கைக்கரை ஊர்களிலிருந்தும் வடநாட்டு ஊர்களிலிருந்தும் ஆகமங்களில் வல்ல குருக்களை வரவழைத்துத் தம் இராச குருக்களாக வைத்திருந்தனர்; வடநாட்டிலிருந்து வந்த சைவ சமயத் துறவிகளுக்கு மடங்களைக் கட்டிக் கொடுத்தனர்; நிலங்களை மானியமாக விட்டனர்; சாதிகளை வேரூன்றச் செய்தனர். இவர்கள் காலத்தில் சைவ வைணவ வேறுபாடுகளும், பூசல்களும் தலை தூக்கின. இராமாநுசர், தம் உயிருக்கு அஞ்சி ஒய்சல நாட்டிற்கு ஓடிவிட்டார். தில்லையில் இருந்த கோவிந்தராசர் சிலை கடலில் எறியப்பட்டது. சோழர் காலம் அரசியல் துறையில் சிறப்புற்று இருந்ததாயினும் சமுதாயப் பண்பாட்டில் மிக மிகத் தாழ்ந்திருந்தது என்பதை மேலே சொல்லப்பட்ட விவரங்கள் தெரிவிக்கின்றன அல்லவா?

சோழருக்குப் பின் முசுலிம்கள் படையெடுப்பு, விசய நகர வேந்தர் படையெடுப்பு, பின்பு பாமினி சுல்தான்களின் படையெடுப்பு, உள்நாட்டுப் பூசல்கள், கர்நாடக

நவாபு ஆட்சி, பாளையக்காரர் குழப்பம் முதலியன தமிழர் வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்டன என்னலாம். தமிழர் சிலர் முசுலிம்களாயினர். சாதிக் கொடுமை தலைவிரித்து ஆடியது. சங்க காலத்தில் ஒன்றுபட்டிருந்த தமிழ்ச் சமுதாயம் பல்லாயிரம் சாதிகளாகச் சிதறுண்டு விட்டது; அதனால் ஒற்றுமை இழந்தது. தமிழர் வாழ்க்கைத்தரம் குறைந்தது. இறுதியில் ஆங்கிலர் ஆட்சியில் பத்தாண்டுகளுக்கு முன்வரையில் இருத்தல் நேரிட்டது; அஃதாவது, தமிழர் ஏறத்தாழ 600 ஆண்டுகள் பிறர் ஆட்சியில் வாழ நேர்ந்தது. இந்த அறுநூறு வருட காலத்தில் அவர்களிடம் அடிமைத்தனம் வலுத்து, எண்ணத்திலும் பேச்சிலும் அடிமைத்தனம் ஓங்கியது; தன்மான உணர்ச்சி மறைந்தது; தமிழர் தங்கள் பழம் பெருமையையும் உரிமையையும் அறவே மறந்தனர்; எனவே, பண்பாட்டிலும் மிகமிகத் தாழ்ந்துவிட்டனர்.

## உரிமை இயக்கமும் உயர்வும்

ஆங்கில அறிவு தமிழர்க்கு உலக அறிவை ஊட்டியது. பிற நாடுகளில் அவ்வந்நாட்டு மொழியும் மக்கள் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை நம்மவர் அறிந்தனர்; அங்குச் சாதியறியாச் சமுதாயம் அமைந்து மக்கள் வலிமை மிகுந்தவர்களாய் விளங்குவதையும் அறிந்தனர்; இறைவன் படைப்பில் சாதிகள் இல்லையென்பதை உணர்ந்தனர்; தம் பழைய இலக்கியங்களை ஆராய்ந்தனர்; பழந்தமிழரது பெருமித வாழ்வை அறிந்தனர்; அவ்வாழ்வைப் புதுப்பிக்க விரும்பினர்.

அறவழியிலேயே நாட்டுக்கு உரிமை தேடவேண்டும் என்ற காந்தியடிகளின் கொள்கை மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தது. மக்கள் அந்நெறியையே பின்பற்றி நாட்டு உரிமைக்காக உழைத்தனர். தமது படைவலிமை,

மக்களின் உள்ள வலிமையை விடத் தாழ்ந்ததே என்பதை ஆங்கில ஆட்சியினரும் உணரும்படிச் செய்த பெருமை காந்தியடிகளையே சாரும். மறைந்த பண்பாடு அப்பொழுதுதான் மீண்டும் மலரத் தொடங்கியது. மக்கள் அதுகாறும் நம்மிடை இருந்த சாதி வேறுபாடுகளை மறக்கத் தலைப்பட்டனர். கல்வி யாவருக்கும் வாழ்வு அளிக்கத் தொடங்கியது. கற்றவர் எங்கும் சிறப்புப் பெற்று வருகின்றனர். பல நூறு ஆண்டுகளாக வேரூன்றியிருந்த மூடப்பழக்கவழக்கங்களும், தீண்டாமை, பெண்ணடிமை, அறியாமை, முதலியனவும் கதிரவனைக் கண்ட காரிருள்போலச் சிறிது சிறிதாக மறைந்து வருகின்றன. எல்லோரும் வாழவேண்டும் என்பதே உயர்ந்த பண்பாடு. அப் பண்பாட்டை நோக்கித் தமிழ்ச் சமுதாயம் இன்று சென்று கொண்டிருக்கிறது.

ஆர். கே. நூலகம்
மா___ரா___அரசு
சென்னை-600001

# டாக்டர் மா. இராசமாணிக்கனுர்
# நூல்கள்

| | | ரூ பை. |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி இலக்கிய வரலாறு | 7 00 |
| 2. | சைவ சமய வளர்ச்சி | 7 50 |
| 3. | தமிழக வரலாறு | 6 50 |
| 4. | தமிழக ஆட்சி | 4 00 |
| 5. | தமிழர் நாகரிகமும் பண்பாடும் | 4 50 |
| 6. | தமிழகக் கலைகள் | 4 00 |
| 7. | திருவள்ளுவர் காலம் | 1 00 |
| 8. | நாட்டுக்கு நல்லவை | 3 50 |
| 9. | இல்வாழ்க்கை (அச்சில்) | 6 00 |
| 10. | கால ஆராய்ச்சி | 5 50 |
| 11. | பெரியபுராண ஆராய்ச்சி (அச்சில்) | 10 00 |
| 12. | திருக்கோயில் கல்வெட்டுக்கள் (அச்சில்) | |
| 13. | இருபதாம் நூற்றுண்டு உரைநடை வளர்ச்சி (அச்சில்) | |

**பாரி நிலையம்**
59, பிராட்வே · சென்னை 1



Jacket Printed at Neo Art Press, Madras-2